இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 215 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆனி 15 வியாழக்கிழமை 29.06.2017

## விக்கி இனவாதி

இத்தாலியில் சாடினார் சரத் வீரசேகர எம்.பி.



கொழும்பு, ஜூன் 29
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரனை இனவாதி எனக் கடுமையாக விமர்சித்துள்ளார் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப் >> 23

தமிழர்கள் கடத்தல்;

## கைதான கடற்படை அதிகாரிக்கு பிணை

கொழும்பு, ஜூன் 29
கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில், 2009ஆம் ஆண்டு 11 தமிழர்கள் கடத்தப்பட்டு காணாமற்போகச் செய்யப்பட்ட வழக்கில் கைது >> 25

## வெளிநாட்டில் நடந்த உடன்பாட்டுக்கு அமையவே வித்தியா கூட்டுக் கொலை

தீர்ப்பாயத்திடம் பல தகவல்களை முன்வைத்தார் பதில் சட்டமா அதிபர்

யாழ்ப்பாணம், ஜூன் 29
"சுவிஸ் குமாரால் வெளிநாட்டில் செய்யப்பட்ட உடன்படிக்கைக்கு அமைவாகவே புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை செய்யப்பட்டார். சந்தேகநபர்கள் அனைவரும் உறவினர்கள். அவர்களின் கூட்டுத் திட்டத்துக்குள் மாணவி வித்தியா துரதிஸ்ட வசமா >> 25



## வடக்கு-கிழக்கை இணைக்கவே அரசு இனவாத நாடகம்

நாமல் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 29
கிழக்கு முஸ்லிம்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் வேற்றுமையை உருவாக்கி- கிழக்கு முஸ்லிம்களை வடக்கு-கிழக்குதமிழர்களுடன் ஒற்றுமைப்படுத்தி வடக்கு கிழக்கை >> 25

## மருத்துவர் சங்கத்துடன் பேச வேண்டியதில்லை

சைட்டம் குறித்து ராஜித விடாப்பிடி

கொழும்பு, ஜூன் 29
சைட்டம் எனப்படும் மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துடன், பேச்சுகளை நடத்த வேண்டிய அவ >> 25

# மூன்று மாத அமைச்சர்களாக அனந்தி, சர்வேஸ் நியமனம்

ஆளுநர் முன்பாக இன்று காலை பதவியேற்பர்





யாழ்ப்பாணம், ஜூன் 29
மூன்று மாத காலத்துக்கு அமைச்சர்களாக திருமதி அனந்தி சசிதரனையும், மாகாண சபை உறுப்பினர் க.சர்வேஸ்வரனையும், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நியமித்துள்ளார். வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே முன்பாக இருவரும் இன்று முற்பகல் 10 மணிக்குச் சத்தியப்பிரமாணம் மேற்கொண்டு அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்கவுள்ளனர்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையுடனும் பங்காளிக் கட்சிகளுடனும் பேசியே அமைச்சர்கள் நியமனம் குறித்து முடிவு எடுக்கப்படும் என்று >> 06

## மாணவர் தமதுவேலையை மட்டும் செய்ய வேண்டும்

சைட்டம் குறித்து அரசு கலந்துரையாடி தீர்மானம் எடுக்கும் என்கிறார் தயாசிறி

கொழும்பு, ஜூன் 29
சைட்டம் தொடர்பில் போராட்டங்களை மேற்கொள்ளும் மாணவர்கள் நாட்டின் எதிர்காலம் தொடர்பில் சிந்தித்துச் செயற்படவேண்டும் என்று விளையாட்டுத்துறை அமைச்சரும் அமைச்சரவை >> 06

## வித்தியாவின் தாயார் கண்ணீருடன் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஜூன் 29
புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கு விசாரணைகள் மேல் நீதிமன்ற நீதிபதிகள் 3பேர் அடங்கிய தீர்ப்பாயம் முன்னிலையில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நேற்று ஆரம்பமானது. வழக்கின் முதலாவது சாட்சியான வித்தியாவின் தாயார் சிவலோகநாதன் சரஸ்வதி தீர்ப்பாயம் முன்னிலையில் கண்ணீருடன் நேற்றுச் சாட்சியமளித்தார். >> 06

## சம்பந்தன், சுமந்திரன் மீது வடக்கு முதல்வர் தாக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 29
அரசுடன் சேர்ந்து இயங்கும் தமிழ் அரசியல்வாதிகள் சிலர் வடக்கு மாகாண சபையைக் குழப்புவதன் மூலம் தீர்வு விடயத்தில் தமிழ் மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்கு முயற்சிக்கின்றனர்.
இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச் >> 25

மகிந்த அமரவீர மகிழ்ச்சி

## மின்சாரக் கதிரை அபாயம் முற்றாக நீங்கிவிட்டதாம்

கொழும்பு, ஜூன் 29
தேசிய அரசு உருவாக்கப்பட்டதாலும் அரச தலைவர் மீது பன்னாட்டுச் சமுகம் நம்பிக்கை வைத்துள்ளதாலும் மகிந்த ராஜபக்ச எதிர்கொண்ட மின்சாரக் கதிரை அபாயம் முற்றாக நீக்கியுள்ளது என்று அமைச்சர் மகிந்த அமர >> 24

## சமரச முயற்சிக்குப் பங்கம் ஏற்படுத்தமாட்டார் விக்கி

அமைச்சர்கள் நியமனம் குறித்து மாவை.சேனாதிராசா நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 29
நாங்கள் மக்கள் முன்னால் பிளவுபட்டு நிற்க முடியாது. அதற்காகவே சமரச முயற்சி ஆரம்பிக்கப்பட்டது. சமரச முயற்சிக்குப் பங்கம் ஏற்படாமல் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நடவடிக்கை எடுப்பார் என்று நம்புகின்றேன்.
இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பி >> 25

## அமைச்சர்கள் வராவிடினும் அவர்கள் மீது விசாரணை

விக்கி விடாப்பிடி

யாழ்ப்பாணம், ஜூன் 29
"நான் நியமிக்கும் விசாரணைக்குழு முன்பாக இரு அமைச்சர்களும் முன்னிலையாகாவிட்டாலும், விசாரணை நடக்கும். அவர்கள் இல்லாமலே விசாரணை நடந்து முடிந்து, அந்த முடிவுகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்"
இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.
வடக்கு மாகாண சபையின் தனது ஆதரவு அணியுடன், முதலமைச்சர் நேற்று இரவு சந்திப்பு நடத்தினார். இந்தச் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
"நீங்கள் நியமிக்கும் விசாரணைக் >> 24

## முல்லைத்தீவுக்கு அமைச்சுப் பதவி வழங்காவிடின் பெரும் சிக்கல்

சிவாஜியும் சிவநேசனும் விக்கிக்கு எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 29
முல்லைத்தீவு மாவட்டத்துக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படாவிட்டால் விமர்சனங்கள் வரக்கூடும் என்று வடக்கு மாகாண முதலமைச்சரிடம், ஆளும் கட்சி உறுப்பினர்களான எம். >> 24

இரணைதீவு மீள்குடியமர்வு தொடர்பில்

## தீர்க்கமாக எதுவுமே கூறாது நழுவினார் அமைச்சர் ருவான்

கிளிநொச்சி, ஜூன் 29
போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இரணைதீவு மக்களை நேற்று நேரில் சந்தித்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன தீர்க்கமான பதில் எதனையும் அவர்களுக்கு வழங்கவில்லை. அரச தலைவருடன் பேசி இரு வாரங்களில் பதிலளிக்கின்றேன் என்று கூறிச் சென்றுள்ளார். >> 23



## பொலிஸார் மீது கும்பல் தாக்குதல்

தருமபுரம் பகுதியில் சம்பவம்

கிளிநொச்சி, ஜூன் 29
கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் இடம்பெற்ற கசிப்பு உற்பத்தியைப் பிடிக்கச் சென்ற பொலிஸார் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் உதவிப் பொலிஸ் பரிசோதகர் ஒருவர் படுகாயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் கல்லாறு பகுதியில் நேற்று பிற்பகல் 5 மணியளவில் இடம்பெற்றது.
"கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடை >> 24

சுமந்திரன் கொலை முயற்சி வழக்கில்

## சந்தேகநபர் சிறையில் தாக்கப்பட்டு ஊன்றுகோலுடன் மன்றில் முற்பட்டார்

சட்டத்தரணிகள் எதிர்ப்புத் தெரிவித்து நீதி அமைச்சுக்கு உடனடியாகவே கடிதம்

யாழ்ப்பாணம், ஜூன் 29
சுமந்திரன்கொலைமுயற்சிவழக்கிலுள்ள சந்தேகநபர் ஒருவர் சிறைச்சாலையில் மோசமாகத் தாக்கப்பட்டமைக்குக் கிளிநொச்சி நீதிமன் றில் அனைத்துச் சட்டத்தரணிகளும் நேற்றுக் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். தாக்கப்பட்டமைக்கு நீதிகோரிய சட்டத்தரணிகள் இது தொடர்பில் தமது கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி நீதி அமைச்சுக்கும் சிறைச்சாலை கள் ஆணையாளருக்கும் கடிதம் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தனர்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஆ.சுமந்திரனைக் கொலை செய்ய முயற்சித்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட சந்தேக நபர்களின் வழக்கு கிளிநொச்சி நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது. தாக்கப்பட்டதாகக் கூறப்பட்ட சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது,
சிறைச்சாலை அதிகாரிக >> 24



# அதிகாரப் பகிர்வு தொடர்பில் தீர்மானிப்பவர்கள் மக்களே

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 29
அதிகாரப் பகிர்வு தொடர்பான இறைமைஅதிகாரம்மக்களையே சாரும். அது தொடர்பில் மக்களே தீர்மானிக்க வேண்டும்.
இவ்வாறுதெரிவித்தார்தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க. உத்தேசஅரசமைப்புத்தொடர்பாக பண்டாரநாயக்க பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றசெயலமர்வில்கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது
புதிய அரசமைப்புத் திருத்தத்தில் பௌத்த மதத்துக்கான முன்னுரிமை நீக்கப்படாது. அதே சந்தர்ப்பத்தில் ஏனைய மதங்களின் சுதந்திரமும் உறுதிப்படுத்தப்படும்.
உத்தேச அரசியல் யாப்பு தொடர்பான இடைக்கால அறிக்கை எதிர்வரும் ஓகஸ்ட் மாத இறுதியில் வெளியிடப்படவுள்ளது. மக்களின் கருத்துக்களை உள்வாங்கியே சட்ட வரைபு தயாரிக்கப்படும்.
கலப்பு தேர்தல் முறை தொடர்பாக சிறு கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்திருந்தன. அதுதொடர்பில் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டியது அவசியம்.
சட்டவாக்கம், நீதித்துறை என்பவற்றின் அதிகாரங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவது அவசியம்.
- என்றார். (ற-ஐ)

# நியமனக் கடிதங்களை கையளித்த தூதுவர்கள்



கொழும்பு, ஜூன் 29
புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இலங்கைக்கான 4 தூதுவர்களும் இன்று முற்பகல்கொழும்புகோட்டையிலுள்ளஅரசதலைவர்செயலகத்தில்தமது நியமனக் கடிதங்களை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்தனர்.
டியுனீசியா, ஸ்பெயின் மற்றும் ஜோர்ஜியா சீஷெல்ஸ் நாடுகளின் தூதுவர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
நெஜமேடின் லகால் டியுனீசியாவின் தூதுவராகவும், ஜோஸ் ரமோ பரணனோ பெர்னாண்டஸ் ஸ்பெயினின் தூதுவராகவும், அர்ச்சில் டிஸுவாஸில் ஜோர்ஜியா நட்டு தூதுவராகவும் மற்றும் கொண்ட்ரட் மெடெரிக் சீஷெல்ஸ் நாட்டின் தூதுவராகவும் இலங்கையில் தமது கடமைகளை முன்னெடுக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த நிகழ்வில் அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்க, கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்ணாண்டோ ஆகியோரும் கலந்து கொண்டனர். (ற)

# கிளி. சுகாதாரத் தொண்டர்களின் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது



கிளிநொச்சி, ஜூன் 29
சுகாதார தொண்டர்களால் கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு முன்பாக ஆரம்பித்துள்ள கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று இரண்டாவத நாளாகவும் தொடர்ந்தது. "நாம் வடமாகாண ஆளுநரைச்சந்திக்கஉள்ளோம். அவர்எமக்குசுமுகமானபதிலை அளிக்காவிட்டால் எமது கவனயீர்ப்புப்போராட்டம் தீர்வுகிடைக்கும்வரைதொடரும். நாம்1992, 1997 ஆம்ஆண்டுகளில் இருந்து பலதரப்பட்ட கஷ்டங்களின் மத்தியில் தொண்டர்களாகக் கடமையாற்றினோம். எமக்கான நியமனங்களைச் சம்பந்தப்பட்டவர்கள் பெற்றுத் தாருமாறு கோரிக்கை விடுக்கின்றோம்" என்றுபோராட்டத்தில்ஈடுபட்டவர்கள் கண்ணீருடன் தெரிவித்தனர். அதேவேளை வவுனியா மாவட்டத்திலும் சுகாதாரத் தொண்டர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (ஐ)

# நீர்கொழும்பு மருத்துவமனையை நேரில் பார்வையிட்டார் மைத்திரி

கொழும்பு, ஜூன் 29
நீர்கொழும்பு மாவட்ட மருத்துவமனைக்கு அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன நேற்றுத் திடீர் பயணம்மேற்கொண்டார். மருத்துவமனையின் நடவடிக்கைகள் குறித்துஆராய்ந்து, டெங்குசிறப்புச் சிகிச்சைப்பிரிவுக்குப்பொறுப்பான மருத்துவருடனும்கலந்துரையாடலில் ஈடுபட்டார் என்று அரச தலைவர்ஊடகப்பிரிவுதெரிவித்துள்ளது.
நீர்கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில், டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையால், டெங்கு நோயாளர்கள் தங்கியிருக்கும் அறையின் வசதிகளை அதிகரிக்க விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரச தலைவர் இதன்போது அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார். அத்துடன் மருத்துவமனையின் ஏனைய விடயங்கள் குறித்தும் ஆராய்ந்து, தேவையான அனைத்து வசதிகளையும் வழங்குமாறு சுகாதார அமைச்சுக்கு ஆலோசனை வழங்கினார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# நாடு கடத்தப்பட்ட இலங்கையர்கள்

கொழும்பு, ஜூன் 29
சட்ட விரோதமாகப் பல்கேரியாவில் தங்கியிருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 32 இலங்கைக் குடிமகன்கள் சிறப்பு வானூர்தி மூலம் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர். இவர்களை இத்தாலிக்கு அனுப்பி வைப்பதாகக் கூறிய சட்ட விரோத ஆட்கடத்தல்காரர்கள் துருக்கியில் நிர்க்கதியாக்கினர் என்று தெரிவிக்கப்பட்டது. இத்தாலி செல்லலாம் என்ற நம்பிக்கையில் இவர்கள் பல்கேரியாவுக்குத் தப்பிச் சென்று, அங்கு தங்கியிருந்த போதே அந்த நாட்டு அரசால் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர். நாடு கடத்தப்படும் போது இவர்களுடன் பல்கேரிய அதிகாரிகளும் பயணித்துள்ளனர். அவர்களிடம் இலங்கையின் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

# சைட்டத்துக்கு எதிராக நேற்றும் போராட்டம்

கொழும்பு, ஜூன் 29
சைட்டம் நிறுவனத்துக்கு எதிராக கொழும்பில் நேற்றும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. பல்கலைக்கழக மாணவர்களுடன் அவர்களது பெற்றோர்களும் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். சைட்டம் தொடர்பான சர்ச்சை தொடர்ந்தும் நீடித்துவரும் நிலையில், சைட்டம் மருத்துவமனையை அரசு கையேற்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது. எனினும், இவ்வாறு கையேற்பது சைட்டம் பிரச்சினைக்குத் தீர்வாக அமையாதென தெரிவித்து இந்தப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது. அதேவேளை வேதன முரண்பாடுகளைத் தீர்த்தல் உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பும், மின்சாரசபை தலைமையகத்துக்கு முன்னால் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கொழும்பில் நேற்று பல்வேறு ஆர்ப்பாட்ட பேரணிகள் முன்னெடுக்கப்பட்டதால், அங்கு கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. (ஐ)



# சைட்டத்தை விடவும் பல பிரச்சினைகள் இருக்கின்றன

## அமைச்சர் சாகல சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 29
சைட்டத்தை விட நாட்டில் அநேக பிரச்சினைகள் இருக்கின்றன என்று தெரிவித்தார் அமைச்சர் சாகல ரத்னாயக்க. கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது
கடந்த ஒரு வருடமாக மருத்துவபீட மாணவர்கள் கல்வி நடவடிக்கையில் இருந்து விடுபட்டுள்ளனர். இதனால் புதிய மருத்துவர்கள் உருவாவது தாமதமாகின்றது.
நாட்டில் ஏற்பட்ட மண்சரிவு, வெள்ளம் என்பவற்றால் பலர் பாதிக்கப்பட்டு நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர். போதை தொடர்பிலும் அதிக பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றில் அவதானம் செலுத்தாமல் சைட்டம் பிரச்சினை பெரிதுப்படுத்துகின்றனர். - என்றார். (ற)

# அமைதியாக செயற்படுகிறது பொதுபலசேனா

கொழும்பு, ஜூன் 29
பொதுபல சேனா அமைதியான போக்கையே தற்போது பின்பற்றிவருகின்றது. ஆனால் விசர் நாய்களைக் கட்டிப்போடாவிட்டால் பிரச்சினைகள் இன்னமும் மேலோங்கும் என்று பொதுபலசேனா எச்சரித்துள்ளது. ராஜகிரியவில் அமைந்துள்ள பொதுபல சேனா அமைப்பின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. அமைப்பின் பொதுச் செயலாளர் டிலந்த விதானகே, " சட்ட விரோதமான வரிப் பணம் முஸ்லிம் அமைப்புகள் ஊடாக ஐ.எஸ். போன்ற இஸ்லாம் அடிப்படைவாத பயங்கரவாத அமைப்புகளுக்குச் செல்கின்றமை குறித்து அரசு விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும்" என்று குறிப்பிட்டார். (ஐ)

# கூட்டமைப்பைக் கூறுபோட ஒருபோதும் இடமளியோம்

## சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 29
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவடைந்தால் அரசமைப்பு உருவாக்கத்தில் தடைகளை ஏற்படுத்தலாம் என்று சிங்களப் பேரினவாத சக்திகளும், அரசுக்குள்ளேயே இருக்கும் பலரும் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளனர். இந்த நிலையில் கூட்டமைப்பைக் கூறுபோட ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார். அண்மைய அரசியல் நிலவரங்கள் தொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;



தமிழ்த் தலைமைகளின் தவறுகளால்தான் தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்க முடியாமல் போனது எனப் பன்னாட்டுக்குக் காட்டுவதற்கு அரசு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துள்ளது. அவ்வாறு தீர்வு கிடைக்காவிடில் அரசுக்கு அது பெரிய வெற்றியாக அமைந்துவிடும். பன்னாட்டின் ஆதரவைத் தக்க வைத்துக்கொள்ள வேறுபாடுகளைக் களைந்து ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச் சிதறுண்டால் அது தமிழ் மக்களுக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும். தமிழ் தரப்பு மீது பழியைப் போட்டுவிட்டுத் தப்பிக்கும் வழிகளை அரசு தேடிக்கொண்டிருக்கின்றது. அதற்கு நாம் சந்தர்ப்பம் வழங்கக் கூடாது - என்றுள்ளது. (ஐ)



# பாரம்பரிய உணவகம் ஏறாவூரில்திறந்துவைப்பு

செங்கலடி,ஜூன் 29
போரால் பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் ஐரோப்பிய ஒன்றியத்தின் 18 மில்லியன் ரூபா நிதியுதவியில் மட்டக்களப்பு செங்கலடியில் அமைக்கப்பட்ட அமிர்தம் கிழக்கின் பாரம்பரிய உணவகம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.
கடந்த காலப் போர் சூழ்நிலை காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர்ப்பற்றுப் பிரதேசம் அதிக இழப்புக்களைச் சந்தித்திருந்தது. அந்தப் பிரதேசத்திலுள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் செங்கலடியில் பாரம்பரிய உணவகம் அமைப்பதற்கு இடம் தெரிவு செய்யப்பட்டிருந்து. அந்த உணவகத்தில் எமது மண்ணுக்குரிய பாரம்பரிய உணவுகள் மற்றும் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறி, பழங்கள் மற்றும் மட்பாண்டப் பொருள்கள் விற்பனை செய்யப்படவுள்ளன. மட்டக்களப்பு மாவட்டச் செயலர் பி.எம்.எஸ். சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி லிபுஷியா சொபுகோ, மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.நெடுஞ்செழியன், ஏறாவூர்ப்பற்று பிரதேச செய லாளர் உ.உதயஸ்ரீதர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ-47)

### பொலிஸாரின் கோரிக்கை நீதிமன்றால் நிராகரிப்பு

கொழும்பு,ஜூன் 29
சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிரான பேரணிக்குத் தடை விதிக்குமாறு பொலிஸார் முன்வைத்த கோரிக்கையை நீதிமன்றம் நேற்று நிராகரித்தது. சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து மருத்துவ அதிகாரிகள் சங்கம் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்படவிருந்த பேரணிக்குத் தடை விதிக்குமாறு பொலிஸார், நீதிமன்றைக் கோரியிருந்தனர். கொழும்பு, கறுவாத் தோட்டப் பொலிஸாரால் கொழும்பு தலைமை நீதவான் நீதிமன்றிடம் விடுக்கப்பட்ட கோரிக்கையே இவ்வாறு நிராகரிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கமும் இன்ரறக்ட் கழகமும் இணைந்து நடத்திய குருதிக் கொடை முகாம் பாடசாலையின் குமரசாமி மண்டபத்தில் இடம் பெற்றது. தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் குருதி வங்கிப் பிரிவினர் மாணவர்களிடம் இருந்து குருதி சேகரித்தனர். (ஐ)



# நவீன வசதிகளுடன் அரச முதலீட்டு வங்கி

## வவுனியாவில் நேற்றுத் திறந்து வைப்பு

வவுனியா,ஜூன் 29
வவுனியாவில் இயங்கி வந்த அரச ஈட்டு முதலீட்டு வங்கிக் கிளை சகல வசதிகளுடனும் நவீன மயமாக்கப்பட்டு விசாலமான கட்டடத்துடன் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் வங்கி ஆலோசனை மற்றும் வழிகாட்டல் பட்டயக்கணக்காளரும் அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் பொது முகாமையாளருமான டபியூ. எம். தயாசிங்க முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடத்தைத் திறந்து வைத்தார். அதன்பின்னர் வாடிக்கையாளருக்கான சேவைகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். நிகழ்வில் சர்வமதத்தலைவர்கள், இலங்கை வங்கி ஊழியர்கள் சங்க உறுப்பினர்கள், வவுனியா கிளையின் முகாமையாளர், உத்தியோகத்தர்கள். அரச தனியார் வங்கி முகாமையாளர்கள், பொதுமக்கள், வாடிக்கையாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# மட்டு. மருத்துவமனை சிறுவர் விடுதி புதிய கட்டடத்துக்கு நேற்று மாற்றம்

மட்டக்களப்பு,ஜூன் 29
மட்டக்களப்பு போதனா மருத்துவமனையின் சிறுவர் விடுதி, நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்துக்கு நேற்று மாற்றப்பட்டது. அதேவேளை, இந்தப் புதிய கட்டடத்தில் கிழக்குப் பல்கலைக்கழத்தின் மருத்துவப் பிரிவுக்கான குழந்தைமருத்துவ விடுதியும் இயங்கவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. இந்தப் புதிய கட்டடமானது, உயர் கல்வி அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் 200 மில்லியன் ரூபா நிதி உதவியில் அமைக்கப்பட்டு இதுவரைகாலமும் சிறுவர் விடுதியானது, மட்டக்களப்பு போதனா மருத்துவமனையின் 33ஆம் இலக்க விடுதியில் இயங்கியது.
இந்தப் புதிய கட்டடத்தை மட்டக்களப்பு போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் எம்.எஸ். இப்றாலெவ்வை, கிழக்குப் பல்கலைக்கழக பிரதி உபவேந்தர் மருத்துவர் கே.இ.கருணாகரன் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர். (ஐ)

# யானைகளின் தாக்குதலிலிருந்து பாதுகாக்கக் கோரி செட்டிக்குளத்தில் நேற்று மக்கள் கவனவீர்ப்பு

வவுனியா,ஜூன் 29
யானைகளின் தாக்குதலில் இருந்து தம்மைப் பாதுகாக்குமாறு வலியுறுத்தி வவுனியா - செட்டிக்குளம் பகுதி மக்கள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
செட்டிகுளம் பிரதேசத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதால், அந்தப் பிரதேச மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருவதுடன் உயிர் அச்சுறுத்தலை எதிர்கொண்டு வருகின்றனர். பிரதேச மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்திச் செட்டிக்குளம் கமநல சேவை திணைக்களத்துக்கு முன்னால் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது கடந்த காலங்களில் விவசாயிகள் மற்றும் மக்களுக்கு



யானைகளால் ஏற்பட்ட உயிர் மற்றும் உடமை இழப்புக்கள் தொடர்ந்தும் ஏற்பட இடமளிக்காது, விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு போரட்டத்தில் ஈடுபட்டவர்கள் [illegible] வலியுறுத்தினர். "யானை[illegible] மேய்ச்சல் நிலமாகச் செட்டிக்குளம் மாறினால் பொருளாதாரத்தில் எவ்வாறு முன்னேற்றம் அடைவது?, வில்பத்து சரணாலயமா செட்டிக்குளம் சரணாலயமா, அரசே பதில் சொல், திட்மிட்டு எமது வாழ்வாதரத்தை கேள்விக்குறியாக்கி மக்களைப் பட்டினி போடாதே, இறக்காதே இறக்காதே எமது பிரதேசத்தில் யானைகளை இறக்காதே" போன்ற கோசங்களை எழுப்பியவாறு செட்டிக்குளம் பிரதேச செயலகம் நோக்கிப் ஊர்வலமாகச் சென்றனர்.
ஊர்வலத்தின் நிறைவில் செட்டிகுளம் பிரதேச செயலகக் கிராம சேவை தலைமைப் பீட உத்தியோகத்தர் சு.ஞானேஸ்வரனிடம் மனுக் கையளித்தனர். (ஐ)

# நீதிமன்றக் கூரையில் ஏறி சிறைக்கைதி போராட்டம்



கொழும்பு,ஜூன் 28
தம்புள்ளை மாவட்ட நீதவான் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்ட சிறைக்கைதி, நீதிமன்றக் கட்டடத்தின் கூரையில் ஏறி நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டார். போகம்பரைச் சிறைச்சாலையில் 16 வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தனக்கு உரிய தீர்வொன்றை வழங்குமாறு கோரியே அந்த சிறைக்கைதி இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகத்தெரிவிக்கப்பட்டது. போகம்பரைச் சிறைச்சாலையில் இருந்து தம்புள்ளை மாவட்ட நீதவான்நீதிமன்றத்துக்குநேற்றுக்காலைஅழைத்துச் செல்லப்பட்ட சிறைக்கைதி திடீரெனக் கூரையில் ஏறியுள்ளார். கூரையிலிருந்து இறங்கமறுத்து அவர் போராட்டத்தில் ஈடுபட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. கைதியின்திடீர்முடிவால்பொலிஸார்செய்வதறியாது நின்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# நாமல்உள்ளிட்டமூவருக்கு ரூ.30லட்சம்சரீரப்பிணை

கொழும்பு,ஜூன் 29
நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச உள்ளிட்ட மூவரை தலா 10 லட்சம் ரூபா பெறுமதியான சரீரப்பிணையில் விடுவிக்க கொழும்பு நீதிமன்றம் நேற்று பிணை அனுமதி வழங்கியது.
நாமல்ராஜபக்ச வேறுநபர்களுடன் இணைந்து 30மில்லியன்ரூபாநிதியைத்தவறானவழியில் ஈட்டியமை,அதற்காகஒத்துழைப்புவழங்கியமை அடங்கலான 11 குற்றச்சாட்டுகளின் கீழ் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது நீதிமன்றம் பிணை அனுமதி வழங்கியது. நாமலுக்குச்சொந்தமான கவர்ஸ் கோபரேசன் சர்வீஸ் நிறுவனம் வேறு நிறுவனம்ஒன்றுடன்மேற்கொண்டகொடுக்கல் வாங்கலினூடாக இந்த 30 மில்லியன் ரூபாநிதி பெறப்பட்டுள்ளது என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இந்த வழங்கில் சந்தேகநபர்களில் இருவர் நீதிமன்றில் முன்னிலையாகாத காரணத்தால் அவர்களுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. மீண்டும்எதிர்வரும்ஓகஸ்ட் மாதம் 30 திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (ஐ)

# தபால் ஊழியர்கள் நேற்றும்போராட்டம்

## 10 லட்சம் தபால்கள் முடக்கம்

யாழ்ப்பாணம்,ஜூன் 29
முக்கிய மூன்று கோரிக்கைகளை முன்வைத்து தபால் ஊழியர்களால் முன்னெடுக்கப்படும் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நேற்றும் முன்னெடுக்கப்பட்டது. அதனால் 10லட்சத்துக்கும்அதிகமான தபால்கள் தபாலகங்களில் தேக்கமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.
ஒன்றிணைந்த தபால் தொழிற் சங்க முன்னணியின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் பணிப்புறக்கணிப்புப் போராட்டம்நேற்றுமுன்தினம்நள்



ளிரவு முதல் ஆரம்பிக்கப்பட்டது. கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில் நேற்றும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். நுவரெலியா, கண்டி, காலி மற்றும் கொழும்பு கோட்டை ஆகிய தபால் காரியாலயங்கள் அகற்றப்பட்டு சுற்றுலா விடுதிகள் அமைக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் கொழும்பு தலைமைத் தபால் காரியாலயக் கட்டடத்தில் மீண்டும் தபால் காரியாலயத்தை ஆரம்பிக்காமை, ஊழியர் சட்ட வரைவை திருத்தி நடமுறைப்படுத்தாமை உள்ளிட்ட நிர்வாகத் தில் உள்ள பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண கோரியும் இந்தப் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக் கப்படுகிறது.
தபால் ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பால் தபால் சேவைகள் அனைத்தும் முற்றாக முடங்கியுள்ளன.
அதேவேளை முதலாம் வருடத்துக்கான பாடசாலை விண்ணப்பங்களை அனுப்பும் நடவடிக்கை மற்றும் பல்கலைக்கழக நுழைவுக்கான செயன்முறைகள் நடைபெற்று வரும் நிலையில் தபால் ஊழியர்கள் முன்னெடுத் துள்ள பணிப்புறக்கணிப்புப் போராட்டம் காரணமாக பெற்றோர் பெரும்சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.
முதலாம் தரத்துக்கான விண்ணப்ப காலம் நீடிக்கப்பட்டுள்ளது டன், தபாலில் அனுப்பாமல் நேரடியாகத் பாடசாலை அதிபர்களிடம் விண்ணப்பங்களைக்கையளிக்க முடியும் என்று கல்வியமைச்சு அறிவுறுத்தியுள்ளது. (ஐ)



மாணிக்கவாசகர்நினைவுதினத்தை முன்னிட்டு யாழ். இந்துக்கல்லூரியில் நேற்றுச் சிறப்புநிகழ்வுகள் இடம் பெற்றன. பாடசாலை அதிபர் தலைமையில், இடம்பெற்றநிகழ்வில் வடக்கு மாகாண மூத்த பொலிஸ் அத்தியட்சகர்ரி. கணேசநாதன் கலந்துகொண்டு 25 மாணவர்களுக்கு போக்குவரத்துக்கண்காணிப்புச்சீருடைகளை வழங்கினார். (ஐ)

# வருடாந்த பொங்கல் விழா நாளை

அளவெட்டி, ஜூன்29
மட்டுவில் கிழக்கு புத்தூர் வீதியோரம் அமைந்துள்ள ஞான வைரவர் ஆலய வருடாந்த பொங்கல் விழா, நாளை வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு பூசைகளின் பின்னர் நடைபெறும்.
கடந்த 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு விளக்கு வைத்தல் நிகழ்வு நடைபெற்று ஆனி உத்தர நாளான நாளை பொங்கல் சிறப்பு நிகழ்வு நடைபெறும் என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளார்கள். (21, 36)

# கோபுர அடிக்கல் நடும் விழா

யாழ்ப்பாணம்,ஜூன்29
தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வடதிசை வாயில் கோபுர அடிக்கல் நடும் விழா நாளை 30 ஆம் திகதி காலை 5.56 மணி தொடக்கம் 7.26 மணிவரையுள்ள சுப வேளையில் நடைபெறவுள்ளது என தெரிவிக்கப்பட்டது.
இந்த நிகழ்வுக்கு அடியார்கள் அனைவரையும் வருகை தருமாறும் திருப்பணிக்கு நிதியுதவி வழங்குபவர்கள் தேவஸ்தான அலுவலகத்தில் ஒப்படைத்து பற்றுச்சீட்டுப் பெறறுக்கொள்ளவும் என ஆலய நிர்வாக சபையினர் மேலும் தெரிவித்தனர். (21,36)

# பெருந்திருவிழா

அளவெட்டி பெருமாக்கடவை வரலாற்றுப் புகழ்மிக்க அருள் மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று காலை பூரநட்சத்திரமும், ஷட்டி திதியும், சித்த யோகமும் கூடிய சுப வேளையான மு.ப 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறும். என்று தெரிவிக்கப்பட்டது.
எதிர்வரும் 7 ஆம் திகதி காலை 7 மணிக்கு பூசைகள் இடம்பெற்று 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசைகள் இடம்பெற்று நண்பகல் 12 மணிக்கு சுவாமிதேர் ஏறி வீதியுலாவரும் காட்சி இடம்பெறும் மறுநாள் 8 ஆம் திகதி காலை 11 மணிக்கு தீர்த்த திருவிழாவும் இடம்பெறும். என்று மேலும் தெரி விக்கப்பட்டது. (21-36)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 29
கைதடிவடக்கு கயிற்றசிட்டி முருகனின் வரலாற்றை உள்ளடக்கிய 'அற்புதக்குமரன்' நூல்வெளியீடு இன்று வியாழக்கிழமை பி.ப. 1மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-5)

# மரநடுகை விழா

யாழ்ப்பாணம்,ஜூன்.29
புனித ஜோன் பொஸ்கோ வித்தியா லயத்தின் உத்தியோக பூர்வ இணையம் ஆரம்பித்தல் மற்றும் மரநடுகை விழா பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று வியாழக்கிழமை காலை 7.45 மணிக்கு நடைபெறவுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.
வித்தியாலயத்தின் அதிபர் அருட்சகோதரி மேரி றொசாந்தி தலைமையில் இடம் பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந் தினராக வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் அருட்சகோதரி எம்.ஜெரோம் கலந்துகொள்ளவுள்ளார் என வித்தியாலயத்தின் அதிபர் மேலும் தொரிவித்துள்ளார். (21)

# தேர்த் திருவிழா இன்று

அளவெட்டி தவளகிரி ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஆலய வருடாந்த தோர்த்திருவிழா இன்று வியாழ க்கிழமை காலை 10 மணிக்கு சிறப்பு பூசையுடன் ஆரம்பமாகவுள்ளது என தெரிவிக்கப்பட்டது, நாளை 30ஆம் திகதி காலை 10 மணிக்கு தீர்த்த திருவிழா இடம்பெறும் என ஆலய தர்மகத்தா தெரிவித்துள்ளார். (21-36)

* * *

புலோலி பர்வதவர்த்தனி சமேதபசுபதீஸ்வரர் (பருத்தித்துறை சிவன்) கோயிலின் வருடாந்தப் பெருந் திருவிழாவின் தேர்த்திருவிழா இன்று வியாழக் கிழமை இடம்பெற உள்ளது.
கடந்த 15ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமான பெருந்திருவிழாவின் சப்பறத் திருவிழா கடந்த 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும், பிச்சாடனர் திருவிழா கடந்த 28ஆம் திகதி புதன்கிழமையும்,நடைபெற்றது. தொடர்ந்து தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழ மையும் தீர்த்தத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமையும் இடம்பெறுவதுடன் பெருந்திருவிமா நிறைவுறும் என தெரிவிக்கப்பட்டது. (21-173)



# உமாஓயாத்திட்டத்துக்குஎதிர்ப்பு பண்டாரவளையில் கடையடைப்பு



கொழும்பு.ஜூன் 29
உமா ஓயா திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துபண்டாரவளைநகரில் நேற்றுக் கடையடைப்பு நடத்தப்பட்டது. பண்டாரவளைப் பிரதேச மக்கள் ஒன்றிணைந்து நகரின் அனைத்து வர்த்தக நிலையங்களையும்மூடிப்பெரும்எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அந்தப் பிரதேசப் பாடசாலைகளும் மூடப்பட்டன.
உமாஓயாதிட்டம் முன்னெடுக்கப்பட்டால் அந்தப்பகுதி வீடுகளுக்குப் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டதோடு, தண்ணீர்த் தட்டுப்பாடும் ஏற்படும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர். இந்தப் போராட்டத்தால் பண்டாரவளைக்கான தனியார் போக்குவரத்துச் சேவைகளும் முடங்கின. இதனால் பண்டாரவளைப் பிரதேச மக்களின் இயல்பு வாழ்க்கை நேற்று வெகுவாகப் பாதித்தது. (ஐ)

## கஞ்சாவுடன் கைதானவருக்கு 2 வருடங்களின் பின் பிணை கிடைத்தது

யாழ்ப்பாணம், ஜூன் 29
183 கிலோ கஞ்சா போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர் 2 வருடங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டார். எனினும் அவர் மீதான வழக்கு இன்னும் தொடரவுள்ளது.

யாழ்ப்பாண மேல் நீதிமன்று நேற்றுமுன்தினம் பிணை வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பகுதியில் 2015 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 2 ஆம் திகதி 183 கிலோ 500 கிராம் கஞ்சாவுடன் குறித்த குடும்பத் தலைவர் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவரை விளக்கமறியலில் வைக்க பருத்தித்துறை நீதிமன்று உத்தரவிட்டிருந்தது.

நேற்றுமுன்தினம்வரை அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

சந்தேகநபரின் விளக்கமறியல் காலம் இரண்டு வருடங்களை அண்மித்துள்ளதால் சந்தேக நபருக்குப் பிணை வழங்கக்கோரி பிணை மனு யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

மனுவைப் பரிசீலித்த நீதிபதி மா.இளஞ்செழியன், பிணை வழங்க அரச சட்டத்தரணி ஆட்சேபனை தெரிவிக்காத நிலையில், சந்தேக நபரின் விளக்கமறியல் காலம், குடும்ப சுழ்நிலை என்பனவற்றை கருத்தில் கொண்டு தலா 5 லட்சம் ரூபா பெறுமதியான 2 ஆள்பிணைகளில் அவர் விடுவிக்கப்பட்டார்.

அவர் கஞ்சா போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டு வழக்கு மேல்நீதிமன்றில் விசாரணை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-ரி-1)

## இருள் சூழ்ந்த வீதிகளுக்கு மின் விளக்குளை அமைக்குக

### நெடுங்தீவு பிரதேச மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம் ஜூன்28
நெடுந்தீவு பிரதேசத்தில் அனேகமான வீதிகள் இருளில் மூழ்கியுள்ளது, அந்த வீதிகளில் வீதி மின் விளக்குக்களை பொருத்தி பாதுகாப்பான போக்குவரத்திற்கு வழிவகுக்குமாறு தருமாறு அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது, "நெடுந்தீவில் சுமார் ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். இங்கு வாழும் எம்மில் பெரும்பாலானோர் கடற்றொழிலையும் விவசாயத்தையும் தமது வாழ்வாதாரத் தொழிலாக செய்துவருகின்றனர். எமது பிரதேசத்தில் உள்ள வீதிகளில் ஒரு சில பகுதிகளில் மட்டும் வீதி மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. நாம் அன்றாடம் பாவிக்கும் பெரும்பாலான வீதிகளுக்கு மின் விளக்குகள் பெருத்தப்படவில்லை, இதனால் அந்த வீதிகள் இருளில் மூழ்கியே காணப்படுகின்றன. பொதுவாக பிர தேசத்தைச் சேர்ந்த பெண்கள் வயோதிபர்கள் இரவு வேளைகளில் இருள் சூழ்ந்த வீதியால் பயணிக்கும் போது பல சவால்களை எதிர்கொள்கின்றனர். மீன் விளக்குகள் பொருத்தப்படாது உள்ள வீதிகள் குன்றும் குளியுமாக இருப்பதால் இருளில் பயணிப்பவர்களில் பெரும்பாலானவர்கள் தவறி குன்றுகளில் வீழ்ந்து காயப்படுவதுடன் அவர்கள் பயணிக்கும் வாகனங்களும் சேதங்களுக்கு உள்ளாகின்றன. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எமது பிரதேசத்தின் வீதிகளுக்கு மின்விளக்கு களை பொருத்தி எமது பாதுகாப்பான போக்குவரத்துக்கு வழிவகை செய்யுமாறு கேட்டு கொள்கின்றோம். என்றனர்.

"நெடுந்தீவு பிரதேசத்தில் கணிசமான இடங்களுக்கு வீதி மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. அதிலும் முக்கியமான பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ள இடங்கள் மற்றும் நெடுந்தீவில் உள்ள சுற்றுலாத் தளங்கள் ஆகிய இடங்களுக்கு வீதி மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. நெடுந்தீவில் உள்ள ஏனைய இடங்களுக்கு மின் விளக்குகளை பொருத்தி தருமாறு நெடுந்தீவில் நடைபெற்றஅபிவிருத்திகூட்டத்திலும் அந்த மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எகவே நாம் பொதுமக்களிடம் எந்தெந்த பகுதிகளுக்கு மின்விளக்குகள் தேவைப் படுகின்றன என்ற தகவலை கோரியுள்ளோம். மக்கள் வழங்கும் தகவலின் அடிப்படையில் எத்தைனை மின்விளக்குகள் தேவை என்று தெரியவரும். அந்த தரவுகளை பெற்றுக் கொண்டு நாம் நடவடிக்கை எடுக்கவுள்ளோம். என நெடுந்தீவு பிரதேச சபை செயலாளர் தெரிவித்தார். (21-8)

## கொடியேற்றம்

யாழ்ப்பாணம்,ஜூன்29
கைதடி கயிற்றசிட்டி முருகன் ஆலய வருடாந்தத் திருவிழா இன்று வியாழக்கிழமை மு.ப 11மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது. எதிர்வரும் 7ஆம் திகதி காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 8ஆம் திகதி மு.ப 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-21)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்29
யாழ்ப்பாணம் மேலை வண்ணை நகர் ஸ்ரீ விசுவேச விநாயகர் ஆலய வருடாந்த திருவிழா இன்று வியா ழக்கிழமை மு.ப 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் என தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ள திருவிழாவின் தேரத்திருவிழா எதிர்வரும் 7 ஆம் திகதியும் மறுநாள் 8 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (வ-21)

## மூக்குக் கண்ணாடிகளை பெற்றுக் கொள்ளவும்

யாழ்ப்பாணம், ஜூன் 29
அராலி உலோலைசிட்டி விநா யகர் ஐக்கியநாணயசங்கத்தினரால்நாளை மறுதினம் இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

அராலி உலோலைசிட்டி விநாயகர் ஐக்கிய நாணய சங்கத்தினரின் அனுசரணையுடன் கொழும்பு தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் கடந்த மே மாதம் 27 ஆம் திகதி கண் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது. அதில் மூக்குக் கண்ணாடிகள் தேவையெனப் பரிந்துரைக்கப்பட்டவர்களுக்கே கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

உலோலை சிட்டி விநாயகர் ஐக்கிய நாணய சங்கத்தின் தலைவர் வி. செல்வ ரத்தினத்தின் இல்லத்தில் நாளை மறுதினம் 1 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இலவச மூக்குக்கண்ணா டிகள் வழங்கப்படவுள்ளன. கண்பரிசோதனை செய்தவர்கள் நேரம் தவறாது சமூகம் கொடுத்து கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (4)

## நவநாள் திருவிழா

கச்சாய் புனித பேதுருவானவர் ஆலய நவநாள் திருவிழா கடந்த 20ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறுகின்றது. திருவிழாவில் இன்று மாலை திரு நற்கருணை ஆராதனையும் சிறப்பு திருப்பலி வழிபாடும் இடம்பெற்று நாளை மறுதினம் காலை திருநாட் பாடல் திருப்பலி வழிபாடும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். என தெரிவிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் இரவு தென்மோடி நாட்டுக் கூத்து நிகழ்வு இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.(வ-21-9)

## விசுவேச விநாயகருக்கு இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம் மேலை வண்ணைநகர் ஸ்ரீ விசுவேச விநாயகர் ஆலய வருடாந்த திருவிழா இன்று மு.ப 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். எதிர்வரும் ஜூலை மாதம் 7 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் 8 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (4)

## நந்தாவில் அம்மனுக்கு இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம் ஜூன்28
யாழப்பாணம் கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த திருவிழா இன்று வியா ழக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஜூலை மாதம் 9ஆம் திகதி தீர்த்தோற்சவ நிகழ்வுடன் நிறைவு பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்தனர். (வ-ரி)

## நவாலி முருகனுக்கு நாளை திருக்குடமுழுக்கு

யாழ்ப்பாணம், ஜூன்29
நவாலியூர் அருள்மிகு அந்திரான் முருகமூர்த்தி கோயில் மகா திருக் குடமுழுக்கு நாளை வெள்ளிக்கிழமை காலை 9.18 மணிமுதல் 10.22 மணிவரையிலுள்ள ஆனிஉத்தரமும், சப்தமிதிதியும், சித்தாமிர்த யோகமும், சிம்ம இலக்கின சுபமுகூர்த்த வேளையில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பகால கிரிகைகள் கடந்த 26 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.15 மணிமுதல் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. எண்ணெய்க்காப்பு இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது. திருக்குடமுழுக்கைத் தொடர்ந்து 45 நாள்கள் மண்டலாபிசேகம் நடைபெறும், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சங்காபிசேக நிகழ்வு நிகழ்வு இடம்பெற உள்ளது. (21,160)

## "ஏழிசை மாலை 20" நிகழ்வுகள் நாளை வீரசிங்கம் கல்லூரியில்

தென்மராட்சி, ஜூன் 29
தென்மராட்சி கல்வி வலய இசையாசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியினருடன் இணைந்து நடத்தும் 'ஏழிசை மாலை 20' நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் த.அம்பலவாணர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்குத் தலைமை விருந்தினராக மருதங்கேணி பிரதேச செயலர் க.கனகேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக கல்லூரியின் முன்னாள் அதிபரும் சாவகச்சேரி கோட்டக் கல்வியின் ஓய்வுநிலை பணிப்பாளருமாகிய கு.சிவானந்தமும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் கல்லூரி ஆசிரியை திருமதி மதிலோஜினி லோகீசனின் இசைக் கச்சேரி, உசன் இராமநாதன் மகா வித்தியாலய மாணவர்களின் குழுப் பாடல், சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி செல்வி ஸ்ரீ.சாகரா, மந்துவில் றோ.க.த.க. பாடசாலை மாணவன் ஸ்ரீ. நிருஷன் ஆகியோரின் மெல்லிசை, இசையாசிரியர்களான திருமதி கவிதா செல்வமூர்த்தி (நாவற்குளி ம.வி.) திருமதி றஜனி சுதர்சன் (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), திருமதி கலைச்செல்வி சாயிரூபன் ( மிருசுவில் அ.த.க.பாடசாலை ) திருமதி கமலவேணி ஆனந்தரூபன்(மிருசுவில் றோ.க.த.க.பாடசாலை ) ஆகியோரின் ஆசிரியர் குழுப் பாடல், மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவர்களின் குழுப் பாடல், ஆகியவையும் இடம்பெறும். நிகழ்வில் அணிசேர் கலைஞர்களாக மிருதங்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறை மூத்த விரிவுரையாளர் சி.மகேந்திரன், வயலின் சுருதிஞான திலகம் அ. ஜெயராமன் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (21,9)

## சங்காபிசேகம் நாளை

தென்மராட்சி ஜூன்29
எழுதுமட்டுவாழ் விழுபழை கண்ணகை அம்பாள் (ஸ்ரீமீனாட்சி ) ஆலய மகா சங்காபிசேகம் நாளை மு.ப. 10 மணி தொடக்கம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாளுக்கு 1008 சங்குகளாலும் பரிவார மூர்த்திகளான பிள்ளையார், முருகன், பைரவப் பெருமான் ஆகியோருக்கு 108 சங்குகளாலும் அபிசேகம் நடைபெறுமெனவும் பி.ப. 3 மணிக்கு வசந்த மண்டப பூசைகள் இடம்பெற்று விநாயகர் முருகன் சகிதம் அம்பிகை வெளி வீதியுலா வருகை தரவுள்ளார் எனவும் ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். சங்காபிசேகக் கிரியைகள் 'சிறிசக்தி கிரியா குருமணி ' சிவஸ்ரீ இ.குமாரசாமிக்குருக்கள் தலைமையில் நடைபெறுமெனவும் அறிவித்துள்ளனர். (21,9)

## செபமாலை மாதா ஆலயத் திருவிழா

தென்மராட்சி, ஜூன்29
மீசாலை மேற்கு மருதமடு செபமாலை மாதா ஆலய திருவிழா .
இன்று மாலை 4 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து இரண்டு நாள் நவநாள் திருப்பலிகளும் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு திவ்ய நற்கருணை ஆராதனையும் வழிபாடும் இடம்பெற்று மறுநாள் 2 ஆம் திகதி காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-21-9)

## மரியாயின் சேனை இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன்.29
யாழ்ப்பாண மறை மாவட்ட கத்தோலிக்க திருச்சபையின் பத்திச் சபைகளின் ஒன்றான மரியாயின் சேனையின் சேவைச் சிறப்புக்கான "அம்மா உந்தன் சேனையிலே" என்னும் இறுவட்டு வெளியீட்டு விழா 26ஆம் திகதி திங்கட்கிழமை காலை யாழ். திருமறைக்கலாமன்ற கலைத் தூது மண்டபத்தில் இடம்பெற்றது.

சபையின் ஆன்ம இயக்குநர் அருட்பணி ம.றெஜி இராஜேஸ்வரன் அடிகளாரின் ஒழுங்கமைப்பில் மரிய கருணை நாயகம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. தலைமை விருந்தினரராக யாழ்ப்பாண மாவட்ட ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையும், சிறப்பு விருந்தினராக குருமுதல்வர் அருட்திரு பி.ஜெ. ஜெபரட்ணம் அடிகளாரும் கலந்து கொண்டதுடன், இறுவட்டின் முதற் பிரதியை ஆயர் வெளியிட்டு வைக்க முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ.சிறில் பெற்றுக்கொண்டார். இறுவட்டின் ஒழுங்கமைப்பு, தயாரிப்பாளர் அருட்திருப்பணி றெனோல்ட் ஜோர்ஜ் அடிகளாரையும் அவர் அணிசேர் கலைஞர்களையும் ஆயர் பாராட்டி கௌரவித்தார். (து-17)

## வித்தியாவின்...

மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில் மேல் நீதிமன்ற நீதிபதிகள் அன்னலிங்கம் பிரேமசங்கர், மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் அடங்கிய தீர்ப்பாய அமர்வு நேற்றுக் காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் நீதிமன்றக் கட்டடத் தொகுதியின் 2ஆவது மாடியிலுள்ள திறந்த மன்றில் கூடியது.

மாணவி சிவலோகநாதன் வித்தியா படுகொலை வழக்கின் 9 எதிரிகளுமான பூபாலசிங்கம் இந்திரகுமார், பூபாலசிங்கம் ஜெயக்குமார், பூபாலசிங்கம் தவக்குமார் , மகாலிங்கம் சசிதரன் , தில்லைநாதன் சந்திரகாசன் , சிவதேவன் துஷாந்த் , பழனி ரூபசிங்கம் குகநாதன் , ஜெயதரன் கோகிலன் , மற்றும் மகாலிங்கம் சசிக்குமார் ஆகியோர் அநுராதபுரம் சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் தீர்ப்பாயத்தின் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார்கள்.

வழக்குத் தொடுநர் சார்பில் பதில் சட்டமா அதிபர் டப்புள்ள டி லிவேரா, பிரதி மன்றாடியார் அதிபதி பி.குமாரரத்தினம் மற்றும் அரச சட்டவாதி நாகரட்ணம் நிசாந்த் மற்றும் அரச சட்டவாதிகள் தீர்பாயத்தில் முன்னிலையாகினர்.

1,2,3,4,5 மற்றும் 6ஆம் எதிரிகள் சார்பில் அரச தலைவர் சட்டத்தரணி சாரங்க பாலசிங்க மற்றும் மகிந்த ஐயவர்த்தனவும், 5ஆம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆறுமுகம் ரகுபதியும், 4,5,7,9ஆம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி சின்னராசா கேதீஸ்வரனும், 9 சந்தேகநபர்கள் சார்பிலும் தீர்ப்பாயத்தால் அரச செலவில் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி விக்னேஸ்வரன் ஜெயந்தவும் பாதிக்கப்பட்டோர் நலன்சார்பில் வி.மணிவண்ணன், ஜே.பி.ரஞ்சித்குமார் ஆகியோரும் தீர்ப்பாயத்தில் முன்னிலையாகினர்.

எதிரிகளுக்கு எதிரான 41 குற்றச்சாட்டுகளும் வாசித்துக் காண்பிக்கப்பட்டன. அதில் 1, 2, 3, 5 மற்றும் 6ஆம் எதிரிகளுக்கு எதிராக மாணவியை பலவந்தமாக கடத்தியமை , வன்புணர்வுக்கு உட்படுத்தியமை மற்றும் கொலை செய்தமை ஆகிய குற்ற சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டன. ஏனைய 4, 7, 8 மற்றும் 9ஆம் எதிரிகள் மீது குறித்த குற்றச் சம்பவத்துக்கு திட்டம் தீட்டியமை , அதற்கு உடந்தையாக இருந்தமை ஆகிய குற்றசாட்டுக்கள் முன் வைக்கப்பட்டன.

அந்தனை குற்றச்சாட்டுக்களையும் மறுத்த எதிரிகள் தாம் சுற்றவாளிகள் என்று தீர்ப்பாயத்தில் உரைத்தனர். அதனால் வழக்கு விசாரணையை முன்னெடுப்பது என்று தீர்ப்பாயம் அறிவித்தது.

சாட்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டனர். அவர்கள் சாட்சியமளிக்கும் தினங்கள் தீர்ப்பாயத்தால் அறிவிக்கப்பட்டது. எந்தவொரு தாமதமுமின்றி வழக்கு விசாரணையை முன்னெடுக்க வழக்குத் தொடுனர் மற்றும் எதிரி தரப்பினர் ஒத்துழைக்க வேண்டும் என்று தீர்ப்பாயத்தால் அறிவுறுத்தப்பட்டது.

### தீர்ப்பாயத்துக்கு நியாயாதிக்கம் இல்லை

5ஆம் எதிரியின் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி ஆறுமுகம் ரகுபதி மன்றில் விண்ணப்பம் செய்கையில், "அரசுக்கு எதிராக போர் தொடுத்தல் , அதற்கு உதவுதல் , அதற்கு சதித்திட்டம் தீட்டுதல் , வெடி பொருட்கள் ஆயுதங்களை தம் வசம் வைத்திருத்தல் போன்ற குற்றசாட்டுக்கள் தொடர்பில் விசாரணை செய்யவே 3 நேீதிபதிகள் அடங்கிய தீர்ப்பாயத்துக்கு அதிகாரம் உண்டு.

இத்தகைய எந்தவிதமான குற்றசாட்டுக்களும் இங்குள்ள எதிரிகள் மீது சுமத்தப்படவில்லை எனவே இந்த வழக்கை விசாரிக்கும் நியாயாதிக்கம் இந்த தீர்ப்பாயத்துக்கு இல்லை" என்றார்.

### ஆட்சேபனை

அதற்கு பதில் சட்டமா அதிபர் தனது ஆட்சேபனையை தெரிவித்தார். "சட்டத்தரணி கூறிய குற்ற செயல்கள் தொடர்பில் கட்டாயம் தீர்ப்பாயம் முன்னிலையில்தான் விசாரிக்க வேண்டும். ஆனால் இந்த கொலை வழக்கு சிறப்பு வழக்கு என்பதால் சட்டமா அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்கவே தலைமை நீதியரசாரால் இந்தத் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டது" என்று ஆட்சேபனையைத் தெரிவித்தார்.

நியாயாதிக்கம் உண்டு

அதனை தொடர்ந்து நீதிபதிகள் தமது கட்டளையில் , மூன்று நீதிபதிகளும் 5ஆம் எதிரி தரப்பு சட்டத்தரணியின் விண்ணப்பத்தை ஏக மனதாக நிராகரிக்கின்றோம். மூன்று நீதிபதிகளுக்கும் இந்த வழக்கை விசாரிக்கும் நியாயாதிக்கம் உண்டு. நீதியின் தேவை கருதி , அதன் நலன் கருதி விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதற்காக தலைமை நீதியரசரின் பரிந்துரைக்கு அமைவாகவே இந்தத் தீர்ப்பாயம் அமைக்கபப்ட்டது" என்று தெரிவித்தது 5ஆம் எதிரி தரப்பு சட்டத்தரணியின் விண்ணப்பத்தை நிராகரித்தனர்.

### கண்ணீருடன் சாட்சிக் கூண்டில் வித்தியாவின் தாயார்

முதலாவது சாட்சியாக கொல்லப்பட்ட மாணவியின் தாயார் சிவலோகநாதன் சரஸ்வதி சாட்சியமளித்தார். அவரின் வழக்குத் தொடுனர் தரப்பில் பிரதி மன்றாடியார் அதிபதி பி. குமாரரட்ணம் விசாரணை நடத்தினார்.

எமது வீட்டில் இருந்து எனது மகள் தினமும் பாடசாலைக்கு துவிச்சக்கர வண்டியில்தான் செல்வார். வீட்டில் இருந்து பாடசாலை செல்ல ஒன்று தொடக்கம் ஒன்ரை மணித்தியாலம் தேவைப்படும். பெரும்பாலும் எனது மகன் (வித்தியாவின் அண்ணா ) வித்தியா பாடசாலை செல்லும் போது அழைத்து செல்வான். சில வேளைகளில் அவனுக்கு வேலை இருந்தால் வித்தியா கூடப் படிக்கும் சக பிள்ளைகளுடன் செல்வாள்.

எனது கணவர் பாரிச வாத நோயால் பாதிக்கப்பட்டு படுக்கையில் இருப்பதனால் எமது குடும்ப பொருளாதார சூழ்நிலை காரணமாக மகன் இடையில் படிப்பை கைவிட்டு வேலைக்கு செல்ல தொடங்கி விட்டார்.

வீட்டில் இருந்து பாடசாலை செல்லும் வீதியின் இரு மருங்கிலும் பற்றை காடுகள் பாழடைந்த வீடுகள் உள்ளன. அவற்றை தாண்டியே செல்ல வேண்டும். வீதி குன்றும் குழியுமாக இருக்கும். மழை காலத்தில் அந்த வீதியைப் பயன்படுத்த முடியாது. அந்த வீதியில் பெரும்பாலும் சன நடமாட்டம் குறைவாக காணப்படும். பாடசாலை நேரத்திலும் சந்தைக்கு பொருள்கள் வாங்க செல்லும் நேரத்திலும் தான் அந்த வீதியில் சன நடமாட்டம் இருக்கும். ஏனைய நேரங்களில் சன நடமாட்டம் குறைவாக இருக்கும்.

சம்பவ தினத்தன்று காலை 7.30 மணிக்கு வித்தியா பாடசாலை செல்ல புறப்பட்டாள். நானே வீடு கேற் வரையில் சென்று வழியனுப்பி வைத்தேன். அன்றைய தினம் வித்தியா கூட படிக்கும் மாணவியுடன் செல்வதாக கூறி சென்றால். ஆனால் அன்றைய தினம் அந்த மாணவி பாடசாலை செல்லாத காரணத்தால் வித்தியா தனியாகவே பாடசாலை நோக்கிச் சென்றாள்.

பாடசாலை சென்ற வித்தியா பாடசாலை நேரம் முடிவடைந்து வீட்டுக்கு வரும் நேரத்தை கடந்தும் வராததனால் வித்தியாவை பார்த்து வருமாறு எனது மகனை பாடசாலைக்கு அனுப்பினேன். அவன் அங்கு சென்று பார்த்து விட்டு பாடசாலை பூட்டி உள்ளதாக அலைபேசியில் சொன்னான். அதன் பின்னர் பாடசாலை மாணவர்களிடம் விசாரித்த போது வித்தியா இன்றைய தினம் பாடசாலைக்கு வரவில்லை எனக் கூறினார்கள்.

அதன் பின்னர் நானும் எனது மகனும் வித்தியாவைத் தேடி அலைந்தோம். அந்நேரம் ஊரவர்கள் இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யுங்கள் எனச் சொன்னார்கள். அதனால் மாலை 6.30 மணியளவில் குறிகாட்டுவான் பொலிஸ் காவலரணில் முறைப்பாடு செய்யச் சென்றோம். அங்கு அவர்கள் இந்த முறைப்பாட்டை ஏற்க முடியாது. நீங்கள் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையம் சென்று முறைப்பாடு செய்யுங்கள் எனத் தெரிவித்தனர்.

பின்னர் இரவு 8 மணியளவில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு கொடுக்க முற்பட்ட போது, இந்த வயது பிள்ளைகள் ஓடிப் போயிருக்குங்கள் திரும்பி வாருங்கள் என்று பொலிஸார் சொன்னார்கள். அதற்கு நாம் எங்கள் பிள்ளை அப்படி பட்டவள் இல்லை என கூறியதும் பின்னர் எமது முறைப்பாட்டை ஏற்றுகொண்டார்கள். பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்ய ஓட்டோவில் சென்று இருந்தோம். ஓட்டோவில் இரவு 10 மணியளவில் வீடு திரும்பும் போது ஓட்டோ சாரதி சொன்னார் நான் தினமும் 7.30 மணியளவில் வித்தியாவை ஆலடி சந்தியில் காண்கிறனான். இன்றைக்கு காணவில்லை. எனவே அவர் வீட்டுக்கும் ஆலடி சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில்தான் காணாமற்போயிருக்க வேண்டும். எனவே அந்த பகுதிகளில் தேடி பாருங்கள் என கூறினார்.

அன்றைய தினம் மழை பெய்து கொண்டு இருந்ததாலும் மிகவும் இருட்டி விட்டதாலும் நாம் இரவு தேடாமல் வீட்டுக்கு சென்று விட்டோம். மீண்டும் மறுநாள் காலை 6.30 மணியளவில் நானும் மகனும் அயலவர்கள் இவர்களுடன் வித்தியவை தேடி சென்றோம். அதன் போது வீதியின் இரு மருங்கிலும் இருவர் வீதம் பிரிந்து தேடி சென்றோம். எம்முடன் வித்தியா வளர்த்த நாயும் வந்து இருந்தது. திடீரென எனது மகனும் அயலவரும் கத்தும் சத்தம் கேட்டு நானும் என்னுடன் கூட வந்தவரும் சத்தம் வந்த திசையை நோக்கி ஓடி சென்றோம்.

அப்போது என் மகன் ஓடிவந்து "அம்மா வித்தியா " என கத்திக்கொண்டு மயக்கமுற்று வீழ்ந்தான். அதன் பின்னர் நானும் சுயநினைவின்றி போனேன். எம்முடன் வந்தவர்கள்தான் ஓடிச் சென்று வேறு ஆள்களை அழைத்து வந்தனர்.

நான் நினைவுக்கு வந்து வித்தியாவின் சடலம் இருந்த இடத்துக்கு சுமார் 20அடி தூரத்தில் இருந்தே சடலத்தை பார்த்தேன். கிட்ட செல்ல வில்லை. மகன் மயக்கமுற்று வீழ்ந்தமையால் மகனை வைத்தியசாலைக்கு கொண்டு சென்று விட்டார்கள்.

பின்னர் காலை 10 மணியளவில் ஊர்காவற்றுறை பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகை தந்து விசாரணைகளை செய்து சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் கொண்டு சென்றனர்" என்று தனது சாட்சியத்தில் குறிப்பிட்டார்.

வித்தியா அணிந்திருந்த சீருடையை அவரது தாயார் அடையாளம் காட்டினார். அப்பொழுது பொங்கி வந்த அழுகையை அவரால் அடக்க முடிவில்லை. மன்று அமைதியடைந்தது. அழுகை மட்டும் மன்றை நிறைத்தது. பின்பு அவர் தன்னைச் சுதாகரித்துக் கொண்டார்.

"கணேச வித்தியாலயம் போய் வரும் போது, ஒரு வானில் ஆலடிச் சந்தியில் சில பேர் இருந்துகொண்டு வான் கண்ணாடியை பதித்து விட்டபடி பாரத்துக்கொண்டு நின்றனர். அவர்கள் அனைவரும் கண்ணாடி அணிந்திருந்தார்கள். பார்க்க வெளிநாட்டுக்காரர் போல இருக்கு" என்று வித்தியா என்னிடம் கூறினாள். "நீ என்றைக்கும் இல்லாமல் இன்றைக்கு பஞ்சாபி அணிந்திருந்தனி அதுதான் அவையள் பார்த்திருக்கினம்" என்று கூறினேன்" என்றார்.

எதிரி தரப்புச் சட்டத்தரணிகள் வித்தியாவின் தாயாரிடம் குறுக்கு விசாரணை செய்தனர். அவர்கள் சாட்சியிடம் தொடுத்த கேள்விகள் வழக்குடன் தொடர்புபடாதைவைகளாக இருந்தன. அவ்வப் பொது தீர்ப்பாயம் எதிரி தரப்புச் சட்டத்தரணிகளை எச்சரித்தது. வழக்குடன் தொடர்பு இல்லாத கேள்விகள் எதனையும் சாட்சியிடம் கேட்டக் கூடாது என்று அவர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

முதலாவது சாட்சியிடம் சாட்சியம் நிறைவு பெற்றதும் 32ஆவது சாட்சிக்கு தீர்ப்பாயம் பிடியாணை பிறப்பித்து கட்டளையிட்டது. அவரைக் கைது செய்து தீர்ப்பாயம் முன்னிலையில் முற்படுத்துமாறு தீர்ப்பாயம் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குக் கட்டளையிட்டது.

அரச தரப்பு சாட்சியின் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில் 5ஆவது சாட்சியிடம் இன்று சாட்சியம் பதிவு செய்யப்படும். மற்றொரு சாட்சி இந்தியா பயணமாகவுள்ளதால் அவரை ஒரு லட்சம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் விடுவித்த தீர்ப்பாயம் எதிர்வரும் 26ஆம் திகதி அவரை சாட்சியமளிக்க வருகை தருமாறு கட்டளையிட்டது.

### யாழ். சிறையில் எதிரிகள்

எதிரிகள் 9 பேரும் யாழ்ப்பாண சிறைச்சாலையில் நேற்றைய தினம் முதல் தடுத்து வைக்கப்பட்டு உள்ளனர் என அனுராதபுர சிறைச்சாலை உதவி அத்தியட்சகர் தீர்ப்பாயத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

தொடர் விசாரணைகள் இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும். (வ-12-37)

## மாணவர்...

இணைப்பேச்சாளருமான தயாசிறி ஜயசேகர நேற்றுத் தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் உயர்கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல ஆகியோர் இந்த விடயம் தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்களை எதிர்வரும் அமைச்சரவைக் கூட்டங்களில் விளக்கமளிப்பர். பின்னர் அனைத்துத் தரப்பினருடன் கலந்துரையாடி இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். தீர்மானம் எடுக்கப்படும் போது எல்லோருரையும் நூறு வீதம் திருப்தியடைய வைக்க முடியாது. சிலருக்கு அது இழப்பீடாக அமையலாம். போராட்டத்தில் ஈடுபடும் மாணவர்கள் தங்கள் வேலை என்னவென்று முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். அத்துடன், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கமும் தமது வேலை என்னவென்று தெரிந்துகொள்ள வேண்டும்.

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி (சைட்டம்) கடந்த அரசின் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனவே, மாணவர்கள் நாட்டின் எதிர்காலத்தைக் கவனத்தில்கொண்டு செயற்பட வேண்டும் -என்றார். (த)

## மூன்று மாத...

சில தினங்களுக்கு முன்னர் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார். திருமதி அனந்தி சசிதரனை அமைச்சராக நியமிக்க முதலமைச்சர் விருப்பம் வெளியிட்டபோதும், அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை உள்ளமையால் தமிழ் அரசுக் கட்சி அதனை நிராகரித்திருந்தது. தமது தரப்பில் இருந்து மாகாண சபை உறுப்பினர் இ.ஆர்னோல்ட்டை அமைச்சுப் பதவிக்குத் தமிழ் அரசுக் கட்சி பரிந்துரை செய்திருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையுடனும் பங்காளிக் கட்சிகளுடனும் பேசியே அமைச்சர்கள் நியமனம் குறித்து முடிவு எடுக்கப்படும் என்று சில தினங்களுக்கு முன்னர் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார். திருமதி அனந்தி சசிதரனை அமைச்சராக நியமிக்க முதலமைச்சர் விருப்பம் வெளியிட்டபோதும், அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை உள்ளமையால் தமிழ் அரசுக் கட்சி அதனை நிராகரித்திருந்தது. தமது தரப்பில் இருந்து மாகாண சபை உறுப்பினர் இ.ஆர்னோல்ட்டை அமைச்சுப் பதவிக்குத் தமிழ் அரசுக் கட்சி பரிந்துரை செய்திருந்தது. ஆயினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையுடன் பேச்சு நடத்தாமலும், பங்காளிக் கட்சிகளுடன் ஆராயாமலும் முதலமைச்சர் தன்னிச்சையாக இந்த முடிவை எடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சராக, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஸ் பிரேமச்சந்திரனின் சகோதரரும், வடக்கு மாகாண சபை உறுப்பினருமான க.சர்வேஸ்வரனும், சமூகசேவை, மறுவாழ்வு, மகளிர் விவகார அமைச்சராக திருமதி அனந்தி சசிதரனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாண ஆளுநருடன் முதலமைச்சர் இந்த நியமனங்கள் தொடர்பில் தொடர்பு கொண்டு பேசியுள்ளார். இதன்போது ஆளுநர், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி இ.ஆர்னோல்ட்டை பரிந்துரைத்த கடிதத்தின் பிரதியை எனக்கு அனுப்பியுள்ளார்கள் என்று தெரிவித்துள்ளார். அதற்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அதனைக் கவனத்தில் கொள்ளத்தேவையில்லைஎன்றுகூறியுள்ளார்.

நாளை (இன்று) அமைச்சர்கள் பதவியேற்புக்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்று மதியம் ஆளுநருக்குத் தெரிவித்துள்ளார். இதன் பின்னர், நேற்று மாலை 6 மணிக்கு தனக்கு ஆதரவாக கையெழுத்திட்ட 15 பேரை மாத்திரம் அழைத்துச் சந்திப்பு நடத்தினார்.

சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கும்போது, எனது அமைச்சுக்கு மேலதிகமாக இரு அமைச்சுக்களையும் வைத்திருப்பதால் பல சிக்கல்கள் வருகின்றன. இதனால் தற்காலிக ஏற்பாடாக 3 மாதங்களுக்கு அமைச்சுப் பொறுப்புக்களை, திருமதி அனந்தி சசிதரனுக்கும், க.சர்வேஸ்வரனுக்கும் வழங்கவுள்ளதாகக் குறிப்பிட்டார். விவசாய அமைச்சு தன்னிடமே தொடர்ந்தும் இருக்கும் என்றும் முதலமைச்சர் இதன் போது குறிப்பிட்டார். (த-5)



கோப்புப் படம்

வடக்கு மாகாணத்திலுள்ள

# பண்ணைகளில் நிலவும் வெற்றிடங்கள் ஆள் சேர்ப்பின் பின்னர் நிரப்பப்படும்

யாழ்ப்பாணம், ஜூன் 29

வடக்கு மாகாணத்தில் உள்ள கால்நடைப் பண்ணைகளில் நிலவும் சிற்றூழியர்களுக்கான வெற்றிடங்கள் அனைத்தும் அரச ஆள்ச் சேர்ப்புக்கான மீள்பரிசீலனை நிறைவடைந்த பின்னர் நிரப்பப்படும் என்று வடக்கு மாகாண கால்நடை சுகாதார உற்பத்திகள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் எஸ்.வசீகரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கு மாகாணத்திலே கால்நடைப் பண்ணைகள் ஏராளம் உள்ளன. அங்கு கால்நடை உற்பத்திகள் நடைபெற்று பின்னர் பிராந்திய கால்நடை சுகாதார உற்பத்திகள் திணைக்களம் மூலமாகப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குக் கால்நடை ஊக்குவிப்புத் திட்டங்கள் வழங்கப்படுகின்றன.

தற்போது வடக்கு மாகாணத்தில் கால்நடைப் பண்ணைகளில் 60 சிற்றூழியர்களுக்கு வெற்றிடங்கள் உள்ளன. பண்ணைகளில் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்படும்போது நாம் ஒருவருட ஒப்பந்த அடிப்படையில் சிற்றூழியர்களை உள்வாங்கி பண்ணை முற்பணக் கணக்கின் ஊடாக அவர்களுக்கான சம்பளத்தை வழங்கி வருகிறோம்.

ஒரு வருடத்தில் இரண்டு லட்சம் கோழிக்குஞ்சுகளை உற்பத்தி செய்து பயனாளிகளுக்கு மானிய முறையில் வழங்கி வருகின்றோம். இதன் மூலமாகப் பயனாளிகளின் வாழ்வாதாரமும் உயர்கின்றது.

நடப்பு வருடத்தில் அச்சுவேலி பிராந்தியப் பண்ணை, வவுனியா பூந்தோட்ட பண்ணை ஆகியவற்றுக்கு மேலதிகமாகக் கோழிக்குஞ்சுகளை உற்பத்தி செய்வதற்காக 5 தொழிலாளர்களையும், செட்டிக்குளம், துணுக்காய், செக்கட்டிப்புலவு ஆகிய பண்ணைகளுக்கு 8 தொழிலாளர்களையும் உள்வாங்கியிருந்தோம் என்றார். (4,ரி)

சிறுவர் துஷ்பிரயோக வழக்கில்

# பொலிஸார் அறிக்கையிடவில்லை பிணை நிராகரிக்கப்பட்டு மறியல்

கிளிநொச்சி, ஜூன் 29

கிளிநொச்சி பளையில் சிறுவர் துர்நடத்தை குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு மறியலில் உள்ளவருக்கு எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் நீடிக்கப்பட்டது.

இந்த வழக்கு கிளிநொச்சி நீதிவான் மன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே மறியல் நீடிக்கப்பட்டது.

சிறுவர் துர்நடத்தை தொடர்பில் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

சந்தேகநபர் கடந்த ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவரைப் பிணையில் விடுவிக்குமாறு பிணை மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில், அலைபேசிமூலமாகத் தமக்கு அழைப்பு மேற்கொள்ளப்பட்டு சி.ஜ.டி என்று அறிமுகப்படுத்திக் கதைத்துள்ளனர் என்று பாதிக்கப்பட்ட சிறுவரின் பெற்றோர் சிறுவர் நன்னடத்தை அதிகாரிக்கும் பொலிஸாருக்கும் முறையிட்டனர்.

இந்த விடயம் நீதிமன்றின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டது. அது தொடர்பில் விசாரணை நடத்தி அறிக்கையிடுமாறு நீதிமன்று பொலிஸாருக்கு கடந்த இண்டு தவணைக்ளுக்கு முன்னர் பணித்திருந்தது.

ஆனால் பொலிஸார் குறித்த அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கவில்லை.

நேற்று மு.ப. 9மணியளவில் வழக்கு விசாரிக்கப்பட்டபோது அறிக்கை தொடர்பில் மன்று கேள்வியெழுப்பியது. பொலிஸாரிடமிருந்து உரிய பதில் கிடைக்கவில்லை.

அதனால் வழக்கை முற்பகல் 11 மணியளவில் விசாரணைக்கு எடுப்பாகக்கூறிய நீதிமன்று, அறிக்கை தொடர்பில் பதிலளிக்குமாறுகூறி வழக்கை ஒத்திவைத்தது.

பின்னர் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, விசாரணை நிறைவடையாததனால் அறிக்கை தயாரில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதனால் அடுத்த முறை அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு மீண்டும் பணித்தது நீதிமன்று. விசாரணை நிறை வடையவில்லை என்று பொலிஸார் கூறியதனால் சந்தேகநபரைப் பிணையில் விடுவிக்க முடியாது என்று தெரிவித்த நீதிமன்று பிணை மனுவைத் தள்ளுபடி செய்தது. (4,6)

பொதுக்கிணறுகளில்

# குடிதண்ணீர் எடுக்க கடற்படைக்குத் தடா

## காரைநகர் ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் தீர்மானம்



கோப்புப் படம்

காரைநகர்; ஜூன் 28

காரைநகர் பிரதேசத்தில் உள்ள பொதுக் கிணறுகள் மற்றும் மக்களின் கிணறுகளில் கடற்படையினர் தண்ணீர் எடுக்கக்கூடாது என காரை நகர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

காரைநகர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆகியோரின் இணைத் தலைமையில் கூட்டம் இடம்பெற்றது. இந்த கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானம் எடுக்கப்பட்டது.

காரைநகர் பிரதேசத்தில் இருக்கின்ற பொதுக் கிணறுகளில் நாளாந்தம் கடற்படையினர் அதிகளவான குடிதண்ணீரை எடுத்துச் செல்வதனால் அப்பகுதியின் நீர்வளம் பாதிக்கப்படுவதுடன் பொதுமக்கள் நீரை பெற்றுக் கொள்வதிலும் சவால்கள் ஏற்பட்டுள்ளன. என்றுஅப்பிரதேச மக்கள் சுட்டிக்காட்டினர். இது தொடர்பில் கூட்டங்க ளில் கதைக்கப்படுகின்ற போதிலும் இன்றுவரை அதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை, பொது மக்களின் பிரச்சனை தொடர்பில் கதைக்க இங்கு அனைத்து தரப்பினரும் கூடியுள்ளநிலையில் பிரதேச சபையின் செயலாளர் குறித்த கூட்டத்துக்கு சமுகமளிக்காது தனது பிரதிநிதியை அனுப்பி வைத்துள்ளமை வருத்தத்துக்குரிய விடயமாகும் என தெரிவித்தனர். இதன் போது கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன்;

“பொதுமக்களின் கிணறுகள் மற்றும் பொதுக் கிணறுகளில் கடற்படையினர் நாளாந்தம் நீர் எடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அத்துடன் பாவனைக்கு உகந்த கிணறுகள் துப்பரவு செய்யப்பட்டு மக்களுக்குத் தேவையான குடிநீரை வழங்க பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும். பிரதேச சபையினரால் முடியாது என்றால் எம்மிடம் தெரிவியுங்கள் நாம் தனிப்பட்ட ரீதியில் துப்பரவு செய்து தருகின்றோம். பிரதேச சபையினர் மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான முறையில் செயற்பட வேண்டும். இந்தக் கூட்டம் மக்களின் பிரச்சனைகளை தீர்க்கவே கூட்டப்பட்டதாகும். இந்நிலையில் செயலாளர் வராமல் பிரதிநிதியை அனுப்பியுள்ளார். இந்தக் கூட்டத்தில் வரவினை பதிவு செய்வதற்காக சமூகமளிக்காமல் கடமைகளையும் செய்யுங்கள்; என அறிவுறுத்தினார். அத்தோடு காரைநகர் பிரதேசத்தின் பொதுக் கிணறுகளில் கடற்படை நீரை எடுக்க முடியாது என தீர்மானம் எடுக்கப்படுவதாக கூட்டத்தில் அறிவித்தார். இந்த தீர்மானத்தை உடனடியாக யாழ்ப்பான மாவட்ட கடற்படைத் தளபதிக்கு எழுத்துமூலமாக அறிவிக்க வேண்டும் என காரைநகர் பிரதேச செயலாருக்கு உத்தரவிட்டார். மேலும் கடற்படையினர் காரைநகரில் நீர் எடுப்பதை விடுத்து மாதகல், சுன்னாகம் போன்ற இடங்களில் நீரை எடுங்கள் என்றும் கூட்டத்தில் தெரிவித்தார்.

காரைநகரில் நன்னீர் காணப்படும் பிரதேசங்களில் கிணறுகளை அமைப்பதன் ஊடாகவும் குளங்களை ஆழமாக்குவதன் ஊடாகவும் நீரினைத் தேக்கி வைத்து மக்கள் பெற்றுக்கொள்ள உதவவேண்டும் என ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கே.சதாசிவம் கோரிக்கை விடுத்தார். காரைநகரில் வெங்காயப் பிட்டிகளுக்காக அமைக்கப்பட்ட துரவுகளை ஒன்றினைத்து குளம் ஒன்றினை 35 மில்லியன் ருபா செலவில் அமைப்பதற்கும் காரைநகர் பிரதேச உவர் நீர் தடுப்பணையினை 30 மில்லியன் ரூபா செலவில் அமைப்பதற்கும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டு இதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்குமாறு யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பிரதேச செயலரிடம் தெரிவித்தார். ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு கடற்படை அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் வருகை தராமையைக் கண்டித்த அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் அடுத்து வரும் கூட்டங்களுக்கு அவர்கள் அழைக்கப்பட்டால் தான் பொது மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும் எனவும் சுட்டிக்காட்டினார். (21-8-250)

# பாலியல் தொழில் குற்றச்சாட்டில் கைதாகிய பெண்களுக்குப் பிணை

கிளிநொச்சிஇ யூன் 29

கிளிநொச்சி விநாயகபுரம் பகுதி வீடொன்றில் பாலியல் தொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நான்கு பெண்களும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த வழக்கு கிளிநொச்சி நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது. பாலியல் தொழில் இடம்பெற்றதாகக் கூறப்பட்ட வீட்டில் இருந்த குற்றச்சாட்டில் கடந்தமாதம் 17 ஆம் திகதி நால்வரும் கைதாகி மறியலில் இருந்தனர்.

அவர்களைத் தலா 50 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல உத்தரவிட்டதுடன் மாதத்தின் இறுதி வெள்ளிக்கிழமை மன்றில் கையொப்பமிட வேண்டும் என்றும் நீதிமன்று உத்தரவிட்டது.

இது போன்ற சம்பவங்கள் இனியும் நடந்தால் பிணை மறுக்கப்பட்டு விசாரணை முடியும்வரை சிறையில் இருக்கவேண்டும் எனவும் அவர்கள் எச்சரிக்கப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

குறித்த வீட்டில் பாலியல் தொழில் இடம்பெற்று வருவதாக கிளிநொச்சி பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய சிறப்புப் பொலிஸ் குழு குறித்த வீட்டை முற்றுகையிட்டது. அங்கு தங்கியிருந்து விடுதியை நடத்தி வந்த பெண்ணும், யுவதிகள் மூவருமாக நால்வர் கைதுசெய்யப்பட்டனர். இவர்களில் இரு யுவதிகள் கிளிநொச்சியைச் சேர்ந்தவர்கள். ஒருவர் வவுனியாவைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (4-6)

# குழாய்க்கிணறு அமைப்பவர்களைக் கட்டுப்படுத்த நீதிமன்ற நடவடிக்கை

## கிளிநொச்சிச் செயலகம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 29

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரிக்கும் குழாய்க் கிணறு அமைக்கும் நடவடிக்கைகளை நீதிமன்றின் ஊடாகக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவு எட்டப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலகத்தில் மாவட்ட மேலதிகச் செயலர் சத்தியசீலன் தலைமையில் சில நாள்களுக்கு முன்னர் இடம்பெற்றது. அதில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அனுமதியின்றி தன்னிச்சையாகக் குழாய்க்கிணறுகள் அமைக்கும் பணிகள் மிக வேகமாக இடம்பெறுகின்றன.

அனுமதியற்ற குழாய்க்கிணறுகளினால் நிலத்தடி நீர் மாசடைவதோடு நீர் வற்றிச் செல்கிறது. இந்த விடயத்துக்கு உடனடித் தீர்வை எட்ட வேண்டியுள்ளது. அனுமதியின்றிக் குழாய்க் கிணறுகளை அமைப்பவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நீதிமன்றின் ஊடாக நடவடிக்கை எடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று கிளிநொச்சி நகரின் மத்தியில் அமைந்துள்ள முதன்மையான குளத்தினைச் சீரமைக்க வேண்டிய தேவைகள் தொடர்பில் தொடர்ந்தும் சுட்டிக்காட்டப்படுகிறது. அதற்கான செலவு மதிப்பீட்டினை உடனடியாக நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் சமர்ப்பிக்கும் பட்சத்தில் அதற்கான நிதியைப் பெறுவதற்கான ஏற்பாட்டினை மாவட்டச் செயலகம் பொறுப்பேற்றுக்கொள்ளும் எனவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (4-101)

## நோயற்று நீண்ட ஆயுள் பெற்றிட

- காலை உணவை கட்டாயம் எடுத்தல் நன்று.
- சரியான அளவுகளில் உட்கொள்ளல்.
- ஆரோக்கியமான உணவுகளைத் தேர்வு செய்து உட்கொள்ளல்.
- ஊட்டச்சத்து இழப்பற்ற சமையல் முறை.
- சீனி, உப்பு, கொழுப்பு, உணவுகளில் கட்டுப்பாடு.
- தினமும் உடற்பயிற்சி.
- உற்சாகமான மனநிலை.

*தகவல் சு.ம.அ.பணிமனை, யாழ்.மாநகரசபை*

# தண்டனைக் காலம் நிறைவடைந்த அரசியல் கைதிகளை விடுவிக்கவேண்டும்

## சிறைச்சாலை அமைச்சிடம் சாள்ஸ் எம்.பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 29
''மாலைதீவு அரசால் 15 ஆண்டுகாலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு இலங்கை அரசிடம் ஒப்படைக்கப்பட்ட மூன்று அரசியல்கைதிகளின்தண்டனைக் காலம் நிறைவுற்ற தனால் அவர்களை விடுவிக்க உடனடியாக நடவடிக்கை எடுங்கள்".

இவ்வாறு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதனிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் எழுத்து மூலமாகக் கோரியுள்ளார். அமைச்சரின் அலுவலகத்துக்கு நேரடியாகச் சென்று இந்தக் கோரிக்கை மனுவை அவர் கையளித்தார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மேலும் தெரிவித்ததாவது:

மாலைதீவு அரசால் 15 ஆண்டுகாலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு இலங்கை அரசிடம் ஒப்படைக்கப்பட்ட மூன்று அரசியல் கைதிகளின் தண்டனைக் காலம் நிறை வுற்றுள்ளது. அவர்களை விடுவிக்க அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

2007 ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி மாலைதீவுக் கடற்பிரதேசத்தில் வைத்து சந்தேகத்தின்பேரில் இலங்கையின் வடபகுதி இளைஞர்கள் மூவர் அந்த நாட்டு கடற்படையால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் தொடர்பில் அந்த நாட்டுப் பொலிஸார் மாலைதீவு நீதிமன்றில் வழக்குத் தொடுத்தனர்.

குறித்த மூவரையும் குற்றவாளி இனங் கண்ட மாலைதீவு நீதிமன்றம் அவர்களுக்கு 15 ஆண்டுகால சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது.

குறித்த கைதிகளின் தண்ட



னையை இலங்கைச் சிறையில் அனு பவிக்கலாம் என்பதன் அடிப்படையில் இலங்கை அரசிடம் உத்தியோக பூர்வமாக மூவரும் ஒப்படைக்கப்பட்டனர்.

இவ்வாறு கையளிக்கப்பட்ட கைதிகள் இன்றுவரை இலங்கைச் சிறைகளிலேயே தண்டனையை அனுபவித்து வருகின்றனர்.

மாலைதீவு அரசினதும் இலங்கை அரசினது கணக்கின்படி ஓர் ஆண்டு சிறைத் தண்டனை என்பது தொடர்ச்சியாக அனுபவிப்பதாயின் 8 மாதங்களும் 10 நாள்களும் மட்டுமே. எஞ்சிய நாள்கள் விடுமுறைக் கழிவாகவே கருதப்படுகின்றது.

2007 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரையில் தொடர்ச்சியாக சிறையில் வாடும் குறித்த மூன்று இளைஞர்களினதும் 15 ஆண்டுகளுக்கான காலம் கடந்த மாதமே நிறைவு பெற்றுள்ளதனால் அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு குறித்த கைதிகளின் பெற்றோர் என்னிடம் வைத்த கோரிக்கையின் பெயரில் இவ்விடயம் சிறைச்சாலைகள் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

குறித்த கோரிக்கைகள் தொடர்பில் சட்டமா அதிபர் மற்றும்சிறைச்சாலைஆணையாளர் ஆகியோருடன் கலந்து பேசி விரைவில் பதிலளிப்பதாக அமைச்சர் பதிலளித்துள்ளார் என்றார். (4-101)

# வடக்கு மாகாணத்துக்கான தகவல் முறைமை விரைவில்

யாழ்ப்பாணம், ஜூன்29
வடக்கு மாகாண தகவல் முறைமை விரைவில் செயற்படுத்தப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

வடமாகாண பிரதி தலைமை செயலாளர் (நிதி) எஸ்.யு. சந்திரகுமாரன் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார். வடக்கில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிமனை, மாநகரசபை, நகரசபை, பிரதேசசபைகள் உள்ளிட்ட அனைத்து உள்ளூராட்சி சபைகள் தொடர்பான சகல விவரங்களும் தகவல் முறையில் உள்ளடக்கப்படவுள்ளன. ஒவ்வொரு நிறுவனங்களின் தூரநோக்கு, பணிக்கூற்று, நிறுவன அடைவுகள், எதிர்கால அடைவுகள் மற்றும் சகல திணைக்களத் தலைவர்களின் விவரங்களும் உள்ளடக்கிய தகவல் முறைமையே( MIS) விரைவில் வடக்கில் செயற்படுத்தப்படவுள்ளது- எனத் தெரிவிக்கப்பட்டது. (21-50)

# பயிற்சிக்கான அலுவலர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்

யாழ்ப்பாணம், ஜூன்29
வடக்கு மாகாண அலுவலர்களின் செயற்திறனைக் கட்டியெழுப்புவதற்காக, வடக்கு ஆளணியும் பயிற்சியும் திணைக்களத்தால் மூன்றாம் காலாண்டில் பயிற்சிகளுக்கான அலுவலர்கள் சேர்த்துக்கொள்ளப்பட உள்ளனர் வக்குஆளணியும்பயிற்சி யும் பிரதித் தலைமைச் செயலாளர் திணைக்கள அ. சிறிபால சுந்தரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில்அவர்மேலும் தெரிவித்ததாவது: வடக்கு மாகாணத்தில் உள்ள சகல அமைச்சின் செயலாளர்கள், பிரதித் தலைமைச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஊடாக விவரங்களை பெறுவதற்கென 40 முக்கியமான அரச முன்னுரிமை பணிகளை முன்னெடுப்பதற்கான பயிற்சிகளை வழங்கும் பொருட்டு அதன் பயிற்சி தலைப்புக்கள் குறிப்பிடப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. திணைக்களத் தலைவர்கள் பயிற்சிக்காக அலுவலர்களைத் தெரிவு செய்யும் போது தேவைப்பாட்டுக்கு ஏற்ப பொருத்தமான அலுவலரை பட்டியலில் சேர்க்க வேண்டும். வருடாந்த செயலாற்றுகை மதிப்பீட்டில் உள்ள அலுவலரின் கோரிக்கை கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே பயிற்சி நெறிகளில் இதுவரை பங்குபற்றாத உத்தியோகத்தர்களை இனம் கண்டு அவர்களின் பங்களிப்பை உறுதி செய்தல் வேண்டும்- என்றார். (21-50)

# வடக்கில் வேலையற்றோருக்கு சிங்களப் பயிற்சி வகுப்புக்கள்

## பதிவு செய்யக்கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 29
வடக்கில் வேலையற்றிருக்கும் இளையோருக்கான சிங்களப் பயிற்சி வகுப்புகளை மாவட்ட ரீதியில் நடத்தத்திட்டமிடப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம் கரித்தாஸ் கியுடெக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இதனை முன்னெடுக்கிறது.

முதலாவது பயிற்சி வகுப்புகள் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

வாரநாள்களில் 2 தினங்கள் பி.ப 2 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை பயிற்சிகள் ஆறு மாத காலத்துக்கு நடத்தப்படும். பயிற்சிகளை நிறைவு செய்வோருக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

மாவட்டத்தைச் சேர்ந்த வேலையற்றிருக்கும் இளையோர் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தில் நேரடியாக அல்லது 021228 3363 என்ற இலக்கத் தொலைபேசி மூலமாகவோ தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

பதிவு இலக்கத்தின்படி 30 பேர் மட்டும் பயிற்சியில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4 - 9)

# சுன்னாகம் கழிவு ஒயில் வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 29
சுன்னாகம் உள்ளிட்ட இடங்களில் நிலத்தடி நீரில் கழிவு எண்ணை கலந்த வழக்கு விசாரணை எதிர்வரும் செப் ரெம்பர் மாதம் 29 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. இந்த வழக்கு மல்லாகம் நீதிவான் ஏ.ஜூட்சன் முன்னிலையில் நேற்றுமுன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்டது.

மின் உற்பத்தி நிலையம் சார்பில் தென்பகுதியிலிருந்து வந்திருந்த சட்டத்தரணி மன்றில் முற்பட்டார். சம்பந்தப்பட்ட அரச திணைக்களங்களின் அதிகாரிகளும் அவர்கள் சார்பில் அரச சட்டத்தரணியும் முற்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு உயர்நீதிமன்றில் விசாரணையிலுள்ளதனால் மல்லாகம் நீதிமன்ற வழக்குத் தவணையை நீண்ட நாள்களுக்குத் தவணையிடுமாறு தென்பகுதி சட்டத்தரணி கோரியிருந்தார். அதன்படி வழக்கு மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்

# இரண்டாம் மொழிக் கற்கைக்கு மாகாண அமைச்சு நடவடிக்கை

## விண்ணப்பிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 29
2017 அல்லது 2018 கல்வியாண்டு மாணவர்களுக்கான இரண்டாம் மொழியாக தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில பாடநெறி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

"வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இயங்கும் மும்மொழிக் கற்கை நிலையத்தில் இவை ஆரம்பிக்கப்படும்.

இந்தக் கற்கை நெறியில் இணைய விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களை மும்மொழிக் கற்கை நிலையத்திலும் மற்றும் கல்வி அமைச்சின் இணையத்தளத்தின் ஊடாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

இரண்டாம் மொழி சித்தியடைய வேண்டிய அரச அலுவலர்கள், மூன்றாம் நிலைக் கல்வி பயிலும் மாணவர்கள், பாடசாலையிலிருந்து விலகியோர் மற்றும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகள் கற்பதற்கு ஆர்வமுள்ளோர் இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள்.


ஜி.சி.ஈ. சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்தமை அடிப்படைத் தகுதியாகக் கருதப்படும். ஒருவர் ஒரு கற்கைநெறியை ஒரு முறை மாத்திரம் தொடர முடியும்.

கற்கைநெறியைத் தொடர விரும்புபவர்கள் கற்கை நிலைய ஒழுங்கு விதிகளுக்கமைவான உடன்பாடு ஒன்றைப் பணிப்பாளருடன் செய்துகொள்ளுதல் வேண்டும்.

இந்த விண்ணப்பப் படிவத்தை முழுமை செய்து எதிர்வரும் ஜூலை மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம் கலட்டி மொதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை இராமநாதன் வீதி, மும்மொழிக் கற்கை நிலையம் என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்க முடியும்" என்று வடக்கு மாகாண இளைஞர் விவகாரம், கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார். (4)

## திண்மக் கழிவுகளை அகற்ற கொரியத் தொழில்நுட்பம்

### அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 29
இலங்கையிலுள்ள திண்மக்கழிவுகளைக் கொரிய தொழில்நுட்பமொன்றின் மூலம் அகற்றுவதற்கான திட்டமொன்று விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மாநகரங்கள் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்தத் திட்டத்துக் கான 125 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. கொரிய தொழில்நுட்பம் மூலம் திண்மக் கழிவுகள் பதனிடப்பட்டு உயர் அழுத்தத்தின் மூலம் உறுதியாக்கப்பட்டு தொடருந்துகள் மூலம் புத்தளத்துக்கு கொண்டு செல்லப்படும்.

அங்கு பல தசாப்த காலமாகப் புத்தளம் சீமெந்து தொழிற்சாலைக்காகப் பெருமளவு சுண்ணாம்புக் கற்கள் தோண்டப்பட்டதால் ஏற்பட்டிருக்கும் பெரும் குழிகள் இவற்றால் நிரப்பப்படும். இந்தத் திட்டத்தின் மூலம் சுற்றாடலுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் திண்மக் கழிவுகளை அகற்றமுடியும் - என்றார். (த-ய)

## அரச தலைவர் நிதியத்தில் கையிருப்பு குறைவடைவு

### நெருக்கடியில் மைத்திரிபால

கொழும்பு, ஜூன் 29
அரச தலைவர் நிதியத்தின் நிதி கையிருப்புவெகுவாகக்குறைந்துள்ளமையால் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நெருக்கடிக்கு முகம்கொடுக்க நேரிட்டுள்ளதாகக் கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அரச தலைவர் நிதியத்தில் குறிப்பிடத்தக்கஅளவுநிதி குறைவடைந்துள்ளதால் நிதியத்தால் மேற்கொள்ளப்படும் உதவி நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்படவுள்ளது.

இந்த நிதி மூலம் குறைந்த வருமானத்தில் வாழும் குடும்பங்களின் பிள்ளைகளுக்குச் சத்திர சிகிச்சை செய்வதற்கு உதவிகள் வழங்கப்படுகின்றன.

இந்த வருடம் நிறைவடை வதற்கு முன்னர் நிதியத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார். அதற்காக மூன்று திட்டங்களை அவர் முன்வைத்துள்ளார்.

தொலைபேசிகள் மற்றும் தொடர்பாடல் வரி மற்றும் அரசதலைவர் நிதியத்துக்கு நிதி வழங்கும் அபிவிருத்தி லொத்தர் சபைகளின் வரியை விடுவித்து வருமானத்தை அதிகரித்தல் மற்றும் திறைசேரியின் நிதியைப் பெற்றுக் கொள்வதே இந்தத் திட்டங்களாகும் என மேலும் குறிப்பிட்டுள்ளது. (ய)

## சைட்டம் குறித்து இன்று முடிவு

கொழும்பு, ஜூன் 29
மாலம்பே தனியார் மருத்துவ கல்லூரி தொடர்பில் இன்று இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய செயற்குழுக் கூட்டம் இன்று நடைபெறும்.

மாலம்பே தனியார் மருத்துவ கல்லூரி தொடர்பில் அரசு சரியான நடவடிக்கை எடுக்காவிட்டால் அடுத்த கட்ட நடவடிக்கைகளை எவ்வாறு எடுப்பது என்பது குறித்து இதன்போது தீர்மானிக்கப்பட உள்ளது. (த-ய)

## ஐ.தே.க. மீது அரசு நம்பிக்கையை இழக்கக்கூடாது

### கூறுகிறார் அமைச்சர் ரவி



கொழும்பு, ஜூன் 29
ஐக்கிய தேசியக் கட்சியினர் அரசுமீது கொண்டுள்ள நம்பிக்கையை இழக்கச் செய்துவிடக் கூடாது என அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரசு கடினமான பயணத்தை மேற்கொண்டு கட்சியினரின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற முயற்சித்து வருகின்றது .

பல்வேறு குழுக்களின் தேவைகளுக்கு அமைய இளைஞர்கள் தமது எதிர்காலத்தை அழித்துக்கொள்ளத் தயாராக இல்லை. பல்வேறு அரசியல் குழுக்கள் தமது அரசியல் தேவைகளுக்காக இளைஞர்களைத் தூண்டி, அவர்களின் எதிர்காலத்தை அழிக்க முயற்சித்து வருகின்றன. எனினும் இளைஞர்கள் அதற்கு தயாரில்லை என்றார். (த-ய)

## அரசு இனவாதத்துடன் செயற்பட்டு வருகிறது

### ஜோன்ஸ்டன் எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன் 29
இந்த அரசு இனவாத அடிப்படையில் செயற்பட்டு வருவதாகக் கூட்டு எதிர்க் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ குற்றம் சுமத்தியுள்ளார்.

தம்பதெனியவில் நடைபெற்ற மத வழிபாட்டு நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றியபோது அவர் இதனைக் குறப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
இனவாதத்தைத் தூண்டவேண்டாம் எனக் கூறிக்கொண்டே இந்த அரசு தேரர்களைச் சிறையிலடைக்கின்றது. மகிந்தவுடன் இருக்கும் அனைவரையும் சிறையில் போட்டார்கள். அவரது பிள்ளைளையும் சிறையில் அடைத்தார்கள். எனினும் அவரது தன்னம்பிக்கையை கடுகளவேனும் குறைத்துவிட முடியாது.

இந்த அரசு அபிவிருத்தியை நிறுத்தி விட்டுப் பழிவாங்கும் நடவடிக்கைகளில் தீவிரம் காண்பித்து வருகின்றது. தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் மக்கள் தகுந்த பாடத்தை புகட்டுவார்கள் - என்றார். (த-ய)


# கண்ணீர்க் காணிக்கை

## வேலுப்பிள்ளை அரசறட்ணம்





நல்லையம்பதியின் எழில் அரசியாம் அன்னை வீரமாகாளியின் இராஜகோபுர திருப்பணியை யாழ் மண்ணிலே முதல் முதலாக தனிப்பட்ட உபயமாக ஏற்று நிறைவேற்றி வைத்து வீரமாகாளித்தாயின் கோபுர தரிசனத்தின் ஊடாக எம்மை யெல்லாம் கோடி புண்ணியம் பெற வைத்த பெருந்தகை **ஸ்ரீமதி இராஜேஸ்வரி அம்மா** அவர்களின் கணவர் காரை நகரை பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தியை வதிவிடமாகவும் தற்போது நியூசிலாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட **வேலுப்பிள்ளை அரசறட்ணம்** அவர்கள் இறைவனடி சேர்ந்த செய்தியறிந்து எம் விழிகள் விழிநீர் சொரிந்து எம் மனம் உருகி நிற்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயர் கொண்டிருக்கும் ஸ்ரீமதி இராஜேஸ்வரி அம்மா அவர்களுக்கும் அவர்தம் பிள்ளைகளின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை கூறி நிற்கின்றோம். அன்னாரின் ஜீவாத்மா அன்னை வீரமாகாளியின் பாதக்கமலங்களை சரண்புகுந்து சாந்தியமாக இளைப்பாற அன்னை வீரமாகாளி தாயை பிரார்த்தனை செய்து நிற்கின்றோம்.

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

**வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய**
**கொடியேற்ற திருவிழா, தொட்டித்திருவிழா, மஞ்சத்திருவிழா**
**சூரன்போர் திருவிழா உபயகாரர்களும்**
**வீரமாகாளி தாயின் அருள் ஆட்சி நிலவுகின்ற**
**வண்ணை மாநகர் - நல்லையம்பதியின் கிராம மக்களும்**

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
23 . 07 . 1953

மறைவு
30 . 05 . 2017

### அமரர் சபாபதி துரைரட்ணம்

திதி : வளர்பிறை பஞ்சமி

கடந்த 30.05.2017 அன்று மறைந்த எமது குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (29.06.2017) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின் றோம். அவர் நோயுற்ற வேளை அவரைப் பராமரித்த ஊழியர்களுக்கும் அவரது மறைவுச் செய்தி அறிந்து நேரிலும். தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டும் மலர் வளையங்கள் சாத்தியும் கண்ணீர் அஞ்சலி பனர்களை பிரசுரித்தும் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித் துக் கொள்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி !!சாந்தி!!!

கருவேப்புலம் லேன்,
கொக்குவில் கிழக்கு.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



தோற்றம்
10
01
1921

மறைவு
26
06
2017

திருமதி
### தம்பிராஜா நாகரத்தினம்

யாழ். கட்டுவன் மயிலிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும், ஊரங்குனையை வதிவிடமாகவும், கனடா Scarborough ஐ வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராஜா நாகரத்தினம் அவர்கள் 26-06-2017 திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னார், காலஞ்சென்ற சின்னத்தம்பி, சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பிராஜா அவர்களின் பாசமிகு மனைவியும், அரியரத்தினம், அரியமலர், இராசமலர், தவரத்தினம், ஜெயரத்தினம், இந்துமலர், பிரதீபரத்தினம் (S.K.T Jewellers & Textiles) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, அருணாசலம், சுந்தரம், லெட்சுமி, சின்னம்மா, இராசரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான பரமநாதர், ஆச்சிமுத்து, சின்னத்துரை, தம்பிப்பிள்ளை, சௌபாக்யவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், கிருஷ்ணகுமாரி, சீவரத்தினம், நாகபாலன், கௌசலை, நிரஞ்சினி, கணேசலிங்கம், கார்த்திகாயினி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற இராசம்மா சின்னையா அவர்களின் மைத்துனியும், தவஜினி (Ranga Fernando), ராஜினி, அனந்த் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், தமயந்தி (காண்டீபன்), கர்ணன், கர்ஷா, தபித்தா, அஜித்தா, அஞ்சனா, அர்ஜென் ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், அனுத், அஹானா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் வெள்ளிக்கிழமை 30.06.2017 பி.ப 5.00 - பி.ப0 9.00 வரையும் சனிக்கிழமை 01.07.2017 பி.ப 04.00 - பி.ப08.00 வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு ஞாயிற்றுக்கிழமை 02.07.2017 மு.ப 10.00 - பி.ப 12.00 வரை கிரியைகள் நடைபெற்று பி.ப 12.00 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பிரதீபன் (கனடா) செல்லிடப்பேசி : + 14165439355
அரியரத்தினம் (மகன்) - கனடா செல்லிடப்பேசி : +16472905619
அரியமலர் (மகள்) - கனடா செல்லிடப்பேசி : +16472896358
இராசமலர் (மகள்) - பிரித்தானியா தொலைபேசி : +441293786491
தவரத்தினம் (மகன்) - கனடா தொலைபேசி : +14168910974
ஜெயரத்தினம் (மகன்) - கனடா தொலைபேசி : +14162872018
இந்துமலர் (மகள்) - கனடா தொலைபேசி : +14162810719

தகவல் :– குடும்பத்தினர்

# கட்சிக்குள் உளவு பார்க்கவில்லை

## குற்றச்சாட்டை மறுக்கிறார் கம்பன்பில

கொழும்பு,ஜூன் 29
ஜாதிக ஹெல உறுமயவில் ஒற்றராகச் செயற்பட்டதாகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டைபிவித்துரு ஹெல உறுமயவின் செயலாளர் உதய கம்மன்பில மறுத்துள்ளார்.



நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
எனினும் ஜாதிக ஹெல உறுமயவில் ஒரு உறுப்பினர் ஒற்றராக செயற்பட்டதாக அவர் குறிப்பிட்டார். பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் அதிகாரியாகச் செயற்பட்ட ஒருவர் 1988ஆம் ஆண்டில் ஜாதிக ஹெல உறுமயவில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.
அவர் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் பரிந்துரையின் கீழ் கட்சியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (த-ய)

## மூன்றாம் ஆண்டு நினைவுகள்



திருமதி
### மாணிக்கம்மா கந்தசாமி

திதி : ஷஷ்டி

பிறப்பு
22.10.1947

இறப்பு
04.07.2014

என்றும் எம் நினைவுகளில்....

குடும்பத்தினர்.
மந்துவில் கிழக்கு,
கொடிகாமம்.

# வைத்தியசாலை ஆய்வுகூடங்கள் 24 மணி நேரமும் திறந்திருக்கும்

## டெங்குநோய் குருதிப் பரிசோதனைக்காக


கொழும்பு, ஜூன் 29
நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகமாகியிருப்பதால் அவர்களின் குருதிப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்குச் சகல அரச வைத்தியசாலை ஆய்வுகூடங்களையும் 24 மணித்தியாலங்களும் திறந்துவைக்குமாறு சுகாதார அமைச்சு சகல அரச வைத்தியசாலைப் பணிப்பாளர்களுக்கும் உத்தரவு பிறப்பித்துள்ளது.
கடந்த திங்கட்கிழமை சுகாதார அமைச்சின் செயலாளர் ஜானக சுகததாசவின் தலைமையில் நடைபெற்ற டெங்கு ஒழிப்புக் குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.
இந்தக் கூட்டத்தில் ஜானக சுகததாச தெரிவித்ததாவது:
நாட்டின் 14 மாவட்டங்களில் டெங்கு தீவிரமடைந்துள்ளது.
கொழும்பு மாவட்டமே அதிகப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது.
இந்த மாவட்டத்தில் இதுவரை 15,100 பேர் இந்த நோய்க்கு இலக்காகியுள்ளனர்.
இந்த நோயின் தீவிரத்தைக் கட்டுப்படுத்துவதற்காக முன்னர் மாகாண சபைகளால் நிராகரிக்கப்பட்டுவந்த பல கிராமிய வைத்தியசாலைகளை சுகாதார அமைச்சு பொறுப்பேற்றுள்ளது. அங்கு தேவையான மருத்துவ நிபுணர்களையும் தாதியர்களையும் ஆய்வுகூட ஊழியர்களையும் சேவையில் அமர்த்தியுள்ளது.
மருந்துகளும் மருத்துவ உபகரணங்களும் போதியளவு வழங்கப்பட்டுள்ளன.
எவ்வாறாயினும் இந்த நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்கான குருதிப் பரிசோதனை மிக முக்கியம் என்பதால் அதைத் துரிதப்படுத்துவதற்காகவே ஆய்வு கூடங்களை 24 மணித்தியாலங்களும் திறந்துவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது -என்றார்.(த-ய)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் வவுனியா திருநாவற்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் அம்பலம் முத்துக்குமாரு

திதி : 29.06.2017



அன்பின் இலக்கணமாய் பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய் நற்குணங்களில் சிகரமாய்
எங்கள் குடும்பத் தலைவனாய் வாழ்வின் வழிகாட்டியாய்
வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே நீங்கள்
எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும்
உங்கள் நினைவுகள் எங்களை விட்டு நீங்காது
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றொன்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.
இல. 188, திருநாவற்குளம்,
வவுனியா.

மலர்வு
12.07.1927

உதிர்வு
10.07.2016

## ஈராண்டு நினைவஞ்சலி



### அமரர் சின்னத்துரை ஸ்ரீஸ்கந்தராஜா

(ஓய்வுபெற்ற தொலைதொடர்பு பரிசோதகர், ஸ்ரீலங்கா ரெலிகொம்)

மண் மகிழ
08.03.1954

கண் நெகிழ
22.06.2015

ஈராண்டுகள் ஆனாலும் ஈரவிழிகள்
உங்கள் நினைவால் நீர் வழிகின்றன...
அன்புக்கு அணையா விளக்காய்
பாசத்திற்கு நீங்கா கலங்கரை விளக்காய்
எங்களோடு உறவாடி மகிழ்ந்த உங்கள்
புன்னகை வதனம் எம்மை விட்டு அகலாது நீங்கள் சென்ற பின்
நாம் அடைந்த கவலையை வார்த்தைகளால் கூறிவிடமுடியாது எனினும்
நீங்கள் எம்முடன் வாழ்வீர் எனும்
நம்பிகையுடன் செல்கிறது எம் நிலையற்ற வாழ்க்கைப்பயணம்
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம் உங்கள் ஆத்மா சாந்தி அடைந்து அமைதி பெற!!

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

என்றும் உங்கள் நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்.

# சட்டவிரோத ஆள்கடத்தலை தடுக்கக் கோருகின்றது அமெ.

கொழும்பு, ஜூன் 29


சட்டவிரோத ஆள்கடத்தல்களைத் தடுக்க இலங்கை அரசு கூடுதல் முனைப்புக் காட்ட வேண்டும்என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. சட்டவிரோத ஆள்கடத்தல்களைத் தடுப்பதற்கான குறைந்தபட்ச தர நிர்ணயங்களை இலங்கை பின்பற்றத் தவறியுள்ளதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. சட்டவிரோத ஆள்கடத்தல்கள் தொடர்பில் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டுள்ள சிறப்பு அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆள்கடத்தல்களைத் தடுத்து நிறுத்த இலங்கை அரசு மேலும் முனைப்பு காட்டவேண்டுமென அதில் வலிறுத்தப்பட்டுள்ளது. சாட்சியாளர்கள் மற்றும் சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கும் நோக்கில் ஓர் சிறப்புப் பொலிஸ்பிரிவு ஒன்றை இலங்கை அரசு உருவாக்க வேண்டுமென்றும் அமெரிக்கா கோரியுள்ளது. (த-ய)

## மேல் மாகாணத்தில் டெங்குநோய் தீவிரம்

### 70,100 பேர் பாதிப்பு; 209பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 29

2017ஆம் ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் 70 ஆயிரத்து 100 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மேல் மாகாணத்தில் மாத்திரம் 29 ஆயிரத்து 320 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். டெங்குத்தொற்று குறித்த மொத்தப் பாதிப்புகளில் நூற்றுக்கு 45 சதவீதமானோர் மேல் மாகாணத்தில் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, மேல்மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 15 ஆயிரத்து 79 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

டெங்குநோயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 209ஆக அதிகரித்துள்ளதாகச் சுகாதார அமைச்சின் டெங்கு ஒழிப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

டெங்கு பரவல் கடுமையாக அதிகரித்து வரும் நிலையில் அனைத்து வைத்திய சாலைகளிலும் டெங்கு குருதிப் பரிசோதனைக் கூடத்தை முழுநாளும் இயக்குமாறு சுகாதார அமைச்சு உத்தரவிட்டுள்ளதாகதெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை டெங்குத் தொற்று காரணமாகக் கடந்த 2016ஆம் ஆண்டில் 55 ஆயிரத்து 110 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் இந்த ஆண்டின் ஆறு மாத காலப் பகுதியில் 70ஆயிரத்து 100பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், டெங்கு நோயைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் வருட இறுதியில் இந்த எண்ணிக்கையில் பெரும் அதிகரிப்பு ஏற்படும் என்றும் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.(த-ய)

## மருத்துவர் நவீன் டி சொய்சாவின் கருத்து குறித்து சி.ஐ.டி. விசாரணை

கொழும்பு, ஜூன் 29

மாணவர்கள் ஆயுதம் ஏந்தக் கூடும் என்ற மருத்துவர் நவீன் டி சொய்சாவின் கருத்து தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கோரிக்கைகளுக்குத் தீர்வு வழங்கப்படாவிட்டால் எதிர்காலத்தில் மாணவர்கள் ஆயுதம் ஏந்திப் போராட்டம் நடத்தக் கூடிய சாத்தியம் உண்டு என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் முன்னாள் செயலாளர் மருத்துவர் நவின் டி சொய்சா அண்மையில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்தக் கருத்து தொடர்பில் கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவினர் விசாரணை நடத்த உள்ளனர்.

இந்தக் கருத்துக் குறித்து விசாரணை நடத்துமாறு நபர் ஒருவர் பொலிஸ் தலைமையகத்துக்கு முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளதன் அடிப்படையில் விசாரணை நடத்தப்படுவதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

சட்டமா அதிபரின் ஆலோசனையுடன் விசாரணைகளை முன்னெடுக்குமாறு பொலிஸ்மா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (த-ய)

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் செல்லையா

(ஓய்வு நிலை இராணுவ பொலிஸ் அதிகாரி)



வேலணையைப் பிறப்பிடமாகவும் இருபாலை, கொழும்பு, கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் செல்லையா 24.06.2017 கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு புதல்வனும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - சுந்தரம் தம்பதியரின் அன்பு மருமகனும் கனகரஞ்சிதத்தின் (ரஞ்சி) பாசமிகு கணவரும் செல்வராஜன்(செல்வா), செல்வரஜனி (ரஜனி), ரபினி, நிரஞ்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான துரையப்பா, சின்னத்துரை, கைலாயபிள்ளை, மார்க்கண்டு, குமாரு, பாக்கியம், தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை (29.06.2017) கனடாவில் நடைபெறும். அன்று அன்னாரின் இறுதி நினைவு கூரல் நிகழ்வு 211/14, கோயில் வீதி, நல்லூரில் உள்ள அவரது மருமகள் இல்லத்தில் பிற்பகல் இரண்டு மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**

**ஆனந்தராசா தவமலர் (மருமகள்) 077 218 1438**

**துரையப்பா தர்மானந்தசிவம் (பெறாமகன்) 076 768 6347**



### திருமதி தங்கரத்தினம் இராசையா

கொக்குவில் மேற்கு, கொக்குவிலைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கரத்தினம் இராசையா 28.06.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா இராசையாவின் அன்பு மனைவியும் பரமேஸ்வரன் (சுவிஸ்), பரமேஸ்வரி (ஜேர்மனி),இரஞ்சிதகுமாரன் (இணுவில்), வசந்தகுமாரன் (கொக்கு வில்) ,பற்குணரஞ்சன்(லண்டன்),இராசகுமாரன் (கொக்குவில்), றவித்தா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2017) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கிரியைகள் நடைபெற்று தாவடி கிறீஸ்தவ மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.**

**தகவல்:**
**பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்கள்



### திருமதி பொன்னாபரணம் (சின்னக்கிளி) இராசநாயகம்

தாவடி தெற்கு, நெல்லொருபாதி பிள்ளையார் கோயிலடி, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னாபரணம் (சின்னக்கிளி) இராசநாயகம் 26.06.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசநாயகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, இராசதுரை, சரஸ்வதி, இரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், மனோன்மணி, இராசலஷ்சுமி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற பாஸ்கரன், இராசவதனி (லண்டன்), ரசீகரன் (கனடா), இராசநாயகி ஆகியோரின் அன்புத் தாயாரும், குகதாசன், சுமங்கலா, ஸ்ரீ மயூரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், தக் ஷிகா, சேந்தன், விஷால், வைசாளி, தக் ஷா, அபிசாளினி, ஹரிசங்கவி, சிவானுஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2017) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**தாவடி தெற்கு,**
**கொக்குவில்.**

**ஸ்ரீ மயூரன் (மருமகன்-மயூரன் ஸ்ரோர்ஸ், வழக்கம்பரை), செல்வி (மகள்)**

**077 806 5900, 021 205 2648**



### திருமதி திரேசம்மா கபிரியேற்பிள்ளை (மணி)

சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த திருமதி திரேசம்மா கபிரியேற்பிள்ளை 25.06.2017 ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பேதுருப்பிள்ளை கபிரியேற்பிள்ளையின் அன்பு மனைவியும் தவம், மலர், பேபி (இந்தியா), ஜேசுதாசன், சரோசா, ரதி(நோர்வே), துரை (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தியாகராசா, அந்தோனிப்பிள்ளை ரஞ்சிதம்(இந்தியா) காலஞ்சென்ற வர்களான தேவிகா அல்பிரட்ராசு மற்றும் வலண்டைன் (நோர்வே), வசந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் ரமேஷ், ரஞ்சித், றலீஸ், றதீஸ் (கால்நடை வைத்திய சாலை), றஜிதா(ஆசிரியர்), கொலின்(அதிபர்), றொபின், றோகன், டயானா, றொபினா, ஜெறோனா, லாலா, லலிதா, குனேஷ், குணா, சோபா, பமிலஸ் (பிரதேசசெயலகம் சாவகச்சேரி), சுபா, றூபா, யூலி, ஜீவிக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு நாளை (30.06.2017) வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலயத்தில் திருப்பலி பூஜை நடைபெற்று ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கச்சாய் வீதி,**
**சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி லலிதா (செல்வி) சுந்தரலிங்கம்



ஊரெழு, கரந்தனைப் பிறப்பிடமாகவும், ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லலிதா (செல்வி) சுந்தரலிங்கம் 26.06.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வரெத்தினம் - பத்மாதேவி தம்பதிகளின் அன்பு புதல்வியும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சுந்தரலிங்கத்தின் (கிராமசேவையாளர் J/66) அன்பு மனைவியும், சிந்துஜன் (தாதிய உத்தியோகத்தர் - யாழ்.போதனா வைத்தியசாலை), யதுர்சன், நிருஜன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாரதி (ஜேர்மனி), பகீரதி (கனடா), பாமினி (கனடா), ஜெயராஜ் (பாபு - கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2017) வியாழக்கிழமை காலை 7 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று காலை 9 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**94/1, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.**

**021 222 7075**

# பௌத்த தர்மத்தை பாதுகாக்கவேண்டும்

## தலைமை அமைச்சர் கோரிக்கை

கொழும்பு, ஜூன்28

மேற்குலகில் பௌத்த தர்மம் குறித்து அக்கறை ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அடிப்படைவாதத்தில் இருந்து பௌத்த தர்மத்தைப் பாதுகாக்கவேண்டும்எனத் தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் சமய நிகழ்வொன்றில் கலந்துகொண்டுபேசும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சீனா, கொரியா போன்ற மகாயான பௌத்த தர்மம் உள்ள நாடுகள் மூலமே அமெரிக்க மக்கள் முதலில் பௌத்த தர்மத்தை அறிந்துகொண்டனர்.

உலகில் உள்ள பல்கலைக்கழகங்களில் ஆசிய, தெற்காசிய, தென் கிழக்காசிய நாடுகளில் பௌத்த தர்மம் பற்றிய பாடநெறிகள் உள்ளன. பௌத்த தர்மம் குறித்து மேற்குலக நாடுகளில் உள்ள சிறப்பு அக்கறை காட்டுகின்றனர். தேரவாத பௌத்தம் தொடர்பாக அவர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

இந்த பௌத்த தர்மம் பற்றிய அறிவை பத்திரிகை, சஞ்சிகைகள் மூலம் பெற்று வருகின்றனர். பௌத்த மத போதனைகளில் கலந்துகொண்டு அறிவைப் பெறுகின்றனர்.

பௌத்த தர்மம் பரவுவதற்கு நாம் இடமளிக்க வேண்டும். தாய்லாந்தே பௌத்தம் பற்றிய அதிகளவான நூல்களை ஆங்கிலத்தில் எழுதியுள்ளது. இரண்டாவது இடத்தில் இலங்கை உள்ளது. இந்த நிலைமையை நாம் மேலும் முன்னேற்ற வேண்டும் - என்றார். (த-ய)

# மருத்துவர் சங்கத்தின் தலைவர் தேர்தலில் போட்டியிட முனைப்பு

## மாலபே மருத்துவக் கல்லூரியின் தலைவர் பெர்னாண்டோ கூறுகிறார்



கொழும்பு, ஜூன் 29

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் பாதெனிய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முயற்சிக்கின்றார் என மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியின் தலைவர் மருத்துவர் நெவில் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாலபே தனியார் மருத்துவ கல்லூரிக்கு எதிராகச் செயற்படும் நபர்களின் பின்னணியில் இயங்கி வரும் பாதெனியவின் நோக்கம், எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவதாகும்.

மாலபே தனியார் மருத்துவ கல்லூரிக்கு எதிராகப் பெரும் போராட்டம் நடத்தப்பட்டால் அரச மருத்துவ அதிகாரிகள் சங்க உறுப்பினர்கள் வீதியில் இறங்கிச் செல்ல முடியாத நிலைமை ஏற்படும்.

மாலபே தனியார் மருத்துவ கல்லூரிக்கு எதிரான போராட்டத்திற்குப் பொது மக்களின் ஆதரவு கிடைக்காது.

மாலபே தனியார் மருத்துவ கல்லூரிக்கு எதிரான போராட்டம் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தேவைக்காக நடத்தப்படுகின்றது என்றார். (த-ய)

# ஜெனரல் கிரிசாந்த டி சில்வா படைப் பிரதானியாக உயர்வு



கொழும்பு, ஜூன் 29

இலங்கை இராணுவத் தளபதி லெப்ரினண்ட் ஜெனரல் கிரிசாந்த டி சில்வா, நான்கு நட்சத்திர ஜெனரலாக, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவினால் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

நேற்றுத் தொடக்கம் நடைமுறைக்கும் வரும் வகையில், இந்தப் பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தின் 21ஆவது தளபதியாகக் கிரிசாந்த டி சில்வா 2015 பெப்ரவரி 22ஆம் திகதி தொடக்கம் பதவியில் இருந்து வருகிறார்.

அதே வேளை, கூட்டுப் படைகளின் தளபதியாகவும், ஜெனரல் கிரிசாந்த டி சில்வா, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவினால், நியமிக்கப்பட்டுள்ளார். (த)

**தவறிவிட்டது**

மனுவேற்பிள்ளை ஜெயதாஸ் என்பவருடைய ரைக்ஸ் (BAIV6039) இன்சூரன்ஸ் றைவிங்லைசன்ஸ் (A001295396) அடையாள அட்டை 741564157V அடங்கி மணிப்பை மந்துவிலுக்கும் சாவகச்சேரிக்ும் இடைப்பட்ட டச்சு வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**076 687 0575**

**வேலையாள்கள் தேவை**

யாழ் நகரில் இயங்கி வரும் சைவ உணவகம் ஒன்றுக்கு உணவு பரிமாறுதல் உணவு பொதி செய்யும் வேலைக்கு ஆள்கள் தேவை.
(தங்கி வேலை செய்பவர் விரும்பத்தக்கது)

**077 990 0093/ 076 803 5352**

Chundikuli Girls' College
Jaffna

Annual Prize Giving 2017

Monday, 03rd July 2017 at 9.00 a.m.

Chief Guest
Rt. Rev. Dr. Justin Gnanapragasam
(Bishop of Jaffna)

Chairperson:
Ven. Samuel J. Ponniah
(Archdeacon of Jaffna)

Parents, old girls & well wishers are cordially invited

Principal, Staff & Students

# தேர்தல் தீவிரத்தால் இனப்பிரச்சினை தீர்வு இழுத்தடிப்பு

## வியாழேந்திரன் எம்.பி. விசனம்



செங்கலடி, ஜூன்28

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயத்திலிருந்து விலகி, தேர்தல்களுக்குத் தங்களின் கட்சிகளைப் எவ்வாறு பலப்படுத்துவது என்றே அரசியல் கட்சிகள் சிந்திக்கிறன எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு ஏறாவூர் எல்லை நகரில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல் கட்சிகள் வருகின்ற மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் தங்களது கட்சியின் பிரதிநிதித்துவத்தை எவ்வாறு தக்க வைத்துக்கொள்வதில் கவனம் செலுத்துகிறார்களே தவிர மக்களுடைய பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதில்லை.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டு இரண்டு வருடங்கள் நிறைவடைந்த போதிலும் தமிழ் மக்களின் கண்ணீருக்குச் சரியான பதில் கொடுக்கப்படாத நிலையே காணப்படுகிறது. வெறுமனே வெற்றுப் பேச்சுக்களையும் கால இழுத்தடிப்புக்களையும் அரசு மேற்கொண்டுவருகிறது.

தென்னிலங்கையிலுள்ள மதவாத இனவாத அமைப்புக்கள் தற்போது போர்க் கொடியைத் தூக்க ஆரம்பித்துவிட்டார்கள். இதனால் சிறுபான்மை மக்களுக்குரிய தீர்வை வழங்குவதற்கு அரசு பயப்படுகிறது. இனவாத, மதவாத அமைப்புகளை எதிர்ப்பதற்கு பயப்படுகிறது. இது ஆரோக்கியமான சூழல் இல்லை.

வடக்கு மாகாணத்தில் முதலமைச்சர் கதிரையை யார் பெற்றுக்கொள்வது, அமைச்சுப் பொறுப்புக்களை யார் பெற்றுக்கொள்வது எனப் போட்டி போட்டுத் தங்களுக்குள் அடித்துக்கொள்ளும் நிலை காணப்படுகிறது.

யாராக இருந்தாலும் சரி தங்களுக்கும் இருக்கும் பிரச்சினைகளைத் தூக்கி ஒருபுறம் வைத்துவிட்டு வாக்களித்த மக்களின் எதிர்பார்புக்களை நிறைவேற்ற வேண்டும் - என்றார். (த-ய-47)

# பணியாளரைக் குறைக்கும் சிறிலங்கன் எயார்லைன்ஸ்

கொழும்பு, ஜூன்28

பெரும் நட்டத்தில் இயங்கி வரும் சிறிலங்கன் எயார்லைன்ஸ் வானூர்திச் சேவை நிறுவனம் தனது பணியாளர்களைக் குறைப்பதற்குத் திட்டமிட்டுள்ளது.

இதற்கமைய 780 ஊழியர்களைக் கட்டாய ஒய்வூதிய அடிப்படையில் நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான யோசனை அரசிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

வானூர்திச் சேவைக்கு வழங்கப்படும் எரிபொருளுக்காக அறவிடப்படும் கட்டணத்தை லீற்றருக்கு 15 டொலர் அளவில் குறைக்கும் பட்சத்தில் விரைவில் நட்டத்திலிருந்து மீள முடியும் என நிறுவனத்தின் பணிப்பாளர் யோசனை தெரிவித்துள்ளார்.

அதேவேளை, உலகின் ஏனைய வானூர்திச் சேவைகளின் வருடாந்த நட்டத்துடன் ஒப்பிடும் போது சிறிலங்கன் எயார்லைன்ஸின் நட்டம் குறைவெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது எமிரேட்ஸ் நிறுவனத்தின் வருடாந்த நட்டம் 9.4 வீதமாகும்.

கத்தே பசிபிக் வானூர்திச் சேவையின் நட்டம் 9.8 வீதமாகும்.

கட்டார் வானூர்திச் சேவை 9.8 வீத நட்டத்தில் இயங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் சிறிலங்கனின் வருடாந்த நட்டம் 4.7 வீதமாகும். எனவே இந்த சாதாரண் நட்டத்தை இலாபமாக மாற்றிக் கொள்வதற்கு இந்த யோசனைகள் முன்வைக்கப் பட்டுள்ளன. (த-ய)

**SPOKEN ENGLISH**

ஆங்கிலத்தில் சுலபமாகக் கதைக்கப் பயில ஆசிரியர் ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி Dip in English and Science (M.L.S) London 22 வருட அனுபவம் வகுப்புகள் யாழ்ப்பாணம், சங்கானை

**077 675 1649** (CS 5219) (14)

**தேவை**

இணுவிலில் பிரபல்யமான புடைவைக் கடை ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை.
(ஆண்கள் மட்டும்) (CS 1507) (14)

**021 300 1155/ 077 470 5401**

**தவறிவிட்டது**

நவாலி வடக்கைச் சேர்ந்த நடேசு பிரபாகரன் என்பவரின் தேசிய அ.அட்டை (720630613V) மற்றும் முக்கிய பொருள்களுடன் சேர்ந்த பை யாழ் நகரிலிருந்து வவுனிய வரையான பிரயாணத்தின் போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**077 574 2430**

# இடரால் பாதிப்புற்ற நிறுவனங்களின் சேதவிவரம் திரட்டல்

அண்மையில் ஏற்பட்ட இடரால் பாதிக்கப்பட்ட அரச மற்றும் தனியார் நிறுவ னங்களின் சேத விவரங்கள் பற்றிய மதிப்பீட்டு அறிக்கை இந்த வாரம் அரசுக்கு சமர்ப்பிக்கப்படும் எனஉள்நாட்டுஅலுவல்கள்அமைச்சு தெரிவித்துள்ளது. இடர்களால் பாதிக்கப்பட்ட அரச மற்றும் தனியார் நிறுவன ஊழியர்களின் விவரங்களும் இந்த மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தாகவும் அறிக்கை அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின் உதவிகள் துரிதப்படுத்தப்படும் என வும் அமைச்சு தெரிவித்துள்ளது. (த-ய)

# இயற்கை எரிவாயு மின் உற்பத்தியை கைவிட்டது அரசு

## சூரிய மின்சக்தி நிலையமே சம்பூரில்

கொழும்பு, ஜூன் 29

சம்பூரில் இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்திச் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்த மின் உற்பத்தித் திட்டமும் கைவிடப்பட்டுள்ளது. சூரியசக்தியைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் திட்டமே நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.



திருகோணமலை மாவட்டத்திலுள்ள சம்பூரில், இந்தியாவின் முதலீட்டுடன், 500 மெகாவாட் அனல் மின் திட்டத்தை அமைக்க, இந்திய - இலங்கை அரசுகளுக்கிடையில், 2011ஆம் ஆண்டு உடன்பாடு கையெழுத்திடப்பட்டது.

2013ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இது தொடர்பான கட்டுமான உடன்பாடு இலங்கை மின்சார சபைக்கும், இந்தியாவின் தேசிய அனல் மின்கழகத்துக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது.

எனினும், சம்பூரில் அனல் மின் நிலையத்தை அமைப்பதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதற்கு எதிரான பரப்புரைகளை மேற்கொண்டதுடன், சூரிய மின் உற்பத்தி நிலையத்தை அமைக்குமாறும் இந்தியாவிடம் கோரியது.

அதேவேளை, அனல் மின் நிலையத்துக்குப் பதிலாக, இயற்கை எரிவாயு மின் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு இந்தியாவிடம் இலங்கை அரசு கோரியிருந்தது. அதற்கு இந்தியாவும் இணங்கியிருந்தது.

எனினும், சம்பூரில் இயற்கை எரிவாயு மின் திட்டத்தை அமைக்க, மின்சார சபையின் பொறியாளர்கள் சங்கம் கடும் எதிர்ப்பை வெளியிட்டது.

இந்த நிலையில், சம்பூரில் 50 மெகாவாட் திறன் கொண்ட சூரிய மின்சக்தித் திட்டமே நடைமுறைப்படுத்தப்படும் என்று அமைச்சர் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

அத்துடன், சுற்றாடலுக்குப் பாதிப்பில்லாத, சூரிய மற்றும் காற்றாலை மின்சக்தித் திட்டங்களுக்கே மின்சார சபை முன்னுரிமை கொடுக்கும். தலா ஒரு மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட சிறியளவிலான 60 சூரிய மின்சக்தி உற்பத்தித் திட்டங்களில் முதலீடு செய்வதற்கு, 20 முதலீட்டாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து ஒரு அலகு மின்சாரத்தை 12.73 ரூபாவுக்கு மின்சார சபை கொள்வனவு செய்யும் " என்றும் அமைச்சர் கூறினார்.

(கு-ய-2)

# மைத்திரியை விட அமைச்சர்கள் பலம் பொருந்தியவர்கள்

## ஜி.எல். பீரிஸ் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 29

அரச தலைவரை விடவும் அமைச்சர்கள் பலம் பொருந்தியவர்களாக உள்ளனர் என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் குற்றம் சுமத்தியுள்ளார்.



இலங்கைச் சட்டத்தின் பிரகாரம் அரச தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள கடமைகளை ஏதேச்சாதிகாரப் போக்கில் அமைச்சர் ஒருவரால் கைப்பற்றிக் கொள்ள முடியுமாயின் அந்தப் பதவியின் பயன் என்ன எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

புஞ்சி பொரளையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவரர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் சாசனத்தின் அடிப்படையில் அமைச்சர்கள், அரச நிறுவனங்கள் தொடர்பான துறைகளை நிர்ணயம் செய்யும் அதிகாரம் அரச தலைவருக்கே காணப்படுகின்றது. எனினும், அரச தலைவரையும் மீறி அமைச்சர்கள் சில நிறுவனங்களைக் கைப்பற்றிக் கொண்டுள்ளனர் என அவர் குற்றம் சுமத்தினார்.

நிதி அமைச்சின் கீழ் இயங்கி வந்த லொத்தர் சபைகள் எந்த அடிப்படையில் நிதி அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டது ஏன் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

(த-ய)

# இலங்கைக்கான வரிச்சலுகையை பிரிட்டன் தொடரும்

கொழுப்பு, ஜூன் 29

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறியதன் பின்னரும் பிரிட்டன் சந்தையில் இலங்கைக்கான வரிச் சலுகை தொடர்ந்தும் வழங்கப்படும் என அது தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறினால் இலங்கை பொருளாதார ரீதியில் தாக்கத்தை எதிர்கொள்ள நேரிடும் எனத் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

ஏனெனில் இலங்கையில் இருந்து பெருந்தொகையான ஆடை உற்பத்திகள் உள்ளிட்ட பொருள்கள் பிரிட்டனுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதற்காக வழங்கப்படுகின்ற வரிச்சலுகை கிடைக்காவிட்டால் இலங்கையின் உற்பத்திகள் 10 சதவீத இலாப இழப்பைச் சந்திக்கநேருமென்றும்கூறப்பட்டது.

இந்த நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறியதன் பின்னரும் இலங்கைக்கான வரிச்சலுகை தொடர்ந்து வழங்கப்படும் என்று அந்த நாடு அறிவித்துள்ளமையானது இலங்கைக்குக் கிடைக்கும் அதிஸ்டமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(கு-ய)

# கொழும்பு பங்குச் சந்தையில் ராஜபக்சாக்கள் முன்னணியில்

## நிதி மோசடிப் பிரிவு விசாரணை

கொழும்பு, ஜூன் 29

கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் முதன்மையான 20 பங்குதாரர்களில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் புதல்வர்களும் இடம்பிடித்துள்ளனர் என ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் மகிந்தவின் மகன் நாமல் ராஜபக்ச மற்றும் யோசித ராஜபக்ச ஆகிய இருவரின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனமான எஸ்கொட் லங்கா பீ.எல்.சீ நிறுவனத்தின் பங்குகளைக் கொள்வனவு செய்தமையின் ஊடாகவே குறித்த இருவரும் பங்குதாரர்களாகியுள்ளனர்.

இந்த நிறுவனத்தைக் கொள்வனவு செய்ய நாமல் ராஜபக்ச மற்றும் யோஷித ராஜபக்சவுக்கு இவ்வளவு தொகைப் பணம் எப்படி கிடைத்ததென நிதி மோசடி விசாரணைப் பிரிவினால் தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நிறுவனத்தின் பன்னாட்டு நிதி அறிக்கைக்கமைய இந்த நிறுவனத்தின் முக்கிய பங்குதாரர்கள் 10 பேரில் மகிந்தவின் புதல்வர்கள் உள்ளடங்கியுள்ளனர்.

> “ நாமல் ராஜபக்ச மற்றும் யோஷித ராஜபக்சவுக்கு இவ்வளவு தொகைப் பணம் எப்படி கிடைத்ததென நிதி மோசடி விசாரணைப் பிரிவினால் தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பங்குச் சந்தையில் இதுதொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல் மற்றும் தகவல்கள் தொடர்பில் நிதி மோசடி விசாரணைப்பிரிவினால் விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது.

அத்துடன் இந்த நிறுவனத்தின் பங்குகளைக் கொள்வனவு செய்வதற்காகப் பணம் கிடைத்த முறை தொடர்பில் எதிர்வரும் காலங்களில் நாமல், யோஷிதவிடம் விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளது.

நாமல் ராஜபக்ச மற்றும் யோஷித ராஜபக்ச உட்பட ராஜபக்சர்கள் மீது நிதித் தூய்மையாக்கல் மற்றும் நிதி மோசடி குற்றச்சாட்டுகள் தொடர்பில் தொடர்ந்து சுமத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (கு-ய)



# பாகிஸ்தான் மீது மோடி - ட்ரம்ப் கடும் பாய்ச்சல்

இந்திய தலைமை அமைச்சர் மோடி, அமெரிக்க அதிபர் ட்ரம்ப் இருவரும் கூட்டாக இணைந்து பாகிஸ்தானுக்கும் அந்த நாட்டில் செயற்படும் ஆயுதக் குழுக்களுக்கு எதிராகவும் குரல் கொடுத்துள்ளனர்.

இந்திய தலைமை அமைச்சர் மோடி, உலகின் பல்வேறு நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் செய்து வருகிறார். கடந்த திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை என்று இரண்டு தினங்கள் அவர் அமெரிக்காவுக்குச் சென்றார். நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ட்ரம்ப் - மோடி இடையிலான சந்திப்பு நடைபெற்றது. இந்தச் சந்திப்பிலேயே பாகிஸ்தானுக்கு எதிராக குரல் கொடுக்கப்பட்டது.

“அமெரிக்காவுக்கு இந்தியா உண்மையான நண்பன். அமெரிக்கா மற்றும் இந்தியாவுக்கிடையேயான நட்பு என்பது இரு நாடுகளுக்கிடையே பகிர்ந்து கொள்ளப்பட்ட மதிப்புகளால் கட்டப்பட்டது. அமெரிக்க அதிபர் தேர்தல் பரப்புரைகளிலும் இதைத்தான் கூறினேன். நான் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டால் இந்தியா என் உண்மையான நண்பனாக இருக்கும் எனத் தெரிவித்தேன். பிற நாடுகளைத் தாக்க தீவிரவாதத்துக்கு பாகிஸ்தான் தன் மண்ணில் இடமளிக்காது என்று அந்நாடு உறுதியளிக்க வேண்டும். மும்பைத் தாக்குதல், பதன் கோட் தாக்குதல் ஆகியவற்றுக்குக் காரணமானவர்களையும், இந்திய எல்லையில் அத்துமீறி தாக்குதல் நடத்தும் தீவிரவாத குழுக்களையும் பாகிஸ்தான் நீதியின் முன் நிறுத்த வேண்டும்” என ட்ரம்ப் மேலும் தெரிவித்தார்.

இந்தியத் தலைமை அமைச்சர் மோடியும் இவ்வாறான ஓர் கருத்தை வலியுறுத்தினார். (ம)



மேற்கு மோசூலில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போரில் அல் நூரி மசூதியும் அது சார்ந்த இடங்களும் அண்மையில் மீட்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதிகளின் தற்போதைய நிலை தொடர்பான ஒளிப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன. (ம)

# வெற்றியின் விளிம்பில் ஈராக் அரச படைகள்



ஈராக்கின் மேற்கு மோசூல் நகரில் ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போரில் ஈராக் படைகள் வெற்றிபெறும் நிலையில் உள்ளன என்று பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஈராக், சிரிய நாடுகளின் பல பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் ஈராக்கின் மோசூல் நகரம் இருந்தது. இதன் கிழக்குப் பகுதி கைப்பற்றப்பட்டுவிட்ட நிலையில் மேற்குப் பகுதிக்கான போர் தற்போது நடைபெற்று வருகிறது. மேற்கு மோசூலின் முக்கிய அடையாளமான அல் நூரி மசூதி கடந்த வாரமும் அதைச் சார்ந்த இடங்கள் இந்த வாரமும் மீட்கப்பட்டன. மக்களின் பாதுகாப்பைக் கருதி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வான் தாக்குதல்களும் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

போர்க்களம் தொடர்பான பல ஒளிப்படங்களை பகிர்ந்துள்ள ரொயிட்டர்ஸ் ஊடகம், இன்னும் சில வாரங்களில் மோசூல் போர் முடிவுக்கு வரும் என்று செய்தி வெளியிட்டுள்ளது. மேற்கு மோசூல் மீட்புத் தொடர்பான செய்திகளுக்கும் ஒளிப்படங்களுக்கும் அந்த ஊடகம் ‘என்ட் கேம் இன் மொசூல்’ (மோசூலில் இறுதிக் கட்டப் போர்) என்று தலைப்பிட்டுள்ளது.

முன்னதாக ஈரான் இராணுவம் இன்னும் சில வாரங்கள் அல்லது சில நாள்களில் மோசூல் முழுவதுமாகக் கைப்பற்றப்படும் என்று குறிப்பிட்டிருந்தது.

வான் தாக்குதல்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் உள்ள மக்களின் நிலமைதொடர்பில் அச்சம்வெளியிடப்பட்டது. (ம)




## கூகுளுக்கு 2.42 பில். யூரோ தண்டம்

தனது தேடு பொறியில் ஏனைய நிறுவனங்களில் சந்தைப் பொருள்களை இருட்டடிப்புச் செய்தமைக்காகவும், தனது சுய பொருள்களை சட்டத்துக்கு முரணான வகையில் முன்னிலைப் படுத்தியமைக்காவும் கூகிள் தேடுபொறிக்கு 2.42 பில்லியன் யூரோ தண்டமாக விதிக்கப்பட்டது.

இது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் மார்கிரெட் வெஸ்ட்ரேயர், தனது சொந்த விற்பனைத் தேவைகளை முன்னிலைப்படுத்துவதற்கே கூகுள் நிறுவனம் தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து வருகிறது. இதன் மூலம் இதர நிறுவனங்கள் சந்தையில் போட்டியிட கூகுள் சம வாய்ப்பு வழங்கவில்லை.

மேலும் மற்ற நிறுவனங்களின் சிறப்பியல்புகள் மற்றும் அவற்றின் கண்டுபிடிப்புகள் சந்தையில் முன்னிலைப்படுத்தப்படாமல் இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே நம்பிக்கைக்கு மாறான வகையில் செயல்பட்டதற்காக கூகுள் நிறுவனத்துக்கு இந்தத் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது” என்று தெரிவித்தார். (ம)

## வெனிசூலாவின் உச்ச நீதிமன்றில் தாக்குதல்

வெனிசுலாவின் உச்ச நீதிமன்றம் மீது இராணுவ அதிகாரியின் உடை அணிந்த நபர் உலங்கு வானூர்தியில் இருந்தவாறு துப்பாக்கிச் சூடு நடத்தியமை அதிர்வலைகளைத் தோற்றுவித்துள்ளது.

வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோவுக்கு எதிராக அந்த நாட்டில் பெரும் போராட்டம் நடத்தப்பட்டு வருகிறது. எனவே இந்தத் தாக்குதல்கள் தனது எதிர்பாளர்களால் நடத்தப்பட்டது என்று மதுரோ தெரிவித்துள்ளார்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் இதற்கு மறுப்புத் தெரிவித்தனர். (ம)




## ஹமாஸ் மீது இஸ்ரேல் அதிரடித் தாக்குதல்

டெல் அவிவ், ஜூன் 29

காசா உள்ளிட்ட பகுதிகளில் உள்ள ஹமாஸ் அமைப்பினரின் தளங்களைக் குறிவைத்து இஸ்ரேல் நேற்றுமுன்தினம் அதிரடித் தாக்குதல்களை நடத்தியது.

இஸ்ரேல் மீது காசா பகுதியில் இருந்து நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலை அடுத்தே, இஸ்ரேலால் இந்த இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று சொல்லப்படுகிறது. காசா, ரபா மற்றும் காசாவுக்கு வெளியே உள்ள ஒரு இடம் என 3 இடங்களில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. பலஸ்தீன படைகளும், பொதுமக்களும் இந்த தாக்குதலை உறுதி செய்தனர். எவரும் உயிரிழக்கவில்லை. மூவர்காயங்களுடன்மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

ஹமாஸ் அமைப்பு, இஸ்ரேலைபலஸ்தீனர்களுக்கு பெற்றுக்கொடுத்து, இஸ்ரேல், மேற்குக்கரை, காசா பகுதிகளை ஒருங்கிணைத்து இஸ்லாமிய குடியரசாக மாற்றும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)






### ஆசிச் செய்தி



சைவமும் தமிழும் தழைத் தோங்கும் சீரும் சிறப்பும் மிக்க உரும்பிராய் எனும் செழுமை மிகுந்த விவசாயக் கிராமத்தில் ஓடையம்பதி என்கின்ற சிறப்பான ஷேத்திரத்தில் எழுந்தருளி இருந்து அருளாட்சி செய்கின்ற கற்பக விநாயகப் பெருமானுக்கு இன்று தங்கரத வெள்ளோட்டம் நடைபெறுவது அவனருளே. அவனருளாலே அவன் தாழ்வணாங்கி சிந்தை மகிழ்ந்து சிறப்பான தங்கரத மொன்றை ஏழாம் திருவிழா உபயகாரக்களான அமரர் தர்மலிங்கம் அவர்களின் மூத்த புதல்வரான சுரேஸ்குமாரும் அவர் தம் குடும்பத்தினரும் அமைத்துக் கொடுத்துள்ளார்கள். நாளை 30.06.2017 வெள்ளிக் கிழமை விநாயகப் பெருமான் தங்கரதத்தில் ஆரோகணித்து வரும் திருக்காட்சியைப் பக்த அடியார்கள் அனைவரும் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்று நல்வாழ்வு வாழ்க என ஆசி கூறுகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

**ஆதீன குருமுதல்வர்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்நல்லை ஆதீனம், யாழ்ப்பாணம்.**

### கற்பகவிநாயகர் திருவருள் அனைவருக்கும் கிடைக்கப்பெறுக




உரும்பிராய் ஓடையம்பதி புண்ணிய க்ஷேத்திரத்தில கோயில் கொண்டெழுந்தருளி அருள் பாலிக்கும் கற்பகவிநாயகர் வானுயர்ந்த கோபுரம் அழகு மிகு திருக்கோயி லும் வண்ணமிகு இரதங்களும் அமைந்த இவ் ஆலயத்தில் 29.06.2017ஆம் திகதி தங்கரத வெள்ளோட்டம் நடைபெற்று பக்தர்களுக்கு அருள் மழை பொழிவதற்காக நாளை தங்கரத்தில் விநாயகர் எழுந்தருள்கிறார்.

தெய்வ வழிபாட்டில் முதல் வணக்கத்திற்குரிய கற்பக விநாயகரை இறைஞ்சி வேண்டும் அடியார்களுக்கெல்லாம் நிறைந்த அருள்வரம் சுரக்கும் கற்பகவிநாயகரின் அனுக்கிரகம் பெறவேண்டி மெய்யடியார்கள் சமயானுஷ்டானங்களுடன் ஆலயத்துக்கு வந்து புண்ணியங்கள் பெருக்கித் தங்கள் இவ்வுலக வாழ்வைச் செம்மைப்படுத்தும் வண்ணம் கேட்டு எமது நல் அருளாசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கற்பகவிநாயகர் மீது அயராது பக்தி பூண்ட தங்கரத திருவிழா உபயகாரர்களான திரு தர்மலிங்கம் குடும்பத்தவர்கள் அனைவருக்கும் எமது கண்கண்ட தெய்வம் கற்பகவிநாயகரின் அருள் சித்திக்கப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கரதத்தினை விநாயகப் பெருமானுக்கு அமைத்த சிற்பக் கலைஞர் திரு.தியாகராசா பிரதீபன் அவர்களுக்கும் விநாயகர் அருள் சித்திக்கப் பிரார்த்திக்கின்றோம்.

| | |
|---|---|
| **ஆலய பிரதம குரு :** | **மஹோற்சவ குரு:** |
| **பிரம்ம ஸ்ரீ. தியாக கிருஷ்ண** | **பிரம்ம ஸ்ரீ கிருஷ்ண** |
| **மூர்த்திக் குருக்கள்** | **கௌரிகாந்தக் குருக்கள்** |

### எம்பெருமான் அருள் பெற்றுய்வோம்



தனக்கு மேலே நாயகன் இல்லாத தனித் தலைவனாக ஐந்து கரங்களையும், ஆனை முகத்தையும் கொண்ட விநாயகர் சீரும் சிறப்பும் சைவமும் தமிழும் சிறப்புற்று விளங்கும் யாழ்ப்பாணத்தில் வலிகிழக்கு பகுதியில் உரும்பராய் ஒடையம்பதி என்னும் திவ்விய ஷேத்திரத்தில் எழுந்தருளி தன்னைத்தினமும் தொழுவோர்க்கு இரங்கி அருள்பாலிக்கும் தாயிற் சிறந்த எம்பெருமான் அனைவரையும் காத்தருளி றார்.

கற்பக விநாயகர் ஆலயத்தில் எமது சிறியதந்தையார் தர்மலிங்கம் குடும்பம் ஆரம்பகாலம் தொடக்கம் மகோற்சவ ஏழாம் திருவிழாவை மிகவும் சிறப்பாக செய்து வருகிறார்கள். கற்பக விநாயகப்பெருமானுக்கு தங்கரதம் அமைக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தை ஆலய நிர்வாகசபை உறுப்பினராகவும் உரும்பிராய் வடக்கைச் சேர்ந்தவருமாகிய திரு. பொ. சுந்தரம் அவர்கள் ஏழாம் திருவிழா உபயகாரராகிய தர்மலிங்கம் அவர்களுக்கு தெரியப்படுத்தினார் திரு. தர்மலிங்கம் அவர்களும் தங்கரதம் அமைக்க பெருவிருப்பம் கொண்டார் ஆனால் இந் நல்லெண்ணம் உடன் கைகூட வில்லை தர்மலிங்கம் அமரராகி சில வருடங்களின் பின் கற்பக விநாயகப் பெருமானின் திருவருளால் விநாயகர் மீது கொண்ட பக்தியினால் தர்மலிங்கம் அவர்களது மூத்த புதல்வன் சுரேஸ்குமார் மற்றும் அவர் மனைவி விநாயகப் பெருமானுக்கு தங்கரதம் அமைக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்துக்கு செயல் வடிவம் தந்தார்கள். கற்பக விநாயகப் பெருமானுக்கு அழகிய தங்கரதம் அமைக்கப் பட்டு இன்றைய தினம் தங்கரத வெள்ளோட்டம் சிறப்பாக இடம்பெறுகிறது ஏழாம் திருவிழாவாகிய நாளை எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் தங்கரத வீதியுலா வருவது திருவருள் தருவது கண்டுகொள்ளாக காட்சியாகும் அத்தருணம் பக்த அடியார்கள் வருகை தந்து எம் பெருமான் அருளைப் பெற வேண்டுகிறோம்.

**ஏழாம் திருவிழா உபயகாரர்**
**தர்மலிங்கம் குடும்பம் சார்பாக**
**செல்வி யோகேஸ்வரி மாணிக்கம்.**

### தங்கரதத்தில் பவனி வாரீர் !

ஏர்பூத்த இலங்கு எழில் உரும்பிராயின்
எழிலார்ந்த கற்பகப் பிள்ளையாரே !
பார் ஓங்கப் பல வெழிலும் தந்தருள்வாய்
பார்வதியின் புத்திரனே பணிந்தோம் நின்னை

**30.06.2017 வெள்ளிக்கிழமை எம்பெருமான் இரவு 7.00 மணியளவில் வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து உள்வீதி வலம் வந்து மின்குமிழ்களால் அலங்கரிக்கப்பட்ட புதிய தங்கரதத்தில் வெளிவீதி உலா வருவார்.**

**சிறப்பிக்கும் தவில் நாதஸ்வர கலைஞர்கள்**

- ஆலய ஆஸ்தான வித்துவான் இணுவில் ப.சிவதாஸ் குழுவினர்
- கோண்டாவில் பஞ்சமூர்த்தி குமரன் குழுவினர்.
- அளவெட்டி தட்சணாமூர்த்தி மகன் உதயசங்கர் குழுவினர்.
- கைதடி பழனிமலை மகன் குணம் குழுவினர்
- தொல்புரம் சிவகுமார் குழுவினர்.
- உடுப்பிட்டி V.T.மயூரன் குழுவினர்
- சாவகச்சேரி பஞ்சாபிகேசன் பேரர்கள் சித்தார்த்தன் குழுவினர்

### வாழ்த்துச் செய்தி



உரும்பிராயில் ஓடையம்பதி என்னும் திவ்வியஷேத்திரத்தில் எழுந்தருளி துதிப்போரின் துன்பம் போக்கி, காத்து அருள்மழை பொழியும் கற்பகப்பிள்ளையாரின் மஹோற்சவம் வருடந்தோறும் ஆனிமாத பௌர்ணமி தினத்தை தீர்த்தோற்சவமாகக் கொண்ட பதினைந்து தினங்களை உள்ளடக்கியது பதின் ஆறாம் நாள் தொண்டர் சபையினரால் விமரிசையாக பூங்காவனத்திருவிழாவும் நடந்து வருவது வழக்கம் மகோன்னதமான உற்சவம் என்று சொல்லப்படுகின்ற மகோற்சவ காலத்தில் விநாயகப் பெருமான் ஒரு நாளைக்கு ஒருவித அலங்காரத்தில் அடியவர்களுக்கு எழுந்தருளி கருணைமழை பொழியும் காட்சி கண் கொள்ளாக் காட்சி. எம்பெருமானது மஹோற்சவத்தில் ஏழாவது உபயம் கற்பகப் பிள்ளையாரின் அடியவரான அமரர் தர்மலிங்கம் அவர்களது குடும்பத்தால் சிறப்பாக ஒழுங்கமைத்து விமரிசையாக நடைபெறுவதை அடியேனும் அறிவேன். அன்பர் தர்மலிங்கம் அவர்கள் தனது தொழிலை கெக்கராவை என்னும் இடத்தில் மேற்கொண்டதால் அவரைப் பலர் கெக்கராவைத் தருமலிங்கம் என அழைப்பதும் உண்டு. 7ஆம் திரு விழாவுக்கு கெக்கராவையில் இருந்து தாமரைப் பூவும் கொண்டு வந்து மலர் சொரியும் காட்சியும் மனக்கண்முன் நிற்கின்றது. இவர் நாட்டுச் சூழ்நிலைகள் மற்றும் குடும்ப உறவு காரணமாக கனடா சென்று பின் கனடாவில் இருந்து வருகை தந்து திருவிழாவினையும் செய்தார். இவரது கடைசிக் காலத்தில் எம்பெருமானுக்கு ஒரு தங்கரதம் செய்ய வேண்டும் என்னும் விருப்பு உருவானது. அதனை அவர் தனது குடும்பத்தவர்களிடம் கூறி வைத்தார். அவரது விருப்பம் கற்பக விநாயகரது திருவருள் துணையுடன் நிறைவு செய்யப்பட்டு இன்று வெள்ளோட்ட விழாவும் நடைபெறவுள்ளது. தந்தையாரது விருப்பத்தை நிறைவு செய்வதற்காக தென்னிந்தியா உள்ளிட்ட பல இடங்களில் உருவாக்கப்பட்ட தங்கரதங்களைப் பார்வையிட்டு பொருத்தமான ஸ்தபதியாக விஸ்வப் பிரம்மஸ்ரீசிற்பக்கலா வித்தகர் தியாகராசா பிரதீபன் அவர்கள் தனது கலை நுட்பத் திறமையினால் அதனை சித்திரம் பேசும் கலை அம்சமாக வடிவமைத்துத் தந்துள்ளார்.

கற்பகப் பிள்ளையார் அழகிய சித்திரத் தங்கரதத்தில் ஆரோகணித்து அடியார்கள் குறை தீர்த்து கருணை மழை பொழிந்தருளவும் அதனை உருவாக்குவித்த அன்பர் தர்மலிங்கம் குடும்பத்தவர்கள், பரிபாலன சபையினர், சகல அடியார்கள் எல்லோருக்கும் எல்லாம் வல்ல சர்வ விக்ன நிவாரக ஓங்காரரூப கற்பகப்பிள்ளையாருடைய திருவருள் என் றென்றும் நிறைவாகக் கிடைத்து குறைவின்றி வாழ அருள்புரிய வேண்டும் என்றும் வெள்ளோட்ட விழா இன்று சிறப்புற நடைபெறவும் கற்பக விநாயகரது திருவடித்தாமரைகளைப் பிரார்த்திப்போமாக.

**அ.ஈஸ்வரநாதன்**
**ஓய்வுநிலைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர்.**

### தங்கரதம் இழுப்போம் வாரீர்



இலங்கையின் வடபுலத்திலே உரும்பிராய் மாநகரிலே அடியவர்களுக்கெல்லாம் அருள்பாலித்து அருட்கடாட்சம் வழங்குகின்ற ஓடையம்பதி கற்பகவிநாயகப் பெருமானின் தங்கரத வெள்ளோட்ட திருவிழாவுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகப்பெருமான் நாளை புதிய தங்கரதத்திலே ஆரோகணித்து அடியவர்களுக்கெல்லாம் அருளாட்சி வழங்கும் அற்புதக் காட்சியைக் காண நாங்கள் என்ன தவம் செய்தோம். இன்று வெள்ளோட்ட பவனி வரும் தங்கரதத்தில் வெவ் வினையை வேரறுக்கவல்ல விநாயகப்பெருமானை அமரச் செய்து பக்தர்கள் எல்லோரும் ஒன்று கூடி அரோகரா கோஷத்துடன் இழுக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியே. வாருங்கள் எல்லோரும் வடம்பிடித்து இழுப்போம். இறைவ னுக்கு நாங்கள் செய்கின்ற ஒவ்வொரு கைங்கரியங்களும் எம்மை இந்த உலகத்திலே வாழவைப்பதற்கான அறப்பணியே. நாங்கள் நல்ல மனத் தோடும், பண்போடும், பாசத்தோடும் இறைவனை வழிபடும்போதுதான் எமக்கு இறையருளாசி கிடைக்கின்றது.

ஆலயத்திருப்பணிகளை அடியவர்களாகிய நாங்கள் உளத்தூய்மையோடும் அன்பு கலந்த நெஞ்சத்தோடும் ஆற்றும்போதுதான் ஆண்டவன் எம்முன் காட்சி தருகின்றான். இன்றைய நாளிலே இந்த அழகிய அற்புதமான தங்கரதத்தினை நிர்மாணித்து வெள்ளோட்ட விழா செய்து நாளை விநாயகப் பெருமான் திருவீதியுலா எழுந்தருளச் செய்யும் காட்சி அற்புதமானது. தங்கரதத்தினை நிர்மாணிப்பதற்கு உதவி செய்தவர்கள் பாக்கியசாலிகளே.

"கற்பக விநாயகன் கனவிலும் காத்திடுவான்"

**பஞ்சாட்சரம் கணேசன், அதிபர், உரும்பிராய்.**

### செஞ்சொற்செல்வரின் செய்தி



அத்தி முகவனை நித்தம் நினைப்பவர் சித்த மகிழ்வோடு
வாழ்ந்து முத்தி பெறுவர்.

உரும்பிராய் கற்பக விநாயகர் ஆலயம் மிகவும் பிரசித்தமானது. ஊர் மக்கள் தம் உயிராக நேசிக்கும் திருக்கோயில் சகல திருப்பணிகளும் குறைவின்றி நடைபெறும் திருக்கோயில். இத்திருக்கோயிலின் 7ஆம் திருவிழா உபயகாரர் திரு. தர்மலிங்கம் குடும்பத்தவர்களால் புதிதாக உருவாக்கப்பட்ட தங்கரதத்தின் வெள்ளோட்ட விழாக் குறித்து வாழ்த்துவதில் ஆனந்தமடைகின்றேன். கற்பக விநாயகர் தங்கரதத்தில் பவனிவரும் காட்சியைக் காணும் பேறு பக்தர்களுக்குக் கிடைத்திருக்கின்றது. ஆனைமுகன் அருளால் தெய்வீகம் நிறைந்த உரும்பிராய்த் திருவூரில் ஆன்மீகநெறி தழைத்தோங்கி வருவது பெருமை தரும் செய்தியாகும். சிற்பக் கலைஞர் திரு. தியாகராசா பிரதீபன் அவர்களின் கைவண்ணத்தில் உருவான தங்கரதம் காலமெல்லாம் நிலைக்க வாழ்த்தி வணங்கி அமைகின்றேன்.

**கலாநிதி ஆறுதிருமுருகன்**
**தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,தெல்லிப்பழை,**
**தலைவர், சிவபூமி அறக்கட்டளை இலங்கை.**

### மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோம்



அற்புத கீர்த்தியும் ஆனந்த வாழ்வும் நற்பொருள் குவியும் நலமெல்லாம் தரும் கற்பகவிநாயகப் பெருமான் உரும்பிராய் பலாலி வீதி யில் கோயில் கொண்டு எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்.

வானுயர்ந்த கோபுரம் சிற்ப ஓவிய கலைமிகு அழகிய ஆலயமாக இவ்வாலயம் விளங்குகின்றது. ஆனிப்பூரணையைத் தீர்த்தத்தினமாகக் கொண்டு இங்கு மகோற்சவம் இடம்பெறுகிறது கற்பக விநாயகர் ஆலய மகோன்னத பெருவிழா ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. ஏழாம் திருவிழா உபயகாரர் உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த தர்மலிங்கம் குடும்பத்தினர் தங்களது திருவிழாவை மிகவும் சிறப்பாக நடத்திவருகிறார்கள். தர்மலிங்கம் குடும்பத்தினர் விநாயகப் பெருமான் மீது கொண்ட எல்லையில்லா பக்தியினால் விநாயகப் பெருமானுக்கு தங்கரதம் அமைக்க வேண்டும் என நல்லெண்ணம் கொண்டார்கள். எல்லாம் வல்ல கற்பக விநாயகப்பெருமான் திருவருளால் தர்மலிங்கம் அவர்களது பிள்ளைகளால் கற்பகவிநாயகப் பெருமானுக்கு தங்கரதம் அமைப்பிக்கப்பட்டு இன்றைய தினம் தங்கரத வெள்ளோட்டம் இடம்பெறுகிறது.

திறமை மிகு சிற்பாசாரியாரால் அமைக்கப்பட்ட சிற்பக் கலை நிறைந்த அழகுமிகு தங்கரதத்தில் 7 ஆம் திருவிழா அன்று கற்பக விநாயகப் பெருமான் ஆரோகணித்து வரும் அழகு மிகு காட்சியைக் கண்டு ஆனந்தம் அடைவோம். தங்கரதத்தை அமைப்பித்த தர்மலிங்கம் அவர்களது பிள்ளைகள் அவர்கள் சார்ந்த குடும்பத்தினருக்கு எல்லாம் வல்ல கற்பக விநாயகப் பெருமான் திருவருளால் சகல சௌபாக்கியங்களும் கிடைக்கட்டும். அழகுமிகு தங்கரத்தில் ஆரோகணித்து வரும் கற்பக விநாயகப் பெருமானை உள்ளன்போடு துதித்து சகல சௌபாக்கியங்களையும் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோம்.

கற்பக விநாயகர் பொற்பாதம் கனவிலும் துணை செய்யும்

**சி. நந்தகுமார்**
**ஆலய பரிபாலன சபைத் தலைவர்.**

### வாழ்த்துச்செய்தி

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"
என்றார் ஔவை மூதாட்டி




கோயில்கள் உள சமூக ஆரோக்கியத்தின் நிலைக்களனாக அமைகின்றன. ஆன்மீக, ஆரோக்கியம் என்பது மக்களின் வாழ்வியல் நிலையினை தீர்மானிக்கும் காரணிகளுள் ஒன்றாகின்றது எனலாம். இவ்வகையில் உரும்பிராயில் எழுந்தருளியிருக்கும் ஓடையம்பதி கற்பகவிநாயகர் ஆலயத்தின் புதிய தங்கரத வெள்ளோட்டம் என்பது மனநிறைவையும் அமைதியையும் வேண்டி நிற்கும் அடியவர்களின் உள்ளக்கிடக்கையின் வெளிப்பாடாகும்.ஆலயத்தின் 7 ஆம் திருவிழா உபயகாரர் திரு. தர்மலிங்கம் குடும்பத்தினால் அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டு காலத்தின் தேவையறிந்து ஆலய வருடாந்த பெருந்திருவிழா வுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ள இப்பாரிய பணி நன்றி வார்த் தைகளில் அடங்காதவனவாகும். தங்கரதத்தின் வெள்ளோட்ட விழா விற்காக இன்று வெளியிடப்படும் சிறப்பிதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச் சியடைகின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**சுபாஜினி மதியழகன்**
**பிரதேச செயலாளர், வலிகாமம் கிழக்கு, கோப்பாய்.**

### ஓடையம்பதி கற்பக விநாயகருக்கு இன்று தங்கரத வெள்ளோட்ட விழா



ஓடையம்பதியில் எழுந்தருளியிருக்கும் கற்பக விநாயகருக்கு புதிய தங்கரதம் உருவாக்க வேண்டும் என்று உபயகாரர் பெரும் விருப்பம் கொண்டு கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகக் கொண்ட எங்களுடன் கலந்து பேசி இந்த் தங்கரதத்தை சிறந்த முறையில் விநாயகரின் திருவருள் சிற்பங்களுடன் அமைத்துத்தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். விநாயகரின் திருவருள் அதுவென்றால் நா நினைப்பது ஒன்றுமில்லை. பத்தொன்பது அடி உயரமான பூஷாந் தி எண்கோண தங்கரதத்தை உருவாக்கியுள்ளேன். புதிய தங்கரத குறுகிய காலத் தில் மிகுந்த கலைச்சிற்பச் சிறப் புக் களுடன் நிறைவு பெற்றுள்ளது. உபய காரரின் விடாமுயற்சி இந்த தங்கரதத்தை உருவாக்குவதற்கு பெரும் காரணமாக அமைந்தது. என்னுடன் பல வழிகளில் உதவிய சிற்பக் கலைஞர்கள், [illegible] விநாயகரின் அடியவர்கள் அனைவருக்கும் [illegible] நன்நாளில் விநாயகரின் தங்க ரதம் பவ[illegible] காட்சியைக் கண்டு விநாயகப் பெருமானி[illegible] பிரார்த்திக்கின்றேன்.

**சிற்பஸ்தபதி, சிற்ப கலாவித்[illegible] கலா ஜோதி**
**தியாகராசா பிரதீபன்.**

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# தீராத சிக்கலாக தொடரும் விசாரணை

வடமாகாண சபை முதலமைச்சர் தனது அமைச்சரவையில் உள்ளவர்களின் ஊழல் விசாரணையை ஆரம்பித்ததால் ஏற்பட்ட சர்ச்சை இப்போதைக்கு முடிவுக்கு வரும் போலத் தெரியவில்லை. ஆளுக்கொரு நீதி என்பதாக அவர் நடந்துகொள்வதன் மூலம் இந்தப் பிரச்சினை தொடர்ந்தும் இழுபட்டுச் செல்லும் அறிகுறியே தெரிகிறது.

வடக்கு மாகாண சபையின் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் மற்றும் மீன்பிடித்துறை அமைச்சர் பா.டெனீஸ்வரன் ஆகியோர் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரிக்க அவர் புதிய விசாரணைக் குழு ஒன்றை நியமித்திருக்கிறார். இதற்கு முன்னர் நான்கு அமைச்சர்களையும் விசாரிப்பதற்கு அவர் நியமித்த குழுவின் தலைவராக இருந்தவரான முன்னாள் நீதிபதி எஸ்.தியாகேந்திரனே புதிய குழுவுக்கும் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அங்கத்தவர்கள் புதியவர்கள்.

ஆனால் இந்தப் புதிய குழுவைத் தாம் ஏற்கப்போவதில்லை என்றும் மாகாண சபையின் தெரிவுக்குழுவின் மூலம் நடக்கும் விசாரணைகளையே தாம் ஏற்றுக்கொள்வார்கள் என்றும் குற்றஞ்சாட்டப்படும் இரு அமைச்சர்களும் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

இது எதிர்பார்க்கப்பட்ட விடயம்தான். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும், வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் இடையில் அண்மையில் நடந்த கடிதப் போக்குவரத்தில் இரு சொற்கள் பயன்படுத்தப்பட்டன.

சுயாதீனமான மற்றும் சட்டபூர்வமான என்பவையே அந்தச் சொற்கள். ''சுயாதீனமான, சட்டபூர்வமான விசாரணை ஒன்றுக்கு அமைச்சர்களை ஒத்துழைக்குமாறு நான் ஆலோசனை கூறுவேன்" என்று சம்பந்தர் தனது கடிதத்தில் தெரிவித்திருந்தார். அதேபோன்று ''சுயாதீனமான சட்டபூர்வமான விசாரணை ஒன்றே நடத்தப்படும்'' என்று முதலமைச்சரும் தனது கடிதத்தில் உறுதியளித்திருந்தார்.

சம்பந்தரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட சட்டபூர்வமான விசாரணை என்பது மாகாண சபைத் தெரிவுக்குழுவே என்றும் அதற்கே தாம் உடன்படுவோம் என்றும் விசாரணைக்கு இலக்காகி இருக்கும் இரு அமைச்சர்களும் தெரிவித்திருக்கிறார்கள். முதலமைச்சரோ, தன்னளவில் தான் நியமிக்கும் விசாரணைக் குழுவும் சட்டபூர்வத்தன்மையுடன்தான் இருக்கிறது என்று வியாக்கியானப்படுத்துகிறார்.

இந்த இரண்டு வியாக்கியானங்களுக்கும் இடையில்தான் பிரச்சினையே இது எதிர்பார்க்கப்படாததுமல்ல. இந்த விடயத்தில் முதலமைச்சரின் பக்கமே பலவீனமானது.

**அவர் தான் நியமித்த முதலாவது விசாரணைக் குழுவின்** அறிக்கையில் சொல்லப்பட்டவற்றை முழுமையாக ஏற்கவில்லை. அந்த அறிக்கை அவருக்கு ஆதரவாக இருந்த இரு அமைச்சர்களைப் பதவி நீங்கும் நிலைக்கு இட்டுச்சென்றது. அதனை அவர் ஏற்றார். ஆனால் ஏனைய இரு அமைச்சர்களுக்கு எதிராகவும் முறைப்பாட்டாளர்களும் சாட்சிகளும் வரவில்லையாயினும், அதே விசாரணைக் குழு இரு அமைச்சர்களிடமும் விசாரணை நடத்தி, அவர்கள் அளித்த பதிலில் திருப்தியடைந்தே அவர்களைக் குற்றச்சாட்டில் இருந்து விடுவித்திருந்தது. எனினும் அதை ஏற்க முதலமைச்சர் விரும்பவில்லை.

இதைத்தான் சம்பந்தர் தனது கடிதத்தில் இயற்கை நீதிக்கு மாறானது என்று சுட்டிக்காட்டியிருந்தார். இப்போது இரு அமைச்சர்களும் முதலமைச்சர் நியமித்த குழுவை நிராகரிப்பார்களானால் எதிராளிகள் இல்லாமலேயே விசாரணை இடம்பெறும். அப்போது வரும் அறிக்கையும் ஒரு பக்க விசாரணையைக் கொண்டதாகவே முதலமைச்சரால் கொள்ளப்படவேண்டும்.

அப்படிக் கொள்ளப்பட்டால் அந்த அறிக்கையையும் நிராகரிப்பது முதலமைச்சருக்குத் தவிர்க்க முடியாதது.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முதலமைச்சரையும் உள்ளடக்கிய 5 அமைச்சர்களுக்கும் எதிரான புதிய விசாரணைக் குழு ஒன்றை எல்லோரும் ஏற்கும் விதத்தில் நியமிப்பதே தீர்வாக இருக்க முடியும்.

# செயற்றிறனற்ற வடக்கு மாகாண சபை இனியாவது எழுச்சி பெறுமா?

மதுசூதன்

போர் முடிவுக்கு வந்ததன் பின்னர், வடக்கு மாகாண சபை தமிழ் மக்களிடம் திணிக்கப்பட்டபோது, அது உச்ச அதிகாரம் பெற்றிராத ஒன்று என்று தலைவர்கள் பலரும் தமிழர்களின் தலையில் திணிக்கப்பட்ட அதைக்கொண்டு சில மேலாதிக்க விடயங்களைச் செய்ய முடியாதாயினும் பல விடயங்களை நிறைவேற்ற இயலும். ஏனைய மாகாணசபைகள், எத்தனையோ அபிவிருத்தித்திட்டங்களை தத்தமது மாகாண்ங்களில் ஏற்படுத்தி இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கி அவர்களை முன்னேற்றப்பாதையில் இட்டு செல்கின்றன.

## வடக்கு மீது பல தரப்புக்களும் கரிசனை

இத்தகைய நிலையில் போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட மாகாணமாக வடக்கு இருப்பதால், பன்னாட்டின் கரிசனையும், இலங்கையின் கவனமும், நிதியும் அதிகமாகவே வடக்குக்குகிடைக்கப்பெற்றது. அதைக்கொண்டு வடக்கு மாகாண சபை, வடக்கு மாகாணத்தில் என்ன அபிவிருத்தியை ஏற்படுத்தினார்கள். ஒதுக்கப்பட்ட நிதி முற்றிலும் செலவு செய்யப்படாமல், அவற்றில் ஒரு பகுதி வருடாவருடம் திறைசேரிக்குத் திரும்பிப்போனதை எவரும் மறந்துவிட முடியாது. மக்களைத் திருப்திப்படுத்த **நிதி எதுவும் திரும்பவில்லை** என்று 'விடுகை'க் கதைகள் கூறியது ஒருபுறமிருக்க, தொடர்ந்தும் எம்முன்னாலிருக்கும் இனப்பிரச்சினை சம்மந்தமாகப் பேசிக்கொண்டிருப்பதற்குச் சமாந்தரமாக, எமது வடக்கின் பொருளாதார அபிவிருத்தி சம்பந்தமாக தீர்க்கமான முடிவுகளை எடுக்கவேண்டியது அவசியம். வெறுமனே இனப்பிரச்சினை சம்மந்தமான பிரேரணைகளை மட்டும் நிறைவேற்றிக் கொண்டிருக்காது, அதனுடன் இணைந்த அபிவிருத்தியையும் நாட்டில் ஏற்படுத்தியே ஆக வேண்டும். அந்த வகையில் வடக்கு மாகாணசபை இதுவரை காலமும் சாதித்தது என்ன? என்ற கேள்வி, எல்லோர் மனதிலும் எழ வேண்டிய ஒன்றே. எத்தனை தொழிற்சாலைகள் இங்கு ஆரம்பிக்கபப்பட்டன? எத்தனை பேருக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன? விவசாய முன்னேற்றம் என்ன ஏற்படுத்தப்பட்டது? கால்நடை அபிவிருத்தி என்ன நிலையில் உள்ளது? கட்டுமான அபிவிருத்தியின் நிலையென்ன? உப்பளங்கள், சீமெந்துத் தொழிற்சாலைகள், விமானத் தளங்கள் ஏன் இன்னும் உருப்பெறவில்லை? இறக்குமதிக்குள் மட்டும் சிக்கி சின்னாபின்னமாகிக்கொண்டிருக்கும் எமது தமிழ் மக்களை ஏன் ஏற்றுமதி குறித்துச் சிந்திக்க வைக்கும் விதத்தில் செயற்படவில்லை. போரினால் பாதிக்கப்பட்டோரின் வாழ்க்கைத்தரத்தின் உயர்ச்சி மட்டம் ஏன் இன்னமும் பூரணப்படுத்தப்படவில்லை?

**வடக்கு மாகாண சபை தனது ஆட்சி அதிகார வரம்பு முறைகளுக்கு உட்பட்டு இது வரை சாதித்ததை விட சாதிக் காதவையே இமாலயமாகத் தெரிகிறது.**




இயற்கைச் சூழல் பிரச்சினைகள் வந்த போதும், அதை மக்களுக்கு தெரிவிக்காமல் மூடி மறைக்க முற்பட்டமை போன்ற சகல பிரச்சனைகளும் இன்று விசுவரூபம் எடுத்து நிற்கின்றன. ஆக, வடக்கு மாகாண சபை தனியே பிரேரணைகளை நிறைவேற்றியதற்குப் பாலும், விழாக்களைக் கொண்டாடியதற்கு அப்பாலும், நிதிகளைத் திருப்பி அனுப்பிவைத்ததற்கு அப்பாலும், நிதியை விரயம் செய்ததற்கு அப்பாலும் ஊழலுக்கு அப்பாலும் சாதித்தது என்ன? விடை ஒன்றுமேயில்லை என்றுதான் அமையப்போகிறது.

## வினைத்திறனற்ற நிர்வாகம்

ஆக, வடக்கு மாகாண சபை தனது ஆட்சி அதிகார வரம்பு முறைகளுக்கு உட்பட்டு இது வரை சாதித்ததைவிடச் சாதிக்காதவையே இமாலயமாகத் தெரிகிறது. இந்தவகையில் உற்று நோக்கினால், அது இவ்வளவு காலமும் வினைத்திறனற்று இயங்கி வந்தமை புலனாகிறது.

இத்தகு வினைத்திறனற்ற நிலைக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள், அமைச்சர்களுக்கப்பால் முதலமைச்சரின் வகிபங்கு அதிகமாகவே அமையும் என்பதை விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக் கொண்டேதான் ஆக வேண்டும். இதற்கப்பால் முதல்வர் தொடர்பான சமீபத்தைய பிரச்சினைகளும், முன்னரே வினைத்திறனாக உள்வீட்டுக்குள் தீர்க்கப்படக் கூடிய ஒன்றை சந்திக்குக் காவிச்சென்று மக்களை அதிருப்திக்கு உள்ளாக்கியதற்கு அப்பால் எமது தமிழ்த் தேசிய ஒற்றுமையையும் கேள்விக்குள்ளாகி, தெற்குக்கும் பன்னாட்டுத் தரப்புக்கும் தீனியிட வைத்துள்ளது.

எனவே, இவ்வாறு வினைத்திறனற்ற வடக்கு மாகாண சபை இயங்க வேண்டியது அவசியம்தானா? என மக்கள் சினமடைவதற்கும் வாய்ப்புண்டு. எனவே சம்பந்தப்பட்ட அனைவரும், முதலமைச்சர் உட்பட, இனியாவது வட மாகாண சபையை மக்களுக்கான சபையாக மாற்றி அபிவிருத்தியுடனிணைந்த உரிமை வென்றெடுப்புக்கான சபையாக உருவாக்க முய வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.



# சிக்கல் நிலையில் அரச தலைவரதும் சவூதி மன்னரதும் அரசியல் இருப்பு

■ வீ.எஸ்.ரீ

மத்திய கிழக்கு நாடுகளில் கடும் அரசியல் புயல் வீசி வருகிறது. சவூதி அரேபியாவின் அடுத்த மன்னராக நியமிக்கப்படவுள்ள இளவரசர் முகமது பின் சல்மானை இலக்கு வைத்தே இந்த அரசியல் புயல் மையம் கொண்டுள்ளது. 2030ஆம் ஆண்டு முதல் எரிபொருள் உற்பத்தியில் மட்டும் நாட்டின் பொருளாதாரம் தங்கியிராத நாடாக சவூதி அரேபியாவை ஆக்குவதே இளவரசர் சல்மானின் விரும்பமாகும். ‘அரம்கோ’ போன்ற பெற்றோலிய உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பெரும் அரச நிறுவனங்களது பங்குகளை தனியார் நிறுவனங்களுக்கு விற்பனை செய்ய இளவரசர் முகமது பின் சல்மான் விரும்பு கிறார். சவூதி இராச்சியத்தின் எதிர் காலத்துக்கான சிந்தனைப் புரட்சி, நாட்டின் புதிய பரம்பரைக்கு அவசியமென்பதைத் தற்போதைய மன்னர் சல்மான் ஏற்றுக் கொள்கிறார். அந்த விடயத்தில் அவர் முக்கிய சிக்கலொன்றுக்கு முகம் கொடுக்க நேர்கிறது.

சவூதிக்கு வெளியிலிருந்து சவூதி அரசுக்காகப் போரிடும் இராணுவ அமைப்பொன்றை உருவாக்கும் திட்டமே சிக்கல் கொடுப்பதாக அமைகிறது. தற்போது சவூதி அரேபியாவில் செயற்படும் இராணுவம் கூலிப்படையேயாகும். சம்பளம் பெறுவதற்காக இராணுவத்தில் இணைந்து செயற்படும் வெளிநாடுகளைச் சேர்ந்த சிப்பாய்களே அதில் பெருமளவில் அங்கம் வகிக்கின்றனர். பாகிஸ்தான், பங்களாதேஷ், வட ஆபிரிக்கா, ஆகிய நாடுகளின் முஸ்லீம் இனத்தவர்களே இதில் பெரும்பாலும் அங்கம் வகிக்கின்றனர். அவர்கள் கூலிக்காக வேலை செய்யும் ஊழியர்களேயன்றி, இராணுவச் சிப்பாய்களல்ல. அ!வர்கள் தமது உயிரைத் துச்சமாக மதித்து மன்னர் சல்மானுக்காகவோ, அவரது அடுத்த வாரிசுக்காகவோ போரிடவோ, உயிரை அர்ப்பணிக்கவோ போவதில்லை.

**சம்பளத்துக்காகப் பணியாற்றும் படையினர்**

மேற்குறிப்பிட்ட நிலைமை கட்டார் இராச்சியத்துக்கும் பொருத்தமானதே. அந்த நாட்டிலும்கூட சம்பளத்துக்காகச் சேவையாற்றும் வெளிநாட்டவர்களே இராணுவத்தில் சேவையாற்றுகின்றனர். ஆனால் கட்டார் நாட்டின் அரச தலைவர் எமீர் இந்தப் பின்னடைவினின்றும் விடுபடுவதற்காக தலிபன், ஐ.எஸ்.ஐ.எஸ், அல்க்வேடா, முஸ்லிம் சகோதரத்துவம் போன்ற கடுங் கோட்பாட்டு முஸ்லிம் அமைப்புக்களுடன் இரகசியத் தொடர்புகளைப் பேணி வருகிறார் என்று சொல்லப்படுகிறது. இதற்காக கட்டார் அரச தலைவர் எமீருக்கு ‘அல் ஜசீரா தொலைக்காட்சியூடாக மேலதிக வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன. ஏனெனில் கடும் கோட்பாட்டு இஸ்லாமிய வாதிகளுக்கு மக்கள் மத்தியில் தம்மை நிலைநிறுத்திக்கொள்ள ஊடகங்களது ஆதரவு அவசியம் என்பதனாலாகும். நீண்டகால நோக்கில் நோக்குவோமானால், ஏகாதிபத்திய அரச தலைவருக்காகப் போரிடும் இராணுவத் தரப்பை உருவாக்குவது சிரமமானதொரு பணியாகும். ஹிட்லர் கூட ஜனநாயக வழியில் தேர்தல் மூலமே அதிகாரத்தைக் கைப்பற்றிய ஒருத்தராவார். அந்த வகையில் சவூதி அரேபியா மற்றும் கட்டார் ஆட்சியாளர்கள் எதிர்நோக்கும் முக்கிய சவால், எதிர்காலத்தில் தாம் கலந்து கொள்ளும் போர்களில் தத்தமது தரப்புக்களுக்காக போரிடவுள்ள இராணுவத்தை எப்படிக் கட்டமைப்பது என்ற சிக்கலாகும்.

**இறுக்கமான இராணுவத் தரப்பு உருவாக்கல் அவசியம்**

லிபிய நாட்டின் ஆட்சியாளர்கள் இறுக்கம் மிக்க இராணுவத்தரப்பொன்றை உருவாக்கி வைத்திராததன் காரணமாகவே நலிவடைந்து நாசமுறநேர்ந்தது. உள்நாட்டுப் போர் ஆரம்பமான வேளையில் லிபியாவில் நிலைகொண்டிருந்தது, அரசத்தலைவர் பாதுகாப்புப் பிரிவு என்றதொரு பிரிவு மட்டுமேயாகும்.

எந்தவொரு நாட்டிலும், நாட்டுக்காகப் போரிடத்தக்க இராணுவ அமைப்பொன்றை உருவாக்குவதற்கு ஜனநாயகக் கட்டமைப்பொன்று அவசியமானது என்பதை மேற்குறிப்பிடப்பட்ட வரலாற்று அனுபவம் மூலம் எங்களால் உணர்ந்து கொள்ள இயலும், சவூதி அரேபிய ஆட்சியாளர்களால் யேமன் நாட்டின் மீது ஆரம்பிக்கப்பட்டுள்ள தாக்குதல்கள் வான்தாக்குதல்கள்வரை விரிவடைந்துள்ளன. சவூதி அரேபிய அரசுக்கு தனது காலாட்படையணியை வேறொரு நாட்டுக்கு அனுப்புவதென்பது மிகச் சிரமமானதொன்றாகும். அதற்காக அமெரிக்க இராணுவத்தை மட்டுமே பயன்படுத்த இயலும்.

**கூட்டாட்சித் தரப்புக்கும் நிறையவே சிக்கல்கள்**


தற்போது நாம் எமது நாட்டின் கூட்டாட்சி அரசு குறித்து நோக்குவோம். சவூதி மன்னர் தரப்பில் ஏமனில் போரில் ஈடுபட காலாட்படை இல்லாதிருப்பது போன்று, கூட்டாட்சி அரசுக்காக போரில் ஈடுபட அரசியல் எழுச்சியாளர்கள் எவரும் கிடையாது. மகிந்த ராஜபக்ச தரப்பினர் சல்மான் அரசரது நிலைக்கே வீழ்ச்சி கண்டுள்ளனர். பணம் மற்றும் கடுங் கோட்பாட்டின் மூலமாக மகிந்தவால் எழுச்சியாளர்களை உருவாக்க இயலும். ஆனால் எதிரணிக்குள் எதிர்த்தரப்பாகியுள்ள மகிந்தவுக்கு, அவருக்காக போரிட மாற்று எழுச்சியுடன் கூடிய தரப்பினர் எவருமில்லர். மீண்டும் அதிகாரத்தைச் கைப்பற்றும் நடவடிக்கைகளுக்கு சிங்கள மத்தியதர வர்க்கத்தவர்களது ஆதரவு மகிந்தவுக்கு அவசியமாகும். அந்த வகையில் அவருக்குத் தற்போதுமீந்திருக்கும் ஒரே இனவாத எழுச்சித் தரப்பு நாட்டுப் பற்றாளர் தரப்பே யாகும். தமிழர் எதிர்ப்பு அச்சம், சிங்கள மத்திய தர வர்க்கத்தினர் முன்னால் நிவாரணக் குளிகை போன்றதொன்றே. ஆனால் 2005 ஆம் ஆண்டில் மகிந்தவைப் பதவிக்குக் கொண்டு வர உதவியது, சமாதானத்தை முன்னிலைப்படுத்திய நல்லிணக்க இயந்திரமே. அந்த நடவடிக்கைகள் ஊடாக இலங்கையில் அதுவரை நிலவிவந்த இடதுசாரிவாதத்தின் கடைசித்தரப்புக்களது வலு, மகிந்தவுக்குக் கிட்டியது.

ஆயினும் முள்ளிவாய்க்கால் வெற்றிக்குப் பின்னர் மகிந்தவால் தமிழ் மக்கள் பக்கம் சிறிய அளவில் கூட நெருங்க இயலாது போயுள்ளது. எனவே மகிந்தவால் தமது அடுத்த பரம்பரையை சுதந்திரக் கட்சியினுள் உறுதிப்படுத்திக் கொள்ள மட்டுமே இயலும்.

மறுபுறத்தில் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்காக உயிரைக் கொடுத்துப்போரில் ஈடுபடத்தக்க எழுச்சியாளர்கள் எவரும் சுதிந்திரக் கட்சியில் இல்லை. உண்மைநிலை குறித்துக் கணிப்பிடுகையில், ஆறு அடிநீளக் குழி குறித்த யதார்த்தவாதக் கருத்து அரச தலைவர் வசம் உள்ளதால் தமது பின்னடைவு நிலை குறித்த கணிப்புடன் அவர் செயற்படுகிறார். ஆதலால் அவர் கட்டார் நாட்டின் தலைவர் எமீரது அரசியல் நிலைப்பாட்டுக்கு இறங்கி வந்துள்ளார்.

**அரசியலில் ஊடகங்களது பங்கு முக்கியத்துவம் மிக்கது**

2020 ஆம் ஆண்டில் முகம்கொடுக்க வேண்டிய அரசியல் யதார்த்தத்தை ஊடகங்களே உருவாக்கவுள்ளன என்பதை நல்லாட்சி அரசு உணர்ந்து கொண்டுள்ளது. சமூகவலு 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் உயர்வு காணாத நிலையின் கீழ், அரசியல்வலுவை, கடுங்கோட்பாட்டுநிலைப்பாட்டைக் கைக்கொள்வதன் மூலமே பெற இயலும் என்பதை மைத்திரிபால தரப்பினர் உணர்ந்து கொண்டாக வேண்டும். மகிந்தவோ அதனை மனிதவலுமூலம் ஈட்டமுடியும் என நம்புகிறார். இத்தகைய புதிய சிந்தனை காரணமாகவே மங்கள சமரவீர, நிதிமற்றும் ஊடகத்துறை அமைச்சராக நியமனமாகியுள்ளார். நாட்டின் வடக்கிலும் தெற்கிலும் நாடாளுமன்றப் பலம், சமூக வலு மூலம் தீர்மானிக்கப்படுவதில்லை. அது ஊடகங்கள் ஊடாக உருவாக்கப்படும் பலதரப்பட்ட கருத்துக்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகின்றன. இத்தகைய பின்னணியில் நாட்டுப்பற்றாளர் தரப்பால் பெரிதாக எதையும் சாதிக்க இயலாது. மத்திய கிழக்கு வட்டகையில் உருவாகியுள்ள புதிய அரசியல் புயலினூடாக, அமெரிக்கர்களது நாட்டுப்பற்றுக்கு அரசதலைவர் டொனால்ட் றம்பால் மேற்கொள்ளத்தக்க நடவடிக்கை மட்டுப்படுத்தப்பட்ட தொன்றாகவே அமையும்.



## ஆசிரியருக்கான கடிதம்

### பொதுநூலக வாசகர் வட்டம் கிள்ளுக்கீரை அல்ல!

இம்மாதம் 15ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரமாகிய, யாழ். பொதுசன நூலக வாசகர் வட்டம் பற்றி சி.சிவதரன் என்பவரால் எழுதப்பட்ட கடிதத்துக்கான பதில் கடிதமாக இந்தக் கடிதம் எழுதப்படுகிறது.

பொதுநூலக வாசகர் வட்ட செயற்குழு உறுப்பினராக நான் இருக்கின்ற போதிலும், தனிப்பட்ட ரீதியில் எனது கருத்தை முன்வைக்க விரும்புகிறேன். சிவதரன் என்பவரால் எழுதப்பட்ட குறித்த கடிதமானது, வாசகர் வட்டத்தின் பணிகள் உள்ளடக்கியிருக்கும் விசாலமான தன்மையை காழ்ப்புணர்வுடன் வேண்டுமென்றே நிராகரிக்கிறது. கலை, இலக்கிய, அறிவியல், திரைப்படம் சார்ந்த பணிகள் பற்றிய எவ்விதமான புரிதலுமின்றி கிணற்றுத் தவளை நிலையிலிருந்து எழுதப்பட்டிருக்கிறது. வாசகர் வட்டம் அதற்குரிய வரம்பு, எல்லைகளைப் பேணிக்கொண்டு, நிறைவு தரும் விதத்தில் பணிசெய்து வருகிறது. நூலக எரிப்பு நினைவு நிகழ்வில் வாசகர் வட்டத் தலைவரிடம் முதன்மை வகிக்குமாறு கேட்கப்பட்டது என்று சிவதரன் கூறுவது உண்மைக்குப் புறம்பான விடயம். நிகழ்வில் உரையாற்றுமாறு கேட்கப்பட்ட பொழுது வாசகர் வட்டத் தலைவர் அதற்கு உடன்படாததற்குச் சில காரணங்கள் இருக்கின்றன. அரசியல் அல்லது ஓர் அமைப்புச் சார்ந்த கொள்கை உடன்பாடு இல்லாத சந்தர்ப்பத்தில் ஒரு விடயத்தைத் தவிர்த்துக் கொள்ளுதல் என்பது ஒருபோதும் சந்தர்ப்பவாதம் ஆகாது. வாசகர் வட்டம் இறுதியாகத் திரையிட்ட ‘பியாசா’ என்ற இந்தி மொழித் திரைப்படம், உலகத்தின் தலைசிறந்த நூறு படங்களுக்குள் ஒரு படமாக பல விமர்சகர்களால் கணிக்கப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் திரையரங்குகளில் திரையிடப்படாத உலகத் தரம் வாய்ந்த கலையம்சம் பொருந்திய படங்களைத் தான் வாசகர் வட்டம் திரையிட்டு வருகிறது.


சிவதரன் போன்றோர் வாசகர்வட்ட நிகழ்வுகளை நேரடியாகப் பார்த்து சரியாக மதிப்பீடு செய்வது பயனுள்ள விடயமாக இருக்கும்.

ம.பாலசுப்பிரமணியம்
மானிப்பாய்.

# சீன அரசின் 'ஒரே மார்க்கம் ஒரே தடம்' திட்டத்துக்கு இலங்கை அரசு ஆதரவு

## நிதி நகர மற்றும் தொழிற்பேட்டை அபிவிருத்திக்கும் ஒத்துழைப்பு






சீன அரசின் 'ஒரே மார்க்கம் ஒரே தடம்' திட்டத்துக்கு இலங்கை அரசு எப்போதும் ஒத்துழைப்பு வழங்கும் என தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
அதேபோன்று அம்பாந்தோட்டை தொழிற்பேட்டை மற்றும் கொழும்பு நிதி நகரத்தின் நிர்மாணப்பணிகளுக்கு சீன அரசு வழங்கி வருவதான ஒத்துழைப்புகளுக்கும் அரசு ஆதரவு வழங்குவதான தகவலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
தவிர, உண்மையான நட்பு நாடாக சீனா தொடர்ந்து இலங்கையுடன் செயற்படும் என்பதான விடயங்களும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
இலங்கைக்கு அண்மையில் வருகை தந்திருந்த சீன கம்யூனிஸ்ட் கட்சியின் உயர் மட்ட பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின்போதே இந்தத்தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.
சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழுவின் வெளிவிவகாரதிணைக்களத்தின் தலைவர் சொன்க்டாபி உள்ளிட்ட சில உறுப்பினர்கள் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர் எனக் கூறப்படுகிறது.



## ஐரோப்பிய நாடுகளுக்கான கடலுணவு ஏற்றுமதி அதிகரிப்பு


*30 ஆயிரத்து 124 மில்லியன் ரூபா வருமானம் பதிவு*

கடந்த ஆண்டில் ஐரோப்பிய நாடுகளுக்கான கடலுணவு பொருள்களின் ஏற்றுமதி அதிகரித்துள்ள தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
இதன்படி கடல் உணவுப் பொருள்களின் ஏற்றுமதியானது ஆயிரத்து ஏழு மெற்றிக் தொன்களாக அதிகரித்துள்ளதென கடற்றொழில் அமைச்சு தெரியப்படுத்தியுள்ளது.
குறிப்பாக கடந்த 2016 ஆம் ஆண்டின் ஜூலை மாதம் தொடக்கம் 2017 ஆம் ஆண்டின் மே மாதம் வரையான 11 மாதகாலப்பகுதியில் 19 ஆயிரத்து 911 மெற்றிக் தொன் அளவுடைய கடலுணவுகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.
இதனூடாக 30 ஆயிரத்து 124 மில்லியன் ரூபா வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளதென கடற்றொழில் அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## கூரைச் சூரியப் படல்கள் தேசிய மின்கட்டமைப்புடன்

### இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு பணிப்பு

கூரை சூரியப் படல்கள் தேசிய மின்கட்டமைப்புடன் இணையவுள்ள தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதன்படி மின்சேவை வழங்குநர்களான இலங்கை மின்சார சபை மற்றும் லங்கா எலெக்ரிசிட்டி நிறுவனங்களுக்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தமித்த குமாரசிங்க மேற்படி இணைவு தொடர்பான பணிப்புரைகளை வழங்கியுள்ளார் எனக் கூறப்படுகிறது.
மேலும், "மரபிற்குப் புறம்பான, புதுப்பிக்கக் கூடிய சக்தி மூலவளங்களின் மத்தியில் கூரைச் சூரியப் படல் தொழில்நுட்பமானது மின்கட்டமைப்புடன் இணைத்தல் மற்றும் பொருத்துதல் ஆகியவற்றுக்கான அதிவிரைவான தொழில்நுட்பச் செயன்முறையாக காணப்படுகிறது.
அதேபோன்று அரசின் 'சூரிய சக்திப் புரட்சிக்கு' எனும் நிகழ்ச்சித்திட்டமானது வருங்காலமின் சக்தித் தேவையை கணிசமான அளவு தீர்க்கக் கூடியதான சிறந்த திட்டமாக விளங்குகிறது.
2016ஆம் ஆண்டில் கூரைகளில் பொருத்தப்பட்ட சூரியப்படல்கள் மூலமாக இலங்கையானது 42 மெகா வாட்ஸ் கொள்ளளவை தேசிய மின்கட்டமைப்புக்குச் சேர்த்துள்ளது." - என்றார்.
2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரையான தகவல்களின்படி இலங்கையில் கூரைச் சூரியப் படல் மின்னுற்பத்தி நிலையங்கள் 7 ஆயிரத்து 904 பொருத்தப்பட்டும், தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டும் உள்ளமை நோக்கத்தக்கது.



## இடர்ப் பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு இழப்பீடு

### 520 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

வெள்ளம், மண்சரிவு இடர்களினால் பாதிக்கப்புட்ட வயல் உரிமையாளர்களுக்கு நெல் மற்றும் உரம் என்பன இலவசமாக வழங்கப்படவுள்ள தகவல் விவசாய காப்புறுதி சபையின் தலைவர் சிட்னி கஜநாயக்கவால் வெளிப்படுத்தப்பட்டள்ளது
இதன்பிரகாரம் பாதிக்கப்பட்ட ஐந்து லட்சத்து 20 ஆயிரம் விவசாயிகளுக்கும் நான்கு கோடி ரூபாவை இழப்பீடாக வழங்க, 520 கோடி ரூபாவை திறைசேரி ஒதுக்கியுள்ளது.
மேலும் உரக்கூட்டுத்தாபனமும், விவசாயத் திணைக்களமும் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை அமுல்படுத்தப்படவுள்ளதாகவும், வழங்கப்படவுள்ளதான உதவி திட்டங்கள் கமநல சேவைகள் மத்திய நிலையத்தின் ஊடாக விநியோகம் செய்யப்படவுள்ளதெனவும் கூறப்படுகின்றது.

CABINET DECISIONS

## வருடாந்த பஸ் கட்டண திருத்தத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம்

*6.26 வீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளன*

வருடாந்தபஸ்கட்டணங்களின்திருத்தத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதென தெரிவிக்கப்படுகின்றது.
இதன்படி தேசிய போக்குவரத்து ஆணைக்குழு முன்வைத்த பிரேரணைக்கு அமைவாக பஸ்கட்டணங்கள் 6.26 வீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளதுடன் கட்டண திருத்தங்கள் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரவுள்ளன.
புதியக்கட்டணதிருத்தத்துக்கு அமைய குறைந்த பட்ச பஸ்கட்டணமானது 9 ரூபாவிலிருந்து 10 ரூபா வரை அதிகரிக்கப்படவுள்ளன.
அதேவேளை அண்மையில் ஏற்பட்ட இயற்கை இடரினால் பாதிக்கப்பட்டவர்கள் கடவுச் சீட்டுக்களை பெற்றுக் கொள்ளும் போது அவர்களுக்கான கட்டணச் சலுகை நிவாரணங்களை வழங்கவும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.
குறிப்பாக காணாமற்போன கடவுச் சீட்டொன்றை மீளப்பெற்றுக் கொள்ளும் போது செலுத்த வேண்டியதான 10 ஆயிரம் ரூபா பணச் செலுத்துகைகள் விலக்களிக்கப்படவுள்ளன.
தவிர, ஜனவரி முதலாம் திகதிக்கு பின்னர் கடவுச்சீட்டொன்றை பெற்றுக் கொண்ட போதிலும், வெளிநாடு செல்லாதவராகவிருந்தால் 100 ரூபா சலுகைக்கட்டணத்தை மாத்திரம் செலுத்திக் கடவுச்சீட்டொன்றைபெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.
இந்தசலுகைஅடிப்படைகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 30ஆம் திகதி வரை வழங்கப்படவுள்ளன.


CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 212221455

பங்குச்சந்தைத் தகவல்கள்

28/6/2017
www.cse.lk

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | -6.10 | 6,697.08 | 6,703.18 |
| S&P SL20 | -11.51 | 3,898.48 | 3,909.99 |
| வியாபாரப்புரள்வு | | 1,095,786,620 | 1,754,753,790 |
| உள்நாடு:- கொள்வனவு | | 737,683,780 | 473,439,328 |
| விற்பனை | | 946,268,740 | 868,825,790 |
| வெளிநாடு:- கொள்வனவு | | 358,102,784 | 1,281,314,560 |
| விற்பனை | | 149,517,824 | 885,928,060 |




| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| அமானா வங்கி | ABL.N | 3.70 | 90,296,096 | 316,037,995 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 178.90 | 1,635,183 | 292,695,623 |
| சம்பத் வங்கி | SAMP.N | 286.70 | 235,037 | 67,383,524 |
| சேவ்ரோன் லுப்பிரிக்கன் | LLUB.N | 166.00 | 367,011 | 60,932,674 |
| ஹேலிஸ் | HAYL.N | 295.00 | 125,785 | 36,487,720 |
| மெல்ரோஸ்கோப் | MELS.N | 67.00 | 376,818 | 25,251,817 |
| பிரமால் கிலாஸ் | GLAS.N | 6.30 | 3,610,477 | 22,396,039 |
| பிப்பிள் லீசிங் அன் பைனான்ஸ் | PLC.N | 18.20 | 1,227,864 | 22,101,702 |
| டோக்கியோ சிமேன் - X | TKYO.X | 68.00 | 318,136 | 21,788,553 |
| டோக்கியோ சிமேன் | TKYO.N | 74.90 | 282,282 | 20,901,827 |

- பங்குலாபம் -

சதோசா மேட்டார் - ரூபா 5:00
சிஜசி ஹோல்டிங்ஸ் - ரூபா. 1:00
டோக்கியோ சிமேன் - ரூபா. 1:87

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 296 |
| பரிமாற்றத்தில் | 245 |
| விலை உழைப்பு | 11.4 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளை | 2.6 |

# ஆறுமுகக் கந்தனவன் அருளின் செந்தளிப்பைக் காண மாவைக் கந்தனிடம் வாரீர்

## இன்று கொடியேற்றம்

எஸ்.ரி.குமரன்

*முருகனே செந்தில் முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே - ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்
பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.*


என்று போற்றப்படுகின்ற தமிழர்களைக் காத்தருளும் பெருந் தெய்வமாகிய முருகப் பெருமான் பல்வேறு இடங்களிலும் ஆலயம் கண்டு, திருமுகப் பொலிவு கொண்டு எழுந்தருளியிருப்பதைக் காணமுடிகிறது. இலங்கையிலே பிரசித்தி பெற்றுள்ள முருகப் பெருமானுக்குரிய வழிபாட்டுத் ஸ்தலங்களில் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயமும் ஒன்றாக, அருளின் தனித்துவப்பேறாக மிளிர்வுறுகின்றது. வரலாற்றுப் பெருமையும், வழிபாட்டுப் பெருமையும் கொண்டு விளங்குகி றது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என மூன்றும் ஒருங்கே அமையப் பெற்ற சிறப்புடையது.

யாழ் குடாநாட்டிலுள்ள முப்பெரும் முருகன் ஆலயங்களில் ஒன்றாக சிறப்புறுவதுடன் யாழ்ப்பாணத்தில் இருந்து காங்கேசன் துறைக்கு செல்லும் பிரதான நெடுஞ்சாலையின் ஓரமாக மாவிட்டபுரம் எனும் பதியில் அமைந்துள்ளது. ஆலயத்தை இயற்கை எழிலின் அணிகலன் கொண்டு அலங்காரம் செய்தபடியே அருகருகாய் தையிட்டி, வீமன்காமம், வறுத்தலை விளான், கட்டுவன், குரும்பசிட்டி, தெல்லிப்பழை, அளவெட்டி, கொல்லங்கலட்டி, பன்னாலை, இளவாலை, கருகம்பானை, நகுலேஸ்வரம், மயிலிட்டி ஆகிய கிராமங்கள் அமைவு கொண்டுள்ளன.

### வரலாறு


மாவைக்கந்தன் ஆலயத்துக்கு நீண்ட நெடிய வரலாறுகள் உண்டு. ஏழாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஆலயம் தோற்றம் பெற்றதாகச் சொல்லப்படுகிறது. ஒரு அற்புத நிகழ்வோடு இணைந்த வகையிலேயே ஆலய வரலாற்றின் ஆரம்பம் அமைந்திருப்பதும் சிறப்பு. சோழநாட்டு மன்னனான திசையுக்கிர சோழன் மனைவியாகிய கனகாங்க குதிரை முகமுடைய பெண் குழந்தையொன்றை பெற்றெடுத்தாள். மாருதப்புரவீகவல்லி என்ற பெயருடைய அந்த அரசகுமாரி குன்ம நோயினாலும் பீடிக்கப்பட்டிருந்தாள். இந்தநிலையிலே குன்மநோயும், குதிரைமுகமும் கொண்டவளாக விளங்கிய அரசிளங்குமாரி சோழநாட்டினின்றும் நீங்கி ஈழமணித் திருநாட்டின்கண் வந்து தங்கி தீர்த்தமாடவும், பின்பு சிவாலய தரிசனம் கண்டுகொள்ளும் நியமம் பூண்டும் அதன் பயனாய் நோயும் நீங்கப் பெற்று குதிரைமுகமும் மாறப்பெற்றாள் என்பது வரலாறு. அவள் தங்கியிருந்த இடம் ‘குமாரத்தி பள்ளம்’ என இன்றும் வழங்கப்படுகின்றது. எவ்விடத்தில் அரசிளங்குமாரியான மாருதப்புரவீகவல்லியின் குதிரை முகம் நீங்கியதோ அவ்விடம் இன்று மாவிட்டபுரம் என அழைக்கப்பெறுகின்றது.

> கலியுகக் கந்தனாக மாவையம்பதியில் வீற்றிருந்து அருள் பாலிக்கின்ற மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமையப் பெற்ற முருகப் பெருமானை அனைவரும் வழிபட்டு இம்மை, மறுமைப் பயன்களைப் பெற்று உய்வோமாக.



அரசிளங்குமாரி மாருதப்புரவீகவல்லி கீரிமலையிலுள்ள ‘கண்டகி’ தீர்த்தக் கேணியில் நீராடிவிட்டு வரும் வழியிலேயே குதிரை முகம் நீங்கப்பெற்றதுடன் அவள் அழகுத் தோற்றத்தைப் பெற்றதாகவும் கூறப்படு கிறது. அவ்விடமே மாவிட்டபுரம் (மா- குதிரை, விட்ட நீங்கிய, புரம் - நகரம்) என அழைக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது.

குதிரை முகம் நீங்கியதால் மகிழ்ச்சியடைந்த அரசகுமாரி அவ்விடத்தில் முருகனுக்கு ஓர் ஆலயம் அமைக்க வேண்டும்என்றவிருப்பத்தை தெரிவிக்கவே திசையுக்கிர சோழ மன்னனும் அங்கிருந்து ஆலயம் அமைப்பதற்கு வேண்டிய பொருள்க



ளுடன் ஆலய விக்கிர கங்கள், தொழிலாளர்கள், சிதம்ப ரத்தைச் சேர்ந்த அந்தணப் பெரியார்களையும் அனுப்பி வைத்து சிவாகம முறைப்படி பெரிய இராஜகோபுரத்துடன் ஆலயத்தை நிர்மாணித் தான். இந்தப் பணிகள் கி.பி 789 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

### உற்சவங்கள்

ஆலயத்தில் நித்திய பூசைகளும் வெள்ளிக்கிழமை மற்றும் கார்த்திகை நட்சத்திரம் பொருந்திய நாளகளில் விசேட பூசை வழிபாடுகளும் இடம்பெறுகின்றன. வருடந்தோறும் ஆடி அமாவாசை தினத்தன்று 25 ஆம் திருவிழாவாகிய தீர்த்தத்திருவிழா இடம்பெறுவதுடன் 25 திருவிழாக்களும் சிறப்புற இடம்பெற்று வருகின்றன. இருபத்தைந்து நாள்களும் மாவைக் கந்தப் பெருமானின் எழுந்தருளலும், வீதி உலா வருககையும் பக்தி சிரத்தையுடன், சிவாகம முறைப்படி பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் புடைசூழ்ந்துவர அருளின் பொலிவோடு இடம்பெறும். மாருதப்புரவீகவல்லி தீர்த்தமாடி அருள்பெற்ற கீரிமலை கண்டகி எனப்படும் புனித தீர்த்தத்திலே மாவைக் கந்தனும் ஆடி அமாவாசை தினத்தன்று இடம்பெறும் தீர்த்தோற்சவத்தில் தீர்த்தமாடி தன்னை நாடிவரும் அடியவர்களுக்கு அருளினை கனிவோடு ஊட்டி வினைப் பசியைப் போக்கியருளுகின்றான்.

ஆலயத்தின் ஏவிளம்பி வருட மகோற்சவம் இன்றைய தினம் ஆரம்பமாவதுடன் எதிர்வரும் ஜீலை மாதம் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆடி அமாவாசைதினத் தீர்த்த உற்சவத்துடன் நிறைவடையவுள்ளன. விசேட உற்சவங்களாக ஜீலை மாதம் 19 ஆம் திகதி புதன்கிழமை திருக்கார்த்திகை உற்சவமும் ஜீலை மாதம் 22 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. ஆடி அமாவாசை தீர்த்த உற்சவத்தன்று அதிகாலை 3.30 மணிக்கு உசக்காலைப் பூசையும், அதிகாலை 4 மணிக்கு அபிசேகமும், அதிகாலை 4.30 மணிக்கு காலைச்சந்திப் பூசையும், அதிகாலை 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும், அதிகாலை 5.30 மணிக்கு சுவாமி தீர்த்தமாடப் புறப்பாடும் ஆயத்தங்களும், காலை 6.30 மணிக்கு கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய ‘கண்டகி’ தீர்த்தக் கேணி யில் மாவைக் கந்தனவன் தீர்த்தமாடுதல் நிகழ்வும் இடம்பெறவுள்ளன. மாலை 6 மணிக்கு கீரிமலைப் பதியிலிருந்து வீதி உலாவாக மாவைக் கந்தன் ஆல யம் நோக்கிப் புறப்படுவதுடன் மாவைக் கந்தப் பெருமான் ஆலயம் வந்தடைந்ததும் மாலை 8.30 மணிக்கு சாயரட்சைப் பூசை இடம்பெற்று திருவருட் பிரசாதம் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும்.

### நூல்கள்


மாவைக்கந்தன் பற்றியதாய் அதிக பக்தி நூல்கள் எழுந்துள்ளன. அவற்றுள் சுன்னாகம் முத்துக்குமார கவிராயரின் மாவைச் சுப்பிரமணியர் தோத்திரம், இருபாலை சேனாதிராச கவிராயரின் மாவைப் பதிகம், மாவை ஊஞ்சல், சுன்னாகம் அ. குமாரசாமிப் புலவரின் மாவைப் பதிகம், மாவை இரட்டை மணிமாலை, மாவைக் கலி வெண்பா, நல்லூர் சரவணமுத்துப் புலவரின், மாவை ஊஞ்சற் பாடல், சபாபதி நாவலரின் மாவை அந்தாதி, தெல்லிப்பழை பொன்னம்பலப்பிள்ளையின் மாவையமக அந்தாதி, மாவை திருவிரட்டை மணி மாலை, ஆறெழுத்துப் பத்து ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக் கவை.

ஆக, மகோற்சவ காலங்களில் ஆசார சீலர்களாய் பக்தி சிரத்தையோடு மாவைக் கந்தனை நாடுவோம். கலியுகக் கந்தனாக மாவையம்பதியில் வீற்றிருந்து அருள் பாலிக்கின்ற மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமையப் பெற்ற முருகப் பெருமானை அனைவரும் வழிபாடாற்றி இன்மை மறுமைப் பயன்களை பெற்று உய்வோமாக.

*கட்டுரையாளர்:
செயலாளர், அகில இலங்கை
சைவப்புலவர் சங்கம்.*







# துன்பங்கள் நீங்க எந்த ராசிக்காரர்கள் என்ன செய்யவேண்டும்?

ராசிகளைப் பொறுத்து துன்பத்தினை போக்குவதற்கு அனைவரும் பரிகாரங்களையும் பூசைகளையும் மேற் கொள்வர். பரிகாரத்தினைச் செய்வதன் மூலம் அனைத்து ராசிகாரர்களும் துன்பங்களைத்தவிர்க்கலாம் என்ற நம்பிக்கை எம்மவர்களிடையே உண்டு.

**மேடம்**
வெற்றிலையில் மாம்பழம் வைத்து செவ்வாய்கிழமை முருகனை வழிபட்ட பின்னர் சாப்பிட்டால் துன்பங்கள் அகலும்.

**இடபம்**
வெற்றிலையில் மிளகு வைத்து செவ்வாய்கிழமை ராகுவை வழிப்பட்ட பின்னர் சாப்பிட்டால் துன்பங்கள் விலகும்.

**மிதுனம்**
வெற்றிலையில் வாழைப்பழம் வைத்து புதன்கிழமை இஷ்டதெய்வத்தினை வணங்கி சாப்பிட்டால் துன்பம் தீரும்.

**கடகம்**
வெற்றிலையில் மாதுளம்பழம் வைத்து வெள்ளிகிழமை காளி தெய்வத்தை வணங்கி சாப்பிட்டால் துன்பம் விலகும்.

**சிம்மம்**
வியாழக்கிழமையன்று வெற்றிலையில் வாழைப்பழம் வைத்து இஷ்டதெய்வத்தினை வணங்கிய பின்னர் சாப்பிட்டால் கஷ்டம் விலகும்.

**கன்னி**
வெற்றிலையில் வியாழக்கிழமையன்று மிளகு வைத்து இஷ்டதெய்வத்தினை வணங்கிய பின்னர் சாப்பிட்டால் துன்பம் தீரும்.

**துலாம்**
வெற்றிலையில் கிராம்பு வைத்து வெள்ளிகிழமை இஷ்ட தெய்வத்தினை வழிபட்ட பின்னர் சாப்பிட்டால் துன்பம் தீரும்.

**விருச்சிகம்**
வெற்றிலையில் பேரிச்சம்பழம் வைத்து செவ்வாய்கிழமை இஷ்ட தெய்வத்தினை வழிபட்ட பின்னர் சாப்பிட்டால் துயரம் தீரும்.

**தனுசு**
வெற்றிலையில் கல்கண்டு வைத்து வியா ழக்கிழமை இஷ்ட தெய்வத்தினை வணங்கிய பின்னர் சாப்பிட்டால் கவலை தீரும்.

**மகரம்**
அச்சு வெல்லத்தினை சனிக்கிழமையன்று வெற்றிலையில் வைத்து காளி தெய்வத்தினை வணங்கிய பின் சாப்பிட்டால் துன்பம் விலகும்.

**கும்பம்**
வெற்றிலையில் நெய் வைத்து சனிக்கிழமை காளி தெய்வத்தினை வணங்கிய பின்னர் சாப்பிட்டால் கவலை தீரும்.

**மீனம்**
ஞாயிற்றுகிழமை இஷ்ட தெய்வத்தினை வழிபட்டு வெற்றிலையில் சர்க்கரையை வைத்துச் சாப்பிட்டால் நோய் தீரும்.

## வரலாற்றில் இன்றைய தினம்

512 - அயர்லாந்தில், காலப்பதிவுகளை மேற்கொள்வதை வழமையாகக் கொண்ட சந்நியாசிமடத்தில், சூரிய கிரகணம் ஒன்று பதிவாகியது.

1194 - நோர்வேயின் அரசராக ஸ்வலர் முடிசூடினார் .

1312 - உரோமப் பேரரசராக ஏழாம் ஹென்றி முடிசூடினார்.

1534 - கனடாவின் பிறின்ஸ் எட்வட் தீவுகள் ஜான் கார்டியர் எனும் பிரெஞ்ச் கடலோடியால் கண்டு பிடிக்கப்பட்டது.

1540 - முன்னாள் ஆங்கில சான்ஸ்லர் தோமஸ் குறொம் வெல் மாற்றுமதக் கருத்துடையவர் என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

1613 - சேக்ஸ்பியரின் குளோப் அரங்கு தீயில் எரிந்து அழிந்தது.

1659 - இளவரசர் ட்ரூபெஸ்கி தலைமையிலான ரஷ்யப்படைகள், இவான் வைஹொஸ்கியின் உக்ரைன் படைகளால் தோற்கடிக்கப்பட்டன.

1786 - அலெக்ஸாண்டர் மக்டொனெல் உள்ளிட்ட 500 றோமன் கத்தோலிக்க உயர் குடிப் பிறப்பினர் ஒன்ரோறியாவில் குடியேறுவதற்காக ஸ்கொட்லாந்திலிருந்து புறப்பட்டனர்.

1850 - பிரிட்டன் முன்னாள் தலைமை அமைச்சர் தனது குதிரையிலிருந்து வீழ்ந்த நிலையில் மூன்று நாள்களின் பின்னர் சாவடைந்தார்.

1854 - நெதர்லாந்து, உடலுக்கு வலியை ஏற்படுத்தும் கோர்ப்பரல் தண்டனைக்கு அனுமதி வழங்கியது.

1864 - கிரான்ட் ட்றங் ரயில் விபத்தில் 100 பேர் சாவடைந்தனர்.

1864 - நைகர் பேராயர் சாமுவல் கிரவுதர் இங்கிலாந்து திருச்சபையின் முதலாவது கறுப்பினப் பேராயர் ஆனார்.

1916 - போயிங் விமானத்தின் முதல் பறப்பு இடம் பெற்றது.

1943 - நியூகினியா, சலமாவூவுக்கு அண்மையாக, நாஸிக்குடாவில் அமெரிக்கப்படைகள் தரையிறங்கின

1949 - தென்னாபிரிக்கா இனப்பாகுபாட்டை நடைமுறைப்படுத்த தொடங்கியது. கலப்புத் திருமணத்துக்கும் தடை விதித்தது.

1954 - பௌதிகவியலாளரும் அணுகுண்டின் தந்தையெனப்படுபவருமான றொபேட் ஒபன்ஹெய்மரை மீள இணைத்துக் கொள்வதற்கு எதிராக அமெரிக்க அணு சக்தி ஆணைக்குழு வாக்கலித்தது.

**நாளை**

**ஆனி - 16**
வெள்ளிக்கிழமை -30.06.2017
திதி: ஸப்தமி மு.இ. 11.05 வரை
நட்சத்திரம்: உத்தரம் பி.இ. 01.18வரை
சுபநேரம்:05.56-07.26 வரை
ராகுகாலம்:10.26-11.56 வரை

# விலாங்கின் நிலையில் தலைமை அமைச்சர் மோடி

விலாங்குமீனின் உடலமைப்பு பாம்பு, மீன் இரண்டும் கலந்த கலவையாக இருக்கும். இதனால் அது பாம்பாகவும், மீனாகவும் நடித்து ஏமாற்றுவதில் கில்லாடி. கற்பாறைகள் அல்லது வேறு ஏதேனும் மறைவுகளில் ஒளிந்திருக்கும் விலாங்கு மீன், பாம்பு வந்தால் தனது தலையைக் காட்டும். பாம்பு தன் இனத்தைச் சேர்ந்த ஒன்றே இதில் உள்ளது என்று கருதிவிட்டுச் சென்றுவிடும். மீன்வந்தால் தலையை ஒளித்து வைத்துவிட்டு வாலைக்காட்டும். உடனே மீன் தனது இனத்தைச் சேர்ந்த ஒன்றுதான் இதில் உண்டு என்று கருதிவிட்டுச் சென்றுவிடும். இதே வேலையைத்தான் இந்தியத் தலைமை அமைச்சர் மோடியும் மேற்கொண்டு வருகிறார்.

இந்தியாவின் பொருளாதாரத்தை உயர்த்துவதில் அவரது திட்டங்களாக கறுப்பப் பண ஒழிப்பு, நோட்டு மாற்றம் என்பன பலராலும் பாராட்டப்பட்டது. ஆனால் அவரது அயல் நாட்டுக் கொள்கையானது புரிந்துகொள்ள முடியாத ஒன்றாகவே உள்ளது.

பிரான்சின் தலைநகர் பரிஸில் கடந்த 2015ஆம் ஆண்டு நடைபெற்ற உலக வெப்பமயமாதலுக்கு எதிரான மாநாட்டில் வழக்கம் போல அமெரிக்கா கடும் முனைப்புடன் செயற்பட்டது. ஆனால் ட்ரம்ப் அதிபரானதும் அதிலிருந்து பின்வாங்கிய அமெரிக்கா தற்போது அந்த ஒப்பந்தத்தில் இருந்து தூரமாகச்சென்றுவிட்டது. இதற்கு ட்ரம்ப் பல்வேறு காரணங்களைக் குறிப்பிட்டார். இந்தியாவையும் கடுமையாகச் சாடியிருந்தார். தாம் செலவழிக்கும் பில்லியன் கணக்கான டொலர்களுக்கு ஏற்ப ஏனைய நாடுகள் செலவு செய்வதில்லை. இந்தியா போன்ற நாடுகள் எமது பணத்தில் குளிர்காய்கின்றன என்று குறிப்பிட்டார். ட்ரம்ப் இந்தக் கருத்தை வெளிப்படுத்திய தருணத்தில் மோடி அமெரிக்காவின் பரம எதிரியான ரஷ்யாவுக்கு சுற்றுப் பயணம் செய்வது உறுதியாகியிருந்தது. இதனால் பரிஸ் ஒப்பந்தத்தில் இருந்து விலகியமைக்காக அமெரிக்காவுக்கு எதிராக விமர்சனங்களை முன்வைத்தார். அமெரிக்கா மீது அவர் வெளிப்படுத்திய விமர்சனங்கள் ரஷ்யாவுடனான உறவை மேலும் பலப்படுத்தியது. ரஷ்யாவுடன் ஏகப்பட்ட ஒப்பந்தங்களையும் இந்தியா செய்துகொண்டது.

பின்னர் கடந்த திங்கள் மற்றும், செவ்வாய்க்கிழமை என இரண்டு தினங்களில் மோடி அமெரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். அங்கு அவருக்கு மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது.

**பத்தி எழுத்து**

பின்னர் உரையாற்றிய ட்ரம்ப் உலகின் ஆகச் சிறந்த தலைமை அமைச்சர் மோடியே, மோடியின் பொருளாதாரத் திட்டங்கள் வியக்க வைக்கின்றன என்று தெரிவித்தார். பதிலுக்கு உரையாற்றிய மோடி “இந்தக் கௌரவம் எனக்கானது அல்ல. ஒட்டுமொத்த இந்தியர்களுக்குமானது” என்று குறிப் பிட்டார். மேலும் ஏராளமான திட்டங்கள் தொடர்பில் இரகசியமான பேச்சு நடைபெற்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. எனினும், பரிஸ் ஒப்பந்தம் தொடர்பில் மோடி வாய் திறந்தார் என்று அறியவரவில்லை.

ட்ரம்பின் முன்னரே அவரின் தவறுகளை எடுத்துரைத்து அமெரிக்காவை ஒப்பந்தத்தில் தக்கவைக்க மோடியால் இயலவில்லை. அமெரிக்கா மற்றும் அதன் போட்டியாளரான ரஷ்யா ஆகிய இரு நாடுகளுடனும் மோடி சிறந்த உறவைப் பேணுவது வரவேற்கத்தக்கது. ஆனால் அவ்வப்போது விலாங்கு மீனின் வேலையையும் காட்டி விட்டுப்போய் விடுகிறார் மோடி.

### சாம்பாரில் பல்லி செத்துக் கிடந்தா பாய்சன்



### அதுவே பிரியாணியில் கோழி செத்து கிடந்தா பங்க்சன்

### உங்க பையனுக்குத் தலை முழுவதும் காயமா இருக்கே ஏன்..?





### கத்தியைத் தீட்டாதே. புத்தியைத் தீட்டு எண்டு சொன்னேன். அதை அவன் தப்பாய் புரிஞ்சு கொண்டான்.

### கற்க கசடற கற்பவை கற்றபின்....



### வேலை இன்றி நிற்க.

## இந்திய சினிமா வரலாற்றில் ரூ.2,000 கோடியை வசூல் செய்து 'தங்கல்' சாதனை




அமீர் கான் நடிப்பில் கடந்த ஆண்டு வெளியான 'தங்கல்' திரைப்படம், உலக அளவில் 2 ஆயிரம் கோடி ரூபா வசூல் செய்து சாதனை படைத்துள்ளது. மல்யுத்தப் போட்டிகளை மையமாக வைத்து உருவான 'தங்கல்' திரைப்படம், இந்திய அளவில் பெரும் வெற்றியடைந்தது. இந்த வெற்றியைத் தொடர்ந்து 'தங்கல்' திரைப்படத்தை சீனாவில் வெளியிட்டிருக்கின்றனர். எவரும் எதிர்பார்க்காத வகையில், சீனாவிலும் 'தங்கல்' பல கோடி ரூபா வசூலை வாரிக் குவித்தது. இதனால், அந்தப் படத்தின் மொத்த வசூல் தற்போது 2 ஆயிரம் கோடி ரூபாவைத் தாண்டியுள்ளது என போர்ப்ஸ் இதழ் செய்தி வெளியிட்டுள்ளது. சீனாவில் தங்கல் வெளியாகி 53ஆவது நாளில் 2.5 கோடி ரூபா வசூலித்ததை அடுத்து இந்தச் செய்தி தெரிவிக்கப்படுகிறது.



கடவுள் ஒருநாள் ஒரு மனிதனின் Memory அனைத்தையும் Delete செய்துவிட்டு ஒரு கேள்வி கேட்டார்.

"இப்ப உனக்கு ஏதாவது ஞாபகத்தில் இருக்கிறதா?"

அவன் உடனடியாகத் தன் மனைவி பெயரைச் சொன்னான்.

Complete format செய்த பிறகும் வைரஸ் போக மாட்டேங்குதே...

WhatsApp



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** மனதில் குழப்பம் உருவாகி மறையும். தொழில் வியாபார நடைமுறை சீராக விடாமுயற்சி தேவை. பெண்கள் சிக்கனமாக இருப்பது நல்லது. உணவு விஷயத்தில் விழிப்புடன் இருக்கவும்.

**இடபம்:** கூடுதல் வேலைப்பளு ஏற்படலாம். சூழ்நிலையின் முக்கியத்துவம் உணர்ந்து செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். திடீர் வெளியூர் பயணம் செல்ல நேரிடலாம்.

**மிதுனம்:** அனைவரிடமும் பாசத்துடன் நடந்து கொள்வீர்கள். தொழில் வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். பெண்கள் கலையம்சம் நிறைந்த பொருள் வாங்குவர். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**கடகம்:** எதிலும் அதிக முயற்சி தேவைப்படலாம். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட வருமானம் குறையும். பெண்கள் வீட்டுச் செலவுக்கு பணம் இன்றி திண்டாடலாம். வாகன பயணத்தில் மிதவேகம் நல்லது.

**சிங்கம்:** முயற்சிக்குரிய பலன் முழுமையாக வந்து சேரும். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**கன்னி:** சிலர் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற தாமதம் செய்வர். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாரான அளவில் இருக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும்.

**துலாம்:** நண்பரின் உதவியால் முக்கிய செயல் நிறைவேறும். சமூகத்தில் நற்பெயர் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி மறையும். வருமானம் அதிகரிக்கும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**விருச்சிகம்:** மதிநுட்பத்துடன் நடந்து கொள்வீர்கள். முயற்சிக்கான நன்மை முழு அளவில் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பெண்கள் தாய் வீட்டாரின் அன்பை பெறுவர்.

**தனுசு:** உறவினரின் பாசம் கண்டு வியப்பீர்கள். தொழில், வியாபாரம் சார்ந்த சிரமங்களை கவனமுடன் சரிசெய்வது நல்லது. புதிய முயற்சி வெற்றி பெறும். அரசு வகையில் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**மகரம்:** பேச்சில் நிதானம் தேவை. போட்டி பந்தயத்தில் ஈடுபட வேண்டாம். தொழில் வியாபாரத்தில் குளறுபடியை தாமதமின்றி சரி செய்யவும். இலாபம் சுமார். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளவும்.

**கும்பம்:** முன்யோசனையுடன் செயல்பட்டு பிரச்னையை தவிர்ப்பீர்கள். நண்பர்களால் உதவி கிடைக்கும். தொழில், வியாபார வருமானம் சீராக இருக்கும். பிள்ளைகளின் வளர்ச்சிக்காகப் பாடுபடுவீர்கள்.

**மீனம்:** மனதில் புத்துணர்ச்சி மேலோங்கும். கடந்த கால உழைப்பின் பயனை பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வியத்தகு அளவில் முன்னேற்றம் உருவாகும். காணாமல் தேடிய பொருள் கைக்கு வந்து சேரும்.

## twitter

"இனி பொறுப்பதற்கில்லை" என்று சொல்லிக்கொண்டே மேலும் மேலும் பொறுத்துக் கொள்கிறோம், ஒவ்வொன்றையும்.

மன அமைதியைத் தின்று, நல்ல நண்பர்களைத் தின்று, நிம்மதியைத் தின்று, கடைசியில் மனிதனையும் தின்றுவிடுகிறது... பணம்.

எழுதப் பழகும் குழந்தைக்கு நேர்க்கோடும் சாதனைதான். அலட்சியப்படுத்தாமல் தட்டிக் கொடுத்து ஊக்குவித்தால், நாளை கோடுகள் ஓவியமாகலாம்.

எல்லாம் நம்மிலிருந்தே வெளிப்பட வேண்டுமென நினைக்கிறோம்... எல்லாமும் நாமே என்பதையறியாமல்.

மனதில் பாரமும் குறையும் உள்ளவர்களிடம் இருக்கும் பதவியும் செல்வாக்கும், பட்டினி கிடப்பவன் கையில் இருக்கும் தங்கத் திருவோட்டிற்குச் சமம்.

தனிமை விரும்பிகளின் உலகம் கற்பனையின் கதவுகளில் தான் திறக்கிறது.

தற்கொலை செய்து கொள்வதில் எந்தத் தயக்கமும் இல்லை. தப்பித் தவறி பிழைத்துக் கொண்டால் அதன் பிறகான வாழ்க்கைதான் பயமுறுத்துகிறது.

1 1 21

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | 5 | | 4 | | | 3 | |
| | | | | | 2 | 5 | 1 | 4 |
| | | 3 | 5 | | | | 8 | |
| | | | | | 5 | 8 | | 9 |
| | 5 | | | | | | 4 | |
| 9 | | 8 | 1 | | | | | |
| | | | | | 7 | 6 | | |
| 1 | 3 | 2 | 8 | | | | | |
| | 6 | | | 2 | | | | 8 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 4 | 1 | 3 | 9 | 8 | 5 | 2 |
| 5 | 9 | 8 | 7 | 6 | 2 | 3 | 1 | 4 |
| 1 | 3 | 2 | 8 | 5 | 4 | 9 | 6 | 7 |
| 3 | 2 | 5 | 6 | 4 | 8 | 1 | 7 | 9 |
| 8 | 6 | 1 | 2 | 9 | 7 | 5 | 4 | 3 |
| 7 | 4 | 9 | 5 | 1 | 3 | 6 | 2 | 8 |
| 9 | 5 | 3 | 4 | 7 | 6 | 2 | 8 | 1 |
| 4 | 8 | 6 | 3 | 2 | 1 | 7 | 9 | 5 |
| 2 | 1 | 7 | 9 | 8 | 5 | 4 | 3 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. [உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்]. இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் [மீண்டும் மீண்டும்] வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# உலக தினங்கள்

| | | |
|---|---|---|
| ஜனவரி 1 | - | உலக பூகோள குடும்ப தினம் |
| | | உலக சமாதான தினம் |
| ஜனவரி 4 | - | உலக பிறெய்லி தினம் |
| ஜனவரி 26 | - | உலக சுங்கத்துறை தினம். |
| பெப்ரவரி 4 | - | உலக புற்று நோய் தினம். |
| பெப்ரவரி 14 | - | உலக காதலர் தினம் |
| பெப்ரவரி 20 | - | உலக சமூக நீதி தினம் |
| பெப்ரவரி 21 | - | உலக தாய் மொழித் தினம் |
| பெப்ரவரி 22 | - | உலக சாரணியர் தினம் |
| மார்ச் 8 | - | உலக மகளிர் தினம் |
| மார்ச் 11 | - | உலக முஸ்லிம் கலாசார சமாதான கலந்துரையாடல் திரைப்பட தினம் |
| மார்ச் 15 | - | உலக நுகர்வோர் உரிமைகள் தினம். |
| மார்ச் 21 | - | உலக வன தினம் |
| | | உலக இன பேத ஒழிப்பு தினம் |
| மார்ச் 22 | - | உலக குடிநீர் தினம் |
| மார்ச் 23 | - | உலக வளிமண்டல தினம் |
| மார்ச் 24 | - | உலக காச நோய் தினம் |
| மார்ச் 27 | - | உலக திரைப்பட தினம் |
| ஏப்ரல் 1 | - | உலக முட்டாள் தினம் |
| ஏப்ரல் 7 | - | உலகசுகாதார தினம் |
| | | உலக நல தினம் |
| ஏப்ரல் 12 | - | உலக மனித விண் வெளி தினம் |
| ஏப்ரல் 16 | - | உலக முயற்சியாண்மை தினம் |
| ஏப்ரல் 22 | - | உலக நீர் தினம் |
| | | உலகவீதியோரச் சிறுவர்கள் தினம் |
| ஏப்ரல் 23 | - | உலக புத்தக தினம் |
| ஏப்ரல் 24 | - | உலக ஆய்வு கூட விலங்குகள் தினம் |
| ஏப்ரல் 25 | - | உலக மலேரியா தினம் |

(தொடரும்)

# புத்திசாதுரியம்

ஓர் ஊரில் ஓர் அரசன் ஆட்சி செய்து வந்தான். அவனுக்கு கல்வி அறிவு மிகவும் குறைவு. தானும் அரசவைப் புலவர்களைப் போல நன்கு புலமை பெற வேண்டும் என எண்ணினான். ஒரு பண்டிதரிடம் இரண்டு வருடங்கள் கல்வி பயின்றான். ஆனாலும் அரசனுக்கு கல்வி அறிவு வரவேயில்லை. தன் அரசவைப் புலவரை அழைத்து வரச் சொன்னான். அந்தப் புலவரோ கல்வி கேள்விகளில் நன்கு தேர்ச்சி பெற்றவர். எந்த ஒரு விடயத்தைச் சொன்னாலும் உடனே அது பற்றி கவிதை பாடும் திறமை உடையவர். அரசன் அந்தப் புலவரிடம் "நான் ஏன் கல்வியில் தங்களைப் போல புலமை பெற முடியாதுள்ளது? அதற்கான காரணத்தை எனக்கு நாளை அரசவையில் தெளிவு படுத்த வேண்டும்" என்றான்.



புலவருக்கோ அரசனின் கேள்விக்கு மறுநாள் என்ன பதில் கூறுவதென்றே தெரியவில்லை. பண்டிதர் ஒருவரிடம் இரண்டுவருடங்கள் சென்று பிரத்தியேகமாகப் படித்தும் கல்வி வரவில்லை என்றால், தான் என்ன பதிலைக் கூறுவது என இரவு முழுவதும் சிந்தித்தார் புலவரின் மகன் புலவரின் யோசனைக்கான காரணத்தைக் கேட்டான். புலவரும் கூறினார். தந்தை யைக் கவலைப்பட வேண்டாமென்றும் மறு நாள் தான் அவருடன் அரச சபைக்குச் சென்று அரசனின் கேள்விக்கு விடையளிப்பதாகவும் கூறினான்.

மறுநாள் தந்தையுடன் அரசவைக்குச் சென்ற மகன், அரசனுக்கு விடயத்தைக் கூறி ஆற்றங்கரை ஒன்றுக்கு அவரை அழைத்துச் சென்றான்.

அங்கே அவன் அரசனை நிற்கச் சொல்லி விட்டு கரையில் இருந்த மணலை அள்ளி அள்ளி ஆற்றில் போடத் தொடங்கினான். அரசனுக்கோ அவன் செயல் வேடிக்கையாக இருந்தது. " தம்பி நீ எதற்காக மணலை அள்ளி ஆற்றுக்குள் வீசிக் கொண்டிருக்கிறாய்?" எனக் கேட்டான். அதற்கு புலவரின் மகனோ "அரசே! நான் அக்கரைக்குச் செல்ல பாலம் அமைத்துக் கொண்டிருக்கிறேன்" என்று கூறினான். அரசனோ தனக்கு வந்த கோபத்தை அடக்கிக் கொண்டு "தூண்கள் இல்லாமல் வெறும் மணலைக் கொட்டி எப்படிப் பாலம் அமைக்க முடியும்" என்று கேட்டான்.

அதற்குச் சிறுவன் " தாங்கள் ஆரம்பக் கல்வி என்னும் அடிப்படைக் கல்வியை சிறு வயது முதல் பயிலாமல் புலமை பெற எண்ணும் போது, நான் ஏன் தூண் இல்லாமல் பாலம் அமைக்க முடியாது" என்று கேட்டான். அதனைக் கேட்ட அரசனுக்கு தன் தவறு புரிந்தது. புலவரும் சிறுவனாக இருந்தும் தன் மகனது புத்தி சாதுரியத்தைக் கண்டு மனம் மகிழ்ந்தார்.

**இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.**

# தன்னம்பிக்கையின் மறு உருவம் ஹெலன் கெல்லர்



1880ஆம் ஆண்டு ஜூன் 27ஆம் திகதி அமெரிக்காவின் அலாமா மாகாணத்தின் தஸ்கம்பியா சிற்றூரில் ஹெலன் கெல்லர் பிறந்தார். இவர் தனது இரண்டு வயதில் ஏற்பட்ட காய்ச்சலால் தாக்கப்பட்டு தன் சின்னஞ்சிறிய விழிகளில் பார்வையையும், காதுகளில் கேட்டல் சக்தியையும் இழந்தார். இவரது பெற்றோர் தொலைபேசியைக் கண்டு பிடித்த கிரகப் பெல்லின் உதவியை நாடினர். கிரகம்பெல் காது கேளாதவர்களின் நலனில் அக்கறையுடையவரானதால் கெலன் கல்வி பயில்வதற்கு ஆன் சல்லிவன் என்ற ஒரு நல்லாசிரியை அறிமுகம் செய்தார். இவரே கும்மிருட்டாக இருந்த கெலனின் உலகுக்கு ஒளியையும் ஒலியையும் கொண்டு சேர்த்தவர்.

இந்த ஆசிரியை கெலனின் உள்ளங்கையில் எழுதுவதன் மூலம் எழுத்துக்களையும், அவ் எழுத்து சொற்களுக்குரிய பொருள்களைத் தொடுகையின் மூலமும் கற்பித்ததோடு, பேசவும் கற்பித்தார். காலப் போக்கில் கெலன் பார்வையற்றோருக்கான பிரெயில் எழுத்து முறையையும் பிரெயில் தட்டச்சு இயந்திரத்தோடு, சாதாரண தட்டச்சு இயந்திரத்தையும் பயன்படுத்தக் கற்றுக் கொண்டார். 1904 இல் தனது ஆசிரியையுடன் பிரத்தியேகமாக கல்லூரிப் பாடங்களைக் கற்றுக் கொண்டு ராட்கிளிஃப் பல்கலைக் கழகத்தில் பயின்று இளம் கலைஞர் பட்டம் பெற்றார். பின்னர் தனது வாழ்க்கையைச் சுயசரிதையாக எழுதியதோடு 12 நூல்களையும் எழுதினார். 1919 இல் இவர் வாழ்க்கை ஹொலிவுட்டில் படமான போது அதில் தானே ஹெலனாக நடித்தார். குதிரைச் சவாரி, சைக்கிள் சவாரி செய்வார். 1930ஆம் ஆண்டு முதல் 39 உலக நாடுகளுக்கு சென்று கண் பார்வையற்றோருக்கு நிதி சேகரித்தார். இவர் சிறந்த பேச்சாளர். 1932ஆம் ஆண்டு கெல்லருக்கு ஸ்கொட்லாந்தின் லாஸ்கோ பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்தது. தன் வாழ் நாளில் 12 அரச தலைவர்களைச் சந்தித்து உரையாடியுள்ளார். 1964இல் தனி மனிதருக்கான அமெரிக்காவின் அதி உயரிய விருதான சுதந்திரப் பதக்கம் இவருக்கு வழங்கப்பட்டது. தன் நம்பிக்கையின் மறு உருவாக விளங்கிய ஹெலன் கெல்லர் 1968ஆம் ஆண்டு ஜூன் முதல் திகதி தனது 87 வயதில் காலமானார்.

**கெலன் கெல்லரின் சில பொன்மொழிகள்: ‘‘மகிழ்ச்சியான வாழ்கை என்பது தடைகளற்ற வாழ்க்கை அல்ல. தடைகளை வெற்றி கொண்டு வாழும் வாழ்க்கை.’’ ‘‘ஒரு கதவு மூடப்படும் போது மற்றொரு கதவு திறக்கிறது. ஆனால் நாம் மூடப்படும் கதவையே பார்த்துக் கொண்டு திறக்கப்படும் கதவின் பாதையைத் தவறவிடுகிறோம்.’’**

# எந்த யானை எந்தப் பழத்தை வைத்திருக்கிறது?




## அடைப்புக்குறிக்குள் உள்ள பொருத்தமான சொல்லின் கீழ் கோடிடுவோம்

1. நாங்கள் (பேரூந்து, பேருந்து) வண்டியில் சென்றோம்.
2. மத்திய (மலை, மழை) நாட்டில் தேயிலை நன்கு வளரும்.
3. நாங்கள் அந்தப் (பாலத்தை, பாளத்தை) கடந்து சென்றோம்.
4. நாங்கள் (கன்டி, கண்டி) நகருக்குச் சென்றோம்
5. நாங்கள் யானைகள் (சரனாலயம், சரணாலயம்) சென்றோம்.

## பின்வரும் சொற்களை ஒழுங்கு படுத்தி வாக்கியங்கள் ஆக்குவோம்

1. இரண்டு / பேரனும் / தாத்தாவும் / கழுதைகளை / வந்தனர் / வளர்த்து

---------------------------------------------------

2. கழுதை / சவாரி / அமர்ந்தவாறே / மீது / சென்றனர் / அவர்கள்

---------------------------------------------------

3. தாத்தா / அமர்ந்திருந்த / கீழே / மீது / கழுதை / இறங்கினார்

---------------------------------------------------

4. திகைத்துப் / அசையாமல் / போய் / பேரனும் / சிறிது / தாத்தாவும் / நின்றனர் / நேரம்

---------------------------------------------------

5. நாம் / வேண்டும் / செயற்பட / சிந்தித்துச்

---------------------------------------------------

# வாழ்க்கையின் வெற்றிக்கு

- அர்த்தமில்லாமலும் தேவையில்லாமலும் பின் விளைவுகளை அறியாமலும் பேசிக் கொண்டிருப்பதை விடுங்கள்.
- நானே பெரியவன். நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள்.
- சில நேரங்களில் சில சங்கடங்களை சகித்துத் தான் ஆக வேண்டும் என்பதை உணருங்கள்.
- நீங்கள் சொல்வதே சரி, செய்வதே சரி என்று கடைசி வரை வாதாடாதீர்கள்.
- குறுகிய மனப் பான்மையை விட்டொழியுங்கள்.
- உண்மை எது? பொய் எது? என்று சரியாக விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கும், அங்கே கேட்டதை இங்கும் சொல்வதை விடுங்கள்.
- அளவுக்கதிகமாய், தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள்.
- எல்லோரிடத்திலும் எல்லா விடயங்களையும் அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
- கேள்விப்படும் எல்லா விடயங்களையும் அப்படியே நம்பி விடாதீர்கள்.
- உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள்.
- மற்றவர்களுக்கு உரிய மரியாதையைக் காட்டவும் இனிய இதமான சொற்களைப் பயன்படுத்தவும் மறக்காதீர்கள்.
- புன்முறுவல் காட்டவும். சிற்சில அன்பான சொற்களைச் சொல்லவும் கூட நேரமில்லாமல் நடந்து கொள்ளாதீர்கள்.
- பேச்சிலும் நடத்தையிலும் திமிர்த்தனத்தைக் காட்டாமல் பண்பையும் பணிவையும் காட்டுங்கள்.
- அவ்வப்போது நண்பர்கள் உறவினர்களைச் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்.
- பிணக்கு ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கி வரவேண்டும் என்று காத்திராமல் நீங்களே பேச்சைத் தொடக்க முன் வாருங்கள்.
- தேவையான இடங்களில் நன்றியையும் பாராட்டையும் சொல்ல மறவாதீர்கள்.

## விக்கி...

பினர் சரத் வீரசேகர.

முதலமைச்சர் விக்னேஸ்வரனின் ஆட்டத்தை வடமாகாண ஆளுநரைக் கொண்டு அரச தலைவர் நிறுத்தவேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

இத்தாலியில் நாபோலி நகரில் சிறப்புச் செயலமர்வு நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றினார். அவர் அங்கு தெரிவித்ததாவது:

வடக்கில் முதலமைச்சர் ஒருவர் இருக்கின்றார். அவர் தான் விக்னேஸ்வரன். இனவாதி எனக் கூறுவது அவரைப் போன்றவர்கள் தான். மாறாக எங்களுக்கு அல்ல. தமிழ் மக்களையும், முஸ்லிம் மக்களையும் கொல்லும்படி நாங்கள் எப்போதும் கூறியதில்லை. ஆனால் சிங்கள இனத்தவர்களுக்கு ஏதாவது முறைகேடு இடம்பெற்றால் அதற்கெதிராகக் குரல் கொடுப்போம். அது இனவாதமல்ல. இனவாதம், இனவுணர்வு என இரண்டு உள்ளது. தமது இனம் உன்னதமானது என்றும் மற்றைய இனத்தவர்களைக் காலில் மிதிப்பதானது இனவாதமாகும்.

விக்னேஸ்வரன் வடக்கிற்குச் சென்று வடக்கில் சிங்களவர்கள் வாழ உரிமையில்லை எனக் கூறுகின்றார். விக்னேஸ்வரன் என்பவர் யார்? கொழும்பில் பிறந்து றோயல் கல்லூரி, சட்டக் கல்லூரி, நீதிமன்றம் என 65 வருடங்கள் சிங்கள மக்களுடன் வாழ்ந்துவிட்டு இன்று வடக்குக்குச் சென்று சிங்களவர்களுக்கு வடக்கில் இடமில்லை எனக் கூறுகிறார். தமிழ் இளைஞர்கள், சிங்கள இளைஞர்களைத் திருமணம் செய்ய வேண்டாமென பிரசித்தமாக அவர் தெரிவிக்கிறார். ஆனால் அவருடைய இரு புதல்வர்களும் சிங்கள இனப் பெண்களைத்தான் திருமணம் செய்துள்ளனர்-என்றார். (த)

## தீர்க்கமாக...

இரணைதீவை விடுவிக்கக் கோரி மக்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இன்றுடன் அவர்களது போராட்டம் 60ஆவது நாளை எட்டுகின்றது. இரணைமாதா நகரில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன நேற்று நேரில் வந்து சந்தித்தார்.

மக்கள் தமது நிலத்தை விடுவிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

"இந்தியாவிலிருந்து பெருமளவு போதைப் பொருள்கள் நாட்டுக்குள் கடத்தப்படுகின்றன. அவற்றை அவதானிப்பதற்கு இரணைதீவில் ரேடர் பொருத்தப்பட்டுள்ளது. அந்தப் பகுதியை விடுவிக்க முடியாது." என்று ருவான் விஜயவர்த்தன பதிலளித்தார்.

மக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இந்தப் பிராந்தியத்தில் போதைப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டது என்று பொலிஸில் ஒரு வழக்குக் கூட இல்லை என்று வாதிட்டனர். தமது நிலங்களை ஆக்கிரமித்து வைத்திருப்பதற்கே இவ்வாறான புனைவு கதைகள் உருவாக்கப்படுகின்றது என்றும் அவர்கள் கூறினர்.

இரணைமாதா நகரில் உள்ள தேவாலயத்தில் சமூகத் தலைவர்களை, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சந்தித்தார். "நேரடியாக வந்து நிலமையைப் பார்வையிட்டுள்ளேன். பல விடயங்களை அறியக் கூடியதாக இருந்தது. இரு வாரங்களினுள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் பேசி முடிவு அறிவிக்கின்றேன்." என்று அவர் கூறியுள்ளார்.

நேற்றைய இந்தச் சந்திப்புகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, சாள்ஸ்நிர்மலநாதன், சி.சிறீதரன் மற்றும் அரச தரப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான இ.அங்கஜன், இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-5-35)

Galaxy Star
வெற்றி வாரம் 172 திகதி 2017.06.28
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
07 15 23 39 60
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2, 617, 140/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>GS என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919
2017.07.02 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மஞ்சள் நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றிபெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

DLB
CAR PLUS

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 12
சீட்டிழுப்பு திகதி 2017.06.28
வெற்றி இலக்கங்கள் 09 43 51
ஆங்கில எழுத்து L
அதிஷ்ட நாள் வெள்ளி
இவ்வார வெற்றியாளர்கள் பத்து இலட்சம் 01 ஒரு இலட்சம் 16
வழங்கப்பட்ட மொத்த பரிசு 4,806,560/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>DLஎன டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு 1919
அடுத்த சீட்டிழுப்பு 2017.07.05 ஆம் திகதி புதன்கிழமை
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2896 திகதி 28.06.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து 18 31 32 43 A
போனஸ் இல. 55
சனிக் கிழமை ஜக்பொட் 68, 819,107/-
பச்சை நிற டிக்கட்டுக்கள்
01.07.2017 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே : 011 4824824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk

## மரண அறிவித்தல்

### திருமதி அற்புதம் நடராசா



தாவடி கிழக்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி அற்புதம் நடராசா நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையாம்பி செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பாப்பிள்ளை மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் சிவலிங்கம், தவமணி, சிவமணி, சிவராசா ஆகியோரின் சகோதரியும் நடராசாவின் அன்பு மனைவியும் கலாசோதி,நந்தினி (இந்தியா) காலஞ்சென்ற பகீரதன் (இனியவன்), லோகதயாளன் (ஊடகவியலாளர்), பிரணவநாதன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற அமிர்தலிங்கம், கண்ணன், வளர்மதி, சேயாள் (ஆசிரியர்), அரவிந்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆதவன், நரேஜிகா, ஆர்த்திகா, மிதுலா, டிலக்சன், கோபிலக்சன், டுலக்சினி, கோமகள், மோதெழில், சிவயாணு, நித்திலா, பேரறிவன், தேனுசன், சர்மி, சோமிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நந்தாவில் ஒழுங்கையில் உள்ள இல்லத்தில் இன்று பி.ப ஒரு மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த இறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 839 5021**

## மரண அறிவித்தல்

### தம்பிப்பிள்ளை துரைவீரசிங்கம்



யாழ். கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை துரைவீரசிங்கம் கடந்த (27.06.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முத்தையா நல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் நீலாவதியின் அன்புக் கணவரும் சுபாசினி (டென்மார்க்), மதிவதனி(கனடா), மகமலர் (கனடா), கஸ்தூரன் (கனடா), நிலக்ஸ்சன்(யாழ்.இந்துக்கல்லூரி A\L2015) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான அன்னலிங்கம், பாலசிங்கம், சுந்தரலிங்கம், சரஸ்வதி,நல்லம்மா மற்றும் கணகபூசணியம்மா, தங்கரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுரேந்திரன் (டென்மார்க்),கதீஸ்வரன் (கனடா), ரமேஷ் (கனடா), சிந்து (கனடா) ஆகியோரின் மாமனாரும் நவீன், லக்ஷா, சாருஷன், பானுஜன், ஜானுஜன், சிவானுஜா, ஆகாஷ், அபிநயா, கபிசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**இராமகிருஷ்ண வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**021 222 5199**

**சாரதிகள் தேவை**

நடமாடும் பேக்கரி வான் ஓடுவதற்கு நன்கு அனுபவமுள்ள சாரதிகள் தேவை.

புதிய துர்க்கா வெதுப்பகம்
கலைவாணிவீதி, கொக்குவில்கிழக்கு
யாழ்ப்பாணம்

**வீடு காணி விற்பனைக்கு**

கிளிநொச்சி, வட்டக்கச்சி ஆறுமுகம் வீதியில் புதிய வீட்டுடன் கூடிய 2 ஏக்கர் மேட்டுக்காணியும் 3 ஏக்கர் வயல் காணியும் விற்பனைக்குண்டு

**076 660 4584**

**குழந்தையின்மை, ஆண்மைக்குறைவிற்கு நிரந்தர தீர்வு**



உயிரணுக்கள் உற்பத்தியில் சாதனை

எங்களது மருந்தை ஒரு சில நாட்கள் மட்டும் தொடர்ந்து சாப்பிடுவதன் மூலம் செயற்கையாக இல்லாமல் இயற்கையாகவே குழந்தை பாக்கியம் பெறலாம். திருமணத்திற்கு தயாராகும் வாலிபர்கள் மற்றும் முதியவர்கள் எங்களது சிகிச்சையின் பலனை முதல் மாதத்திலேயே முழுமையாகப் பெற்று இல்லறவாழ்வை இனிமையாக ஆரம்பிக்கலாம்

பாரம்பரிய சித்த மருத்துவர் Dr.G.ஜெகதீஸ்குமார் அவர்கள்

செல்: 0091 9842457673, 0091 9600336009
இலங்கை செல்: 075 4154364

வைத்திய கட்டணத்தை வங்கியில் வைப்புச் செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஸ்ரீ தேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை
இராமாபுரம், சென்னை-89, இந்தியா.
Email: sridevisiddha@gmail.com Skype: sridevisiddha

## மரண அறிவித்தல்

### திருமதி உமாதேவி(வசந்தா) அட்சயபாதம்



பிறப்பு .25.01.1951
இறப்பு .27.06.2017

குப்பிளான்தெற்கு, வீரமனையைப் பிறபிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி உமாதேவி (வசந்தா) அட்சயபாதம் கடந்த (27.06.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் இரத்தினம் தம்பதியரின் நான்காவது மகளும் காலஞ்சென்ற அட்சயபாதத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற துரைசிங்கம் மற்றும்மீனாம்பிகை, நகுலாம்பிகை (ஹொலன்ட்), பஞ்சலிங்கம், அன்னலிங்கம் (டென்மார்க்) காலஞ்சென்ற இராசமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயக்குமார், ரவிக்குமார்(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகேஸ்வரி, யசிந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும் வினுஜன், யாழினி, பிரித்திகா, பிரஜன், பிஜனன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.06.2017) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் காடா கடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வீரமனை
குப்பிளான் தெற்கு**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 917 3918**

## மரண அறிவித்தல்

### திருமதி லீலாவதி இராசரத்தினம்



பிறப்பு .14.09.1938
இறப்பு .27.06.2017

டச்சுறோட் மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கற்கேணியடி நவாலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லீலாவதி இராசரத்தினம் கடந்த (27.06.2017) செவ்வாய்க்கிழைமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான முருகேசு சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராசரத்தினம் (வானவெடி உற்பத்தியாளரும் விநியோகஸ்தரும்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம், இலட்சுமி, தங்கம்மா, செல்லம்மா, மயில்வாகனம், நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் வன்னியசேகரம், ஜெயவதனி, சந்திர வதனி(இத்தாலி), புஸ்பவதனி(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கலாவாணி, பாஸ்கரன் காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் விஜயசிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்ற சதுஜன் மற்றும் அனுஷன், அபர்ணன், ஜீவகன் (ஜேர்மனி), சுஜீபா, திலக்ஷி, மதனா (லண்டன்), மயூரா(இத்தாலி), விதுர்சியா(சுவிஸ்), புவிசியா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.06.2017) வெள்ளிக்கிழமை மு.ப10.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆரியம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு
இ.வன்னியசேகரம்
077 912 2740**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## முல்லைத்தீவுக்கு...

கே.சிவாஜிலிங்கம் மற்றும் க.சிவநேசன் ஆகியோர் சுட்டிக்காட்டினர்.

வடக்கு மாகாண முதலமைச்சருக்கு ஆதரவு வழங்கிய மாகாண சபை உறுப்பினர்கள் மாத்திரம், வடக்கு மாகாண முதலமைச்சரால் நேற்று அழைக்கப்பட்டனர். முதலமைச்சரின் இல்லத்தில் நேற்று மாலை 6.30 மணிக்கு கலந்துரையாடல் ஆரம்பமாகி இரவு 8 மணி வரையில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பின் போதே, மேற்படி விடயம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த எம்.கே.சிவாஜிலிங்கம், "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஏனைய பங்காளிக் கட்சித் தலைவர்களுடன் பேசி அமைச்சர்கள் நியமனத்தை மேற்கொள்ளுங்கள். மாவட்டங்களையும் இதன்போது கருத்தில் கொள்ள வேண்டும். முல்லைத்தீவு மாவட்டத்துக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படாவிட்டால், விமர்சனங்கள் வரக்கூடும்.

என்னை நீங்கள் அமைச்சுப் பதவி ஏற்குமாறு கோரினீர்கள். நான் அதை மறுத்துவிட்டேன். உங்களுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கத் தயார். மக்கள் இந்தப் பிரச்சினைகளை சுமுகமாக தீரவேண்டும்என்றுதான்விரும்புகின்றார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன், "கடந்த 14ஆம் திகதி அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கை தொடர்பில் மாகாண சபையில் உரையாற்றியபோது, முல்லைத்தீவு மாவட்டத்துக்கு அமைச்சு பதவி வழங்கப்பட வேண்டும் என்பது தொடர்பாக கருத்துத் தெரிவித்திருந்தீர்கள். இப்போது வழங்கப்படாவிட்டால் அது விமர்சனத்தை உருவாகக் கூடும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இதற்குப் பதிலளித்த முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், "தற்காலிகமாகத்தான் இந்த அமைச்சுப் பதவிகள் வழங்கப்படுகின்றன. மூன்று மாதங்களின் பின்னர், கட்சித் தலைவர்களுடன் பேசி அமைச்சுக்களை நியமிக் கும்போது பரிசீலிக்கலாம்" என்று கூறியுள்ளார். (வ-5)

## சந்தேகநபர்...

களால் அவர் தாக்கப்பட்ட விடயம் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அந்தக் கைதி நடக்க முடியாத நிலையில் ஊன்றுகோலுடன் நீதிமன்றுக்கு வந்திருந்தார். அவரது தாயார் நீதிமன்றில் அழுதபோது அந்தக் கைதியும் நீதிவான் முன்னிலையில் கண்ணீர் விட்டழுதார்.

கைதிகளை அநுராதபுரம் சிறைச்சாலை யில் வைத்திருக்காது யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குமாற்றுமாற்ற வேண்டும் என்று சட்டத்தரணிகள் கோரினர். அதனைப் பரிசீலித்த நீதிமன்று 5 சந்தேகநபர்களையும் யாழ்ப்பாணச் சிறைச்சாலைக்கு மாற்றுமாறு உத்தரவிட்டது. தன்னை தாக்கியவர்களைத் தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்று அந்தக் கைதி மன்றில் தெரிவித்திருந்தார்.

அது பற்றி ஆராய்ந்த நீதிமன்று, தாக்குதலுக்குக் காரணமாகக் கூறப்படும் சிறைச்சாலை அதிகாரிகள் தொடர்பிலான அறிக்கையை அடுத்த தவணையில் மன்றில் சமர்ப்பிக்கும்படியும், தாக்குதலுக்குள்ளான சந்தேக நபர்களைச் சட்ட மருத்துவ அதிகாரியிடம் காண்பித்து மருத்துவ அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டது.

"அண்மையநாள்களாகச் சிறைச்சாலைகளில் இவ்வாறான சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்னரும் தர்மபுரத்தைச் சேர்ந்த ஒருவர் மறியல் கைதியாக வவுனியா சிறைச்சாலையில் இருந்தபோது தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் உயிரிழந்தார் என்பதனையும் சட்டத்தரணிகள்சுட்டிக் காட்டினர். இது தொடர்பிலேயே நீதித்துறை மற்றும் சிறைச்சாலை ஆணையாளருக்கு தெரியப்படுத்திக் கடிதம் அனுப்பியுள்ளதாகவும் சட்டத்தரணிகள் மேலும் தெரிவித்தனர்.

இந்த வழக்கு எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (4-6)

## பொலிஸார்...

த்தது. கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் சிறப்புப் பிரிவினர் கல்லாறு பகுதியைச் சுற்றிவளைத்து கசிப்பு உற்பத்தி செய்யப்படும் இடத்தை முற்றுகையிட்டனர். அங்கு பதுங்கியிருந்த கும்பல் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தினர்.

தாக்குதலில் குழுவின் பொறுப்பதிகாரியான உதவிப் பொலிஸ் பரிசோதகர் பிரதீப் படுகாயமடைந்தார். கும்பல் அவரின் இரு அலைபேசிகளையும் பறித்து கொண்டு தப்பி ஓடிவிட்டது. படுகாயமடைந்த பொறுப்பதிகாரி பிரதீப் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தப் பகுதியில் இருந்து 2 மோட்டார் சைக்கிள்களும் 6 பெரல் கோடாவும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன. அந்தக் கும்பலில் கிளிநொச்சியில் அண்மைய நாட்களில் இடம்பெற்றுவரும் கொள்ளை சம்பவங்களுடனும் தொடர்புள்ளர்களும் உள்ளனர்" என்று கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர் ஒருவர் நேற்றிரவு கைது செய்யப்பட்டார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (வ-6-101)

## அமைச்சர்கள்...

குழு முன்பாக அமைச்சர்கள் இருவரும் முன்னிலையாக மாட்டோம் என்று தெரிவித்துள்ளனரே?" என்று ஆளும்கட்சி உறுப்பினரால் முதலமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், "நான் நியமிக்கும் விசாரணைக் குழு விசாரணை நடத்தும். அவர்கள் வந்தாலும், வராவிட்டாலும் விசாரணை இடம்பெறும். அவர்கள் வராவிட்டால், அவர்கள் இல்லாமலேயே விசாரணை இடம்பெறும். விசாரணையின் முடிவில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் எனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்து நடவடிக்கை எடுக்க முடியும். நான் அந்த வழியைப் பயன்படுத்தவில்லை. முதலாவது வழியிலேயே செயற்படப் போகின்றேன்" என்று குறிப்பிட்டுள்ளார். (வ-5)

## மின்சார...

வீர தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய அரசு கலைக்கப்பட வேண்டும் சுதந்திரக் கட்சியின் தலைமையிலான அரசு உருவாக்கப்பட வேண்டும் என்று மகிந்த அணியினர் கூறி வருகின்றனர். ஆனால் இந்த தேசிய அரசால்தான் எம்மால் பன்னாடுகளை வெற்றிகொள்ள முடிந்துள்ளது. அதனூடாகப்பலநன்மைகளை அடைந்து வருகின்றோம். பொருளாதார அபிவிருத்திக்கு இந்த அரசேகாரணமாகவுள்ளது.

தேசிய அரசை உலகம் விரும்புவதால் அது எம்முடன் இணைந்து செயலாற்றுகின்றது. தேசிய அரசு தொடர்ந்து நீடித்தால் தங்களால் மீண்டும் ஆட்சிக்கு வர முடியாது என்பதை உணர்ந்தவர்களே தேசிய அரசை எதிர்க்கின்றனர்-என்றார். (கு-3)


## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் முன்னணி Hotel ஆன Tilko Jaffna City Hotel இற்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.

**பராமரிப்பு உதவியாளர்கள் - Housekeeping Staff**

**சமையலறை பணியாளர்கள் - Kitchen Staff**

**உணவக பணியாளர்கள் - Restaurant Waiters**


அனுபவம் மற்றும் திறமைக்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். உணவு மற்றும் தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.

தொடர்புகளிற்கு :-

021 222 5969, 077 981 7617


## மரண அறிவித்தல்

### சந்தியா அந்தோனிமுத்து



இளவாலை சென். ஜேம்ஸ் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சந்தியா அந்தோனிமுத்து 28.06.2017 புதன்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற மேரி திரேசாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான லோறன்ஸ், சிசிலியா, கொர்னேலியூஸ், மரியம்மா, எட்வேட் (ஆசிரியர்), ஸ்ரீபன் (உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்) மற்றும் நட்சத்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (29.06.2017) வியாழக்கிழமை பி.ப.4.00 மணிக்கு இளவாலை, புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித யாகப்பர் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: உறவினர்கள்**

## மரண அறிவித்தல்

### திருமதி
### செல்லம்மா திருநாவுக்கரசு



தோற்றம் 14.02.1939 மறைவு 26.06.2017

பத்தாவத்தை, இளவாலையைப் பிறப்பிடமாகவும் தில்லைகட்டி வீதி, சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா திருநாவுக்கரசு கடந்த (26.06.2017) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற பாலப்பு - சிவகாமி தம்பதியரின் அன்பு மகளும் கிருஷ்ணர் - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கிருஷ்ணர் திருநாவுக்கரசின் அன்பு மனைவியும் தயாபரன் (பிரான்ஸ்), சுதாகரன்(யாழ். பலநோக்குகூட்டுறவுசங்கசமாசம்), பிரபாகரன் (பிரான்ஸ்), சித்ரா, சுமித்ரா ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றசிறிகாந்தன், சுரேஸ்குமார், ஜெயந்திமாலா, துஸ்யந்தி ஆகியோரின் அன்பு மாமியும் பிரவீணா, கிருவிகேசன், டனுசியா, தரணியா, லவணியன், மதிசூதனன், மிதுர்க்கா, மயுட்ஸ்க்கா, விஷ்ணுராஜ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கிருஷ்ணசாமி, நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.06.2017) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் சுன்னாகத்தில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல்தகனக்கிரியைக்காக சுன்னாகம், கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தில்லைகட்டி வீதி,**
**சுன்னாகம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

ஜனனம் 22.01.1962 மரணம் 17.05.2017



கடந்த (17.05.2017) புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குல விளக்கு

அமரர்
### கண்ணையா நடராசா

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (29.06.2017) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

**தபால்கந்தோர் வீதி, கொடுக்கிளாய்,**
**ஆழியவளை, தாளையடி.**

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### முத்துதம்பி சிவானந்தன்

சுதுமலை வடக்கு, மலைவேம்படி ஒழுங்கை, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துதம்பி சிவானந்தன் நேற்று (28.06.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2017) வியாழக்கிழமை பி.ப.ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மலைவேம்படி லேன்,**
**சுதுமலை வடக்கு, மானிப்பாய்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## வெளிநாட்டில்...

கச் சிக்கிவிட்டார். மாணவிக்கான நீதியை தீர்ப்பாயம் வழங்கும்"

இவ்வாறு பதில் சட்டமா அதிபர் டப்புள்ள டி லிவேரா தீர்ப்பாயம் முன்னிலையில் நேற்றுத் தெரிவித்தார்.

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கின் தொடர் விசாரணை 3 மேல் நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய தீர்ப்பா யத்தின் (ட்ரயல் அட் பார்) முன்னிலையில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நேற்று ஆரம்பமானது.

வழக்கின் ஆரம்பத்தில் ஒழுங்கு விதிமுறைகளின் பிரகாரம் சட்டமா அதிபரின் தொடக்க உரை இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பதில் சட்டமா அதிபர் டப்புள்ள டி லிவேரா மேலும் தெரிவித்ததாவது:

**நீதியான தீர்ப்பை தீர்ப்பாயம் வழங்கும்**

இலங்கையின் சட்ட வரலாற்றில் முதன்முறையாக 3 மேல் நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய தீர்ப்பாயம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நடைபெறுகின்றது. யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்ற தீர்ப்பாய விசாரணை சிறப்பான முடிவைக் கொடுக்கும். அதில் எனக்கு எந்தவித சந்தேகமும் இல்லை. வலுவான நம்பிக்கையை ஏற்படுத்தும் தீர்ப்பாயத்தை வடக்கு மாகாணத்தில் அமைத்தமைக்கு நீதித் துறைக்கு நன்றி கூறுகின்றேன்.

**கடினமான வழக்கு**

இந்தக் காட்டுமிராண்டித்தனமான குற்றத்தைச் செய்த எதிரிகளை அடையாளப்படுத்த குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நுணுக்கமான ஆழமான முறையில்விசாரணைகளை முன்னெடுத்தது.

**மாணவியின் கொலைக்கு பெரும் பின்னணி உண்டு**

சந்தேகநபர்களைப் பாதுகாக்கின்ற முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டதாக அறிவேன். அது தொடர்பாக விசாரணை நடத்தப்படும். இது ஒரு வன்புணர்வோ அல்ல கொலையோ அல்ல அதற்கு மேலாக ஒரு பின்னணி உண்டு. இந்த குற்றமானது முற்கூட்டியே அறியப்பட்ட ஒரு திட்டமாகும். திட்டமிடப்பட்ட குற்றம் உலகளவில் இதன் தயார்ப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதாவது பன்னாட்டு மயப்படுத்தப்பட்ட குற்றம் என்று கூறுவதில் நான் தயக்கம் காட்டமாட்டேன். இந்த குற்றத்தின் பின்னணியில் உள்ள இன்னொரு குழுவினர் நாட்டுக்கு கெட்ட பெயர் உண்டாக்கும் செயலை செய்ய முனைகின்றார்கள். உலகளவில் இந்தக் குற்றத்துக்கான திட்டமிடல் நடந்திருக்கின்றது.

**உறவினர்கள் இணைந்து கூட்டுக் கொலை**

சான்றுகள் சூழ்நிலைச் சான்றுகளுடன் பொது மன்னிப்பு வழங்கப்பட்ட குற்ற ஒப்புதல்களுடன் இந்த விசாரணை ஆரம்பமாக உள்ளது. 1,2 மற்றும் 3 எதிரிகள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். 4ஆம் 9ஆம் எதிரிகளும் சகோதரர்கள். 6 ஆம் எதிரியும் 9ஆம் எதிரியும் மச்சான் முறையான உறவினர்கள். 5 பேரும் உறவுக்காரர்கள். 5,7 மற்றும் 8ஆம் எதிரியும் உறவுக்காரர் அல்ல. அதாவது இந்தக் குற்றத்தின் முக்கிய சூத்திரதாரியான 9ஆம் எதிரி நேரலை ஒளிபரப்பு செய்து பன்னாட்டுக்கு காட்டும் முகமாக நடாத்தப்பட்ட இந்தச் சம்பவத்துக்கு 9ஆம் எதிரி தனது மச்சனான 5ஆம் எதிரியைத் தொடர்பு கொண்டுள்ளார்.

**வெளிநாட்டிலேயே கூட்டு வன்புணர்வுக்கு உடன்படிக்கை**

வெளிநாடு ஒன்றிலிருந்து ஒரு உடன்பாட்டை 9ஆம் எதிரி பெற்றுள்ளார். நேரடியான ஒரு ஆபாசப் படத்தை உருவாக்கி விற்பது தொடர்பில் இந்த பன்னாட்டுச் சந்தையின் உடன்பாடு தெற்காசிய நாட்டில் உள்ள இளம் பெண்களின் ஆபாச வீடியோவே ஆகும். 9ஆம் எதிரி சுவிஸ் நாட்டின் குடியுரிமை பெற்ற ஒருவர். இலங்கைக்கு அதிகளவில் வந்து செல்கின்றவரும்கூட. இந்தக் குற்றவாளிகள் 9 பேரும் ஒருவருக்கொருவர் தெரிந்தவர்கள். 9 எதிரிகளும் இளம் பெண்ணை கூட்டாகச் சேர்ந்து வன்புணர்ந்து காணொலி எடுத்து பின்பு கொலை செய்வதுதான் திட்டம். அவர்களின் திட்டத்துக்குள் தூரதிஸ்டவசமாக சிக்கிய பெண் வித்தியா.

**சுவிஸ் குமார் நடந்தவைகளை உளறிவிட்டார்**

9ஆவது எதிரி (சுவிஸ் குமார்) சம்பவம் தொடர்பான அனைத்து விடயங்களையும் சிறையில் வைத்து இன்னொரு நபருக்கு கூறியுள்ளார். சுவிஸில் வைத்து அவர் உடன்பாடு வழங்கிவிட்டு இலங்கையில் வந்து நிறைவேற்றுவது நிதிச் சலவைக்கு உள்ளிட்ட குற்றமாகும். இந்தப் புலன் விசாரணை மேற்கொள்ளப்படும் போது 20 மில்லியன் ரூபா லஞ்சம் வழங்க முற்பட்டது. இதுவும் நாங்கள் அறிந்திருக்கிறோம். இதன் சான்று விளக்கத்தின் போது வழங்கப்படும்.

**காட்டுமிரண்டித்தனத்தை காணொலி எடுத்துள்ளனர்**

2,3,5,6 ஆகிய 4 எதிரிகளால் கொடூரமாக வன்புணரப்பட்ட அந்தப் பெண் பிள்ளையின் உடற் சோதனையில் யோனிமடல் இல்லாமல் செய்யப்பட்டோ அல்லது அழிக்கப்பட்டோ இருக்கிறன்றது. பிறப்புறுப்பைச் சுற்றிப் பல காயங்கள் காணப்படுவதாக இந்த சோதனை தெரியப்படுத்துகின்றது. இது ஒரு வன்மையான கூட்டு வன்புணர்வாகும்.

இதன்போது 5, 6ஆம் எதிரிகளால் மாறி மாறி காணொலி எடுக்கப்பட்டது. 5, 6ஆம் எதிரிகள் தமக்கெதிரே இந்தக் காணொலியை முழுமையான வடிவமாக மாற்ற முற்படுகின்றார்கள். உடன்பாடு செய்யப்பட்ட அந்தக் கட்சிக்கு இந்தக் காணொலி விற்கப்படுகின்றது.

**காணொலியை விற்றமைக்கு சான்றுகள் கிடைத்துவிட்டன**

இந்தக் காணொலியானது விற்கப்பட்டு விட்டதை சான்றுகள் மூலம் அறியமுடிகிறது. கூட்டாக வன்புணர்வு செய்து விட்டு அந்த மாணவி கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டிருக்கிறார். பிடரிப் பகுதிகளிலும் காயங்கள் காணப்பட்டன. பல காயங்கள் உடலில் காணப் பட்டன. வன்மையான முறையில் மாணவி கொலை செய்யப்பட்டிருக்கிறார்.

இந்தச் சம்பவம் மாணவி பாடசாலை சென்று கொண்டிருந்த போது நடைபெற்றிருக்கிறது. யாருமற்ற பற்றைவெளியில் பிள்ளையைக் கடத்தி, பின்பு யாருமற்ற பாழடைந்த வீட்டில் கூட்டு வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு மீளவும் அவர் கடத்தப்பட்ட இடத்துக்கு இழுத்துக் கொண்டு வரப்பட்டு கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்.

கை, கால்கள் இழுத்து அருகிலுள்ள மரத்தில் கட்டப்பட்டிருக்கின்றது. முழு நிர்வாணமாக மாணவி இருந்தார். நாட்டினுடைய சுய கௌரவத்தையும் களங்கப்படுத்தும் நோக்கத்திலே இந்த விடயம் நடத்தப்பட்டிருந்தது. அந்த நோக்கத்திலேயே இச்சம்பவம் நடைபெற்றிருக்கின்றது -என்றார். (வ-12)

## மருத்துவர்...

சியம் அரசுக்கு இல்லை. இந்த விடயம் தொடர்பில் அரசு உரிய நவடிக்கை எடுக்கும். இதனையே அரச தலைவரும் கூறியுள்ளார். இவ்வாறு சுகாதார அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமாள ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரின் தரம் தொடர்பில் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கு அரசு தீர்மானத்திருந்த நிலையிலேயே அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் சுகாதார அமைச்சை முற்றுகையிட்டனர். அவர்கள் அன்று முற்றுகையிட்டிருக்காவிடின் குறித்த வர்த்தமானி வெளியாகியிருக்கும்.

அமைச்சர் சம்பிக்க ரணவக்க சைட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாகக் கூறப்படுவதில் எவ்வித உண்மையும் இல்லை. அப்படியாயின் நேற்று (நேற்றுமுன்தினம்) அமைச்சரவைக் கூட்டத்தில் அவர் எதிர்ப்பை வெளியிட்டிருப்பார். எதிர்வரும் காலங்களில் சைட்டம் தொடர்பில் தீர்மானம் எடுக்க நடத்தப்படவுள்ள பேச்சுக்களின்போது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தை உள்வாங்க வேண்டும் எனக் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்து.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் என்பது வெறும் தொழிற்சங்கம் மாத்திரமே. அரச தலைவரும் இதனையே தெரிவித்துள்ளார். இதுவரை அரச தலைவர் சார்பில் எவரும் அரச மருத்துவர் அதிகாரிகள் சங்கத்துடன் கலந்துரையாடவில்லை. இந்த விடயம் தொடர்பில் அரசு விரைவில் உரிய தீர்மானத்தை எடுக்கும் என்றார். (த)

## சம்பந்தன்...

சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நாடளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரையே முதலமைச்சர் இவ்வாறு மறைமுகமாகச் சாடியுள்ளார் என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் கேள்வி பதில் அறிக்கை வடிவில், வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்று தனதுஇரண்டாவது பத்திரிகை அறிக்கையை அனுப்பி வைத்துள்ளார்.

அதில் கூறப்பட்டுள்ளதாவது:

ஊடகவியலாளர் கேள்வி வடக்கு மாகாண சபையில் நடப்பவைகளுக்கும் தெற்கின் அரசியலுக்கும் ஏதும் சம்பந்தமுண்டா?

**திசை திருப்பல்**

பதில் வடக்கு மாகாண சபையினையும் அதன் செயற்பாடுகளையும் திட்டமிட்ட வகையில் குழப்புவதன் மூலம் தமிழ் மக்களின் கவனத்தினைத் திசை திருப்புவதற்கு அரசும் அவர்களோடு சேர்ந்து இயங்குகின்ற தமிழ் அரசியல்வாதிகளும் முனைந்து வருகின்றார்களோ என்று எண்ண வேண்டியுள்ளது. அரசமைப்புத் திருத்தத்தினூடாக தமிழ் மக்களுக்குரிய அரசியல் தீர்வினைப் பெற்றுத் தர வேண்டிய அரசு அதனைச் செய்து முடிக்காது காலத்தினை இழுத்தடித்து வருவதோடு உத்தேச அரசமைப்பில் தமிழர் தரப்புக்கு அதிகாரங்களை முழுமையாகப் பகிர்ந்தளிக்காத விதத்தில் மாற்றங்களை உள்ளடக்கும் செயற்பாட்டிலும் ஈடுபட்டு வருகின்றது. இதிலிருந்து தமிழர்களுடைய கவனத்தைத் திசை திருப்புவதற்காகவே அவர்கள் வடக்கு மாகாண சபையைக் குழப்ப முனைகின்றனரோ என்ற சந்தேகம் எம்முள் பலரிடம் எழும்புகின்றது.

**மூடுமந்திரம்**

கூட்டாட்சி அடிப்படையிலான ஆட்சி அதிகாரம், வடக்கு கிழக்கு இணைப்பு, நிதி உட்பட பல்வேறு ஆக்கபூர்வமான அதிகாரப் பகிர்வைத் தமிழர் தரப்பு எதிர்பார்த்துள்ள வேளையில் அவற்றை வழங்காது ஒரு அரைகுறைத் தீர்வைத் திணிப்பதற்கு அரச தரப்பு முயன்று வருகின்றது. இந்த விடயங்களைக் கையாளும் குறித்த சில தமிழ்த் தரப்பு அரசியல்வாதிகள் அரசின் இந்தப் போக்கிற்கு ஆதரவளித்து வருவதுடன் மக்களுக்கு இது தொடர்பிலான விடயங்களைத் தெளிவுபடுத்தாது மூடுமந்திரம் போன்று அவற்றைக் கையாண்டு வருகின்றனர். 13ஆவது திருத்தச் சட்டத்திற்கு மேல் எதனையும் தமிழ் மக்கள் எதிர்பார்க்க முடியாது என்று சிலர் கூறி வருவது சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துகின்றது.

**குழப்பங்கள் திட்டமிடப்பட்டவை**

இந்த விடயங்கள் தொடர்பில் தமிழ் மக்களுடைய கவனத்தினைத் திசை திருப்பும் முகமாக நன்கு திட்டமிட்ட வகையில் வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகளில் தொடர்ச்சியாகக் குழப்பங்களை உருவாக்கித் தமிழ் மக்களையும் தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்களையும் எனது கவனத்தையும் திசை திருப்ப அரசும் அவர்களுக்குச் சார்பான சில தமிழ் அரசியல்வாதிகளும் முயன்று வருகின்றனர் என்றே தோன்றுகின்றது. இதன் ஒரு அங்கமாக வட மாகாண சபையின் உறுப்பினர்கள் சிலரைப் பயன்படுத்தி வட மாகாண சபையில் தொடர்ச்சியான குழப்பத்தை உருவாக்கி வருகின்றனர். இது தொடர்பில் தமிழர் தரப்பு விழிப்படைதல் அவசியமானது. உத்தேச அரசமைப்பு மாற்றம் தொடர்பில் என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பது பற்றி மக்கள் கவனம் செலுத்துதல் அவசியமானது. இல்லாதுபோயின் எமது கவனத்தைத் திசை திருப்பி வைத்துக் கொண்டு தாம் நினைத்ததை நிறைவேற்ற முனையும் சக்திகளுக்கு அது வாய்ப்பாக அமைந்து விடும். இந்தத் தருணத்தில் எம்மிடையே விழிப்பு அவசியம் என்றுள்ளது. (த-5)

## வடக்கு -கிழக்கை...

இணைப்பதற்கு இந்த அரசு முயற்சி செய்கிறது. அதற்காகவே முஸ்லிம்களுக்கு எதிராக இனவாதம் தூண்டப்பட்டுள்ளது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் பொது பலசேனா தேரர்கள் மாத்திரமன்றி யாராக இருந்தாலும் குற்றம் செய்திருந்தால் கைது செய்ய முடியும். நாங்கள் இனவாதத்தை முழுமையாக எதிர்க்கின்றோம். நாங்கள் தேசியவாதிகள்; இனவாதிகள் அல்லர்.

பெரும்பான்மை இனத்தை தாழ்த்திச் சிறுபான்மை இனங்களை மகிழ்ச்சிப்படுத்த முடியாது. அவ்வாறு செய்தால் எந்த இனமும் நிம்மதியாக இருக்காது. தெற்கில் பள்ளிவாசல்கள் தாக்கப்படுகின்றன. கிழக்கில் பௌத்த விகாரைகள் தாக்கப்படுகின்றன. மகிந்த காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்றன. அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தபோது அதை எதிர்த்தவர்கள் இந்த அரசில்தான் உள்ளனர். அரசில் இருந்து விலகுவதாக அறிவித்தார்கள்.

அளுத்கமவில் அன்று பாதிக்கப்பட்ட மக்களின் கட்டடங்களை பூரணமாகப் புனரமைக்க முடிந்தது. ஆனால் அந்த மக்களின் உள்ளங்களை புனரமைக்க முடியவில்லை; அந்த இதயங்களைவெற்றிகொள்ள முடியவில்லை. அளுத்கம சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணை நடத்துவதாக இந்த அரசு கூறியது. ஆட்சிக்கு வந்ததும் மறந்துவிட்டது.

கிழக்கு முஸ்லிம்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் வேற்றுமையை உருவாக்கி கிழக்கு முஸ்லிம்களை வடக்கு-கிழக்கு தமிழர்களுடன் ஒற்றுமைப்படுத்தி வடக்கு-கிழக்கை இணைப்பதற்கு இந்த அரசு முயற்சி செய்கின்றது. அதற்காகவே முஸ்லிம்களுக்கு எதிராக இனவாதம் தூண்டப்படுகின்றது என்பது தெளிவாகத் தெரிகின்றது.

இனங்களிடையே இவ்வாறு இனவாதத்தைத் தூண்டி அவசர காலச் சட்டத்தைக் கொண்டு வந்து தேர்தலை ஒத்திப்போடுவதற்கும், வடக்குகிழக்கை இணைப்பதற்கும், மகிந்தவின் பக்கம் வந்துகொண்டிருக்கும் முஸ்லிம்களைத் தடுப்பதற்கும் அரசு இவ்வாறு இனவாதத்தைப் பரப்பி வருகின்றது. இதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. மக்கள் இது தொடர்பில் விழிப்பாக இருக்க வேண்டும். நாம் இனவாதத்தை எதிர்த்துப் பேசிவோம். தேசியவாதத்தை ஆதரித்துப் பேசுவோம். புதிய அரசமைப்பில் ஒற்றையாட்சியை இல்லாமல் செய்யும் திட்டத்தை எதிர்ப்போம். வடக்குகிழக்கு இணைப்பை எதிர்ப்போம். இதனூடாக நாம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்-என்றார். (த-3)

## கைதான...

செய்யப்பட்ட இலங்கைக் கடற்படைப் புலனாய்வு அதிகாரி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (த)

## சமரச...

னருமான மாவை.சேனாதிராசா தெரிவித்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் அமைச்சர்கள் நியமனம் மேற்கொண்டமை தொடர்பில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நிலைப்பாடு என்ன என்று கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார். அவர் மேலும் கூறியதாவது:

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் என்னை வந்து சந்தித்தபோது, திருமதி அனந்தி சசிதரனுக்கு அமைச்சுப் பதவி வழங்கப் போவதாகக் கூறினார். அவர் கட்சி ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்பட்டிருப்பதால் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தேன். மறுநாள் தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்டு, அனந்திக்கு மகளிர் விவகாரத்தை வழங்கப் போவதாகத் தெரிவித்தார். கட்சிப் பொதுச் செயலர் மற்றும் ஏனையோருடன் பேசிப் பதிலளிப்பதாகக் கூறினேன்.

அதன் பின்னர் நாம் கூட்டம் நடத்தி, எமது கட்சி சார்பில் இ.ஆர்னோல்ட்டுக்கு அமைச்சுப் பதவி வழங்குமாறு பரிந்துரைத்தோம். அவர் இப்போது அமைச்சர்களை நியமித்துள்ளார். எதிர்கால விடயங்கள் தொடர்பில் பொறுத்திருந்து பார்ப்போம்.

நான் ஏற்கனவே பத்திரிகைகளுக்குக் கூறியதை மீண்டும் கூறுகின்றேன். நாங்கள் அமைச்சுப் பதவிகளுக்குப் போட்டியிட்டுக் கொண்டு, எமது மக்களின் விடுதலையை, அரசியல் தீர்வை தவறவிட முடியாது. எங்கள் மக்கள் முன்னால் நாங்கள் பிளவுபட்டு நிற்க முடியாது. இதற்காகவே சமரச முயற்சி ஆரம்பிக்கப்பட்டது. அந்தச் சமரச முயற்சிக்குப் பங்கம் ஏற்படாமல் முதலமைச்சர் விக்னேஸ்வரன் நடவடிக்கை எடுப்பார் என்று நம்புகின்றேன் என்றார்.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், வடக்கு மாகாண முதலமைச்சருக்கு, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எழுதிய இரண்டாவது கடிதத்தில், முதலமைச்சர் தமிழ் அரசுக் கட்சியுடன் ஆலோசிக்காமல் செயற்படுகின்றார் என்பதைக் குறிப்பிட்டிருந்தார். கட்சித் தலைவர் மாவை.சேனாதிராசாவும் அதே விடயத்தைச் சுட்டிக்காட்டியிருந்தார். தற்போது அவற்றை நிரூபிக்கும் வகையில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார் என்றார். (த-5)

# அரையிறுதியில் ஊரெழு றோயல்

யாழ்ப்பாணம், ஜூன் 29

கலைமதியின் கால் பந்தாட்டத் தொடரில் முதல் அணியாக அரையிறுதிக்குள் நுழைந்தது ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம்.

வடமராட்சி கால் பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் சுப்பர் 8 ஆட்டங்கள் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் மோதியது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி அரையிறுதிக்குத் தகுதி பெறும் நிலை இருந்தது. ஆட்டம் ஆரம்பித்த சில நிமிடங்களில் றோயலின் ரெலக்சன் முதல் கோலைப் பதிவு செய்து எதிரணிக்கு அதிர்ச்சி கொடுத்தார். தொடர்ந்து ஆட்டத்தை விரைவுபடுத்திய றோயல் 14 ஆவது, 20 ஆவது நிமிடங்களில் கஜகோபனின் அதிரடியான கோல்கள் மூலம் 3:0 என முன்னிலை பெற ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது. இரண்டாம் பாதியில் மாற்றங்கள் ஏற்படவில்லை. முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. ஆட்டநியகனாக கஜகோபன் தெரிவு செய்யப்பட்டார்.

(ம-108)



# மாவட்ட கூடைப்பந்தில் வேம்படி சம்பியனானது

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்திய இளநிலைப் பிரிவினருக்கான தொடரில் 13 வயது பெண்கள் பிரிவில் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி சம்பிய னானது.

உடுவில் மகளிர் கல்லூரியின் கூடைப்பந்தாட்ட திடலில் நேற்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்ற இறுதியாட்டத்தில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி மோதியது.

முதலாவது கால் பாதியில் 5:4 என்ற புள்ளி களின் அடிப்படையில் உடுவில் முன்னிலை வகித்தது. இரண்டாவது கால் பாதியில் இரு அணிகளும் தலா 2 புள்ளிகளைப் பெற்றன. முதல் பாதியின் முடிவில் 7:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்தது உடுவில். மூன்றாவது கால் பாதியை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது வேம்படி. நர்காம் பாதி அப்படியே வேம்படியின் பக்கமாகச் சாய்ந்தது. அந்த அணி 10:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் நான்காவது கால் பாதியைத் தனதாக்கியது. முடிவில் 22:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று முன்னிலை வகித்தது வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி.

(ம-23)

## சைக்கிளோட்டம்

இணுவில் அண்ணா சனசமூக நிலையத்தின் 65ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாண ரிதியாக நடத்தத்திட்டமிட்ட சைக்கிள் ஓட்டப்பேட்டி எதிர்வரும் ஞாயிறுக்கிழமை காலை 6 மணிக்கு இடம் பெறவுள்ளது. (ம-23)



## உடுப்பிட்டி அ.மிசனின் செந்தீஸ் பதக்கவேட்டை

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ்ப்பாணம் மாவட்ட மெய்வன்மைச் சங்கம் நடத்திய இளநிலைப் பிரிவினருக்கான தடகளத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.செந்தீஸ் மூன்று பதக்கங்களையும் சுவீகரித்துள்ளார்.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற தடகளத்தில் 14 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான தடகளத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த எஸ்.செந்தீஸ் 100 மீற்றர், 80 மீற்றர், நீளம் பாய்தல் போன்றவற்றில் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றி அவ் வயதுப் பிரிவில் சிறந்த தடகள வீரராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

(ம-422)

## ஏஞ்சல்-இந்து இன்று மோதல்

யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் இளநிலைப் பிரிவினருக்கான தொடரில் 15 வயது ஆண்கள் பிரிவு இறுதியாட்டம் இன்று இடம்பெறவுள்ளது.

மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலையின் கூடைப்பந்தாட்டத் திடலில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் 15வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது.

(ம-23)

## வலைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்ப்பாண மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம் நடத்தத்திட்டமிட்ட, வலைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள். ஜூலை மத்திய பகுதியில் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் பற்குபற்ற விரும்பும் கழகங்கள் தங்களது பதிவுகளை எதிர்வரும் 7ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர்.

(ம-23)

# சோமஸ்கந்தா மகுடம்சூடியது



யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ்ப்பாண மாவட்ட அணிகளுக்கு இடையிலான 19 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கரப்பந்தாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணியை எதிர்த்து அச்சுவேலி மத்திய கல்லூரி அணி மோதியது. புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி 25:15, 25:15 என்ற புள்ளிகள் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. மூன்றாமிடத்தை தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியால்ய் அணி பெற்றது.

(ம-422)

## சென். ஹென்றிஸின் கால்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி தேசிய ரீதியாக நடத்தத் திட்டமிட்ட 14 வயது, 16 வயது, 17 வயது, 18 வயது, 20 வயது பிரிவு அணிகளுக்கான 5 வீரர்கள் பங்குபற்றும் கால் பந்தாட்டத் தொடர் சென். ஹென்றிஸ் கல்லூரி மைத தன [illegible] வரும் ஜூலை ம[illegible]ம் 16ஆம் திகதி இடம்பெறவுள்ளது. 40 பாட[illegible] சார்ந்த 120 அண[illegible]ள் தொடரில் பங்கு பற்றுகின்றன. (ம-23)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 29

**அரியாலையின் கரப்பந்தாட்டம்**

அரியாலை சனசமூக நிலையம் தனது 68ஆவது ஆண்டு நிறைவையொட்டி யாழ்ப்பாண மாவட்ட அணிகளுக்கு இடையில் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நீர்வேலி ஐக்கிய அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும் இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அச்சுவேலி கலைமகள் அணியை எதிர்த்து சிறுப்பிட்டி கலையொளி அணியும் இரவு 8.45 மணிக்கு புத்தூர் கலைமதி அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய அணியும் மோதவுள்ளன.

**கலைமதி வி.கழக கூடைப்பந்தாட்டம்**

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் சுப்பர் 8 ஆட்டங்கள் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குப்பிளான் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகமும் இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

**மைக்கல் வி.க. கால்பந்தாட்டம்**

உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் சென்.மைக்கல் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குப்பிளான் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அராலி திருமகள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அராலி ஏ.எல். விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**உதயதாரகை கால்பந்தாட்டம்**

கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் கந்தசாமி ஆறுமுகம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மைக்கல் விளையாட்டுக் கழக 'பி' அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து கலைமதி விளையாட்டுக் கழக 'பி' அணி மோதவுள்ளது.

(ம-23,108,422)


# "டோக்கியோ ஒலிம்பிக் பவிலியனில்"

"அடுத்த ஒலிம்பிக் தொடரான 2020ஆம் ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக்கை பவிலியனில் இருந்து பார்ப்பேன்" இவ்வாறு தெரிவித்தார் ஜமைக்காவைச் சேர்ந்த குறுந்தூர ஓட்டப்பந்தய வீரரான உசைன் போல்ட்.

உலகின் அதிவேக ஓட்டப்பந்தய வீரராக ஜமைக்காவைச் சேர்ந்த உசைன் போல்ட் உள்ளார். 100 மீற்றரை 9.58 செக்கன்களில் கடந்து சாதனை படைத்துள்ளார். செக்குடியரசில் நடக்கும் உலக தடகளத் தொடரில் பங்கேற்பதற்காக அங்கு சென்றுள்ளார் போல்ட். இதன்போது நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"எனக்கு என்ன தேவையோ அவை அனைத்தையும் செய்து விட்டேன். தற்போது எனது பயணம் முடிவுக்கு வந்துகொண்டிருக்கிறது என்று நினைக்கிறேன். லண்டனில் நடக்க இருக்கும் உலக தடகளத் தொடரில் பங்கேற்க ஆர்வமாக இருக்கிறேன். அந்தத் தொடர் எனக்கு உணர்வுபூர்வமாக இருக்கும். அடுத்த ஒலிம்பிக் தொடரில் 100, 200 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் எவர் வெற்றி பெறுவார்கள் என்பதை பவிலியனில் அமர்ந்து பார்ப்பேன். தற்போது நிறைய இளம் வீரர்கள் வருகிறார்கள். இதில் எவர் பட்டத்தை வெல்வார்கள் என்பதை பார்க்க ஆர்வமாக இருக்கிறேன்" என போல்ட் மேலும் தெரிவித்தார்.

(ம)






# மலிங்கவுக்கு தடை விதிப்பு

விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகரவை குரங்குடன் ஒப்பிட்டுப் பேசிய விவகாரத்தில் மலிங்கவுக்கு ஒத்தி வைக்கப்பட்ட ஓராண்டுத் தடை விதிக்கப்பட்டது.

மினி உலகக்கிண்ணத் தொடரில் இலங்கை அணி அரையிறுதிக்குக்கூடத் தகுதி பெறாமல் வெளியேறியது. இதை விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர கடுமையாக விமர்சித்தார்.


"இலங்கை வீரர்களில் சிலர் உடல்தகுதியை நிரூபிக்க முடியாதுள்ளனர். தேசிய அணியை விடவும் ஐ.பி.எல். போன்ற பணத்துக்காக விளையாடும் தொடர்களிலேயே அவர்களின் கவனம் குவிந்துள்ளது. வெறுமனே 4 பந்துப்பரிமாற்றங்கள் வீசுவதற்காக தமது உடல் தகுதியை மிகச் சிறப்பாக வைத்துள்ளனர். ஆனால் தேசியத்தில் கோட்டை விடுகின்றனர்" என்று குறிப்பிட்டார். தயாசிறி எவரையும் குறிப்பிட்டுக் கருத்துக்கூறவில்லை. எனினும் ஐ.பி.எல். தொடரில் கலந்து கொண்ட முக்கியமான இலங்கைப் பந்துவீச்சாளர் மலிங்கவே. இதனால் மலிங்க பதில் கருத்தைத் தெரிவித்தார்.

இலங்கை கிரிக்கெட் அணியை கிளியாகவும், தயாசிறியை குரங்காகவும் ஒப்பிட்டிருந்தார். "கிளியின் கூடுபற்றி குரங்குக்கு என்ன தெரியும்" என்பது மலிங்கவின் கருத்தாக அமைந்தது. இது பல அதிர்வலைகளைத் தோற்றுவித்தது. இந்த நிலையில் அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி மலிங்கவுக்கு ஒத்தி வைக்கப்பட்ட ஓராண்டுத் தடை விதிக்கப்பட்டது. இது இன்னும் ஆறு மாதத்தில் நடைமுறைக்கு வரும் என்று கருதப்படுகிறது. மலிங்க அடுத்ததாக களமிறங்கும் ஆட்டத்துக்கான கட்டணத்தில் இருந்து 50 சதவீதம் தண்டமும் விதிக்கப்பட்டது.

(ம)

# பெடரர் 100

ஜேர்மனியின் ஹாலே ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சுவிட்சர்லாந்து வீரர் றோயர் பெடரர் கிண்ணம் வென்றுள்ளார். இந்தக் கிண்ணம் அவரின் 100ஆவது கிண்ணமாக அமைந்தது.



நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் பெடரரை எதிர்த்து ஜேர்மனி வீரர் அலெக்சான்டர் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலிரு செற்கைளயும் முறையே 6:1, 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி கிண்ணம் வென்றார் பெடரர்.

இந்தக் கிண்ணம் பெடரரின் 100ஆவது கிண்ணமாக அமைந்தது. இந்த அடைவை எட்டிய 10ஆவது வீரரானார் பெடரர்.

(ம)

# ரவி சாஸ்திரியும் விண்ணப்பித்தார்

இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளர் பதவிக்கு இந்திய அணியின் முன்னாள் வீரரான ரவி சாஸ்திரி விண்ணப்பித்தார் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் வட்டாரங்களில் இருந்து தகவல் கசிந்துள்ளது.

இந்திய அணித்தலைவர் கோக்லியுடன் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டைத் தொடர்ந்து இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளராக இருந்த கும்ளே தனது பதவியில் இருந்து விலகினார். பிறிதொருவரை தலைமைப் பயிற்சியாளராக நியமிக்க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஆர்வம் காட்டி வருகிறது. கும்ளேக்கு முன்னர் இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளராகவும் இயக்குனராகவும் செயற்பட்டிருந்தார் ரவி சாஸ்திரி. இவர் கோக்லியின் அபிப்பிராயத்தையும் வென்றவர். இதனால் இவரைத் தலைமைப் பயிற்சியாளராக்குவதற்கு கோக்லி ஆர்வம் காட்டுகிறார் என்று தெரிவிக்கப்பட்டது. இது மெய்பிக்கப்படும் வகையில் ரவி சாஸ்திரியின் விண்ணப்பம் அமைந்துள்ளது.

தான் தலைமைப் பயிற்சியாளராக தேர்ந்தெடுக்கப்பட வாய்ப்பிருந்தால் மட்டுமே விண்ணப்பிப்பேன் என்று ரவி சாஸ்திரி ஏற்கவே தெரிவித்தமையால் அவரே அடுத்த பயிற்சியாளராவதற்கு வாய்ப்பு அதிகம் இந்திய கிரிக்கெட் வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

ஜூலை 26ஆம் இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடை யிலான கிரிக்கெட் தொடர் தொடங்கவுள்ளது. இந்தத் தொடருக்கு முன் புதிய பயிற்சியாளர் நியமிக்கப்படுவார் என்று இந்திய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

(ம)

# மலிங்கவை ஊடகங்களே தூண்டின

## தயாசிறி கவலை



"லசித் மலிங்கவுக்கும் எனக்கும் எவ்வித தனிப்பட்ட பகைமையும் கிடையாது. எனக்கு எதிரான கருத்துக்களை மலிங்க வெளியிட அவரை ஊடகங்களே தூண்டின. இந்த விடயம் தொடர்பில் நான் கவலையடைகின்றேன்."

இவ்வாறு தெரிவித்தார் விளையாட்டுத்துறை அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான தயாசிறி.ஜயசேகர. அமைச்சரவையின் வாராந்த முடிவுகளை அறிவிக்கும் மாநாடு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறி னார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "கிரிக் கெட் வீரர்கள் எவரையும் தாக்க வேண்டும் என்று நான் எவ்வித கருத்துகளையும் தனிப்பட்டவர்களை மையப்படுத்திக் கூறவில்லை. கிரிக்கெட் வீரர்களுக்கு உடல்தகுதி இருக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியியே நான் கருத்துக்களை வெளியிட்டேன்.

கிரிக்கெட் வீரர்கள் மாத்திரமல்ல ஏனைய விளையாட்டு வீரர்களுக்கும் உடல்தகுதி சிறப்பாக இல்லை. இது யதார்த்தமான உண்மை. இதனைச் சரிசெய்ய வேண்டிய வேலைத்திட்டமொன்று அவசியமாகவுள்ளது.

அதற்காக வகுக்கப்படும் வேலைத்திட்டம் தொடர்பிலேயே அனைவருடனும் கலந்துரையாடித் தீர்மானம் எடுக்கப்படும் என்று கூறியிருந்தேன்.

ஆனால், இந்தக் கருத்தை ஊடகங்கள் மலிங்கவுக்கு எதிராக வெளியிட்டதாகக் கூறி அவரிடம் வினவின. அவர் எனக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டார். ஊடகங்ளின் செயற்பாட்டால்தான் இந்த விவகாரம் பூதாகரமானது. எனவே, ஊடகங்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். அத்துடன், மலிங்கவுக்கு எதிராக நான் எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

இலங்கை கிரிக்கெட் சபையே தீர்மானம் எடுத்துள்ளது. அவர் அத்தியாவசியமான வீரரும்கூட. நான் தெரிவித்த கருத்துக்கள் அவரை மையப்படுத்தி தெரிவித்தாகக் கூறி அவர் தொப்பியைப் போட்டுக் கொண்டதற்கு என்ன செய்ய முடியும்? என்றாலும் அவர் தொடர்பில் கிரிக்கெட் சபை நல்ல தீர்மானம் எடுக்கும் என நம்புகிறேன்" என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## தேசிய கால்பந்தாட்ட அணியில் வடக்கு வீரர்கள் 7 பேருக்கு இடம்

16 வயதுக்குட்பட்ட இலங்கை தேசிய கால்பந்தாட்ட அணியில் வடமாகாண வீரர்கள் 7 பேருக்கு இடம்கிடைத்துள்ளது. இதில் மன்னார் சென். சேவியர் ஆண்கள் தேசிய பாடசாலையில் இருந்து நான்கு வீரர்கள் இடம்பிடித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் சென். ஹென்றிஸ் கல்லூரியில் இருந்து சதுசன், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் இருந்து தனுசன், சென். பற்றிக்ஸ் கல்லூரியில் இருந்து டனிசன் ஆகியோரும் மன்னார் சென். சேவியர் ஆண்கள் தேசியப் பாடசாலையில் இருந்து கௌசிகன், அலெக்ஸ் றொபின்சன், யூட், றெனோல்ட் ஆகிய நால்வருக்கும் இடம் கிடைத்துள்ளது என்று முதல் கட்டத் தகவல்கள் வெளிவந்துள்ளன. (ம-23)

# சென். அன்ரனிஸ் கிண்ணம் வென்றது



யாழ்ப்பாணம், ஜூன் 29

இலங்கை கிரிக்கெட் சபை மன்னார் மாவட்ட மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையில் நடத்திய துடுப்பாட்டத் தொடரில் தாழ்வுபாடு சென். அன்ரனிஸ் அணி கிண்ணம் வென்றது.

சென். ஜோசப் விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் இந்து முன்னணி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தாழ்வுபாடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்து முன்னணி விளையாட்டுக் கழக அணி களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அன்ரனிஸ் அணி 25 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஜெரோன் 20 ஓட்டங்களையும், பிறின்ஸ் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்து முன்னணி விளையாட்டுக் கழக அணி 29.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 92 ஓட்டங்களை மட்டும் பெற்றனர். இதில் அஜந்தன் 11 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் தாழ்வுபாடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியின் சார்பில் சுகந்தன் 4 இலக்குகளையும் அகிலன் 3 இலக்குகளையும், சுஜன், அஜந்தன் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம-23)

## மே.இ.தீவுகள் – இந்தியா 3ஆவது ஆட்டம் நாளை

மேற்கிந்தியத் தீவுகள் - இந்திய அணிகளுக்கு இடையிலான ஒரு நாள் தொடரின் மூன்றாவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.

ஐந்து ஆட்டங்களைக் கொண்ட இந்தத் தொடரின் முதல் இரு ஆட்டங்களும் தற்போது முடிவடைந் துள்ளன. முதலாவது ஆட்டம் மழை காரணமாகக் கைவிடப்பட்டது. இரண்டாவது ஆட்டத்தில் இந்தியா வெற்றி பெற்றது. மூன்றாவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது. நாளைய ஆட்டத்திலும் இந்திய அணி வெற்றிபெற்றால் தொடர் அந்த அணியிடம் சென்றுவிடும். எனவே தொடரில் தனது இருப்பைத் தக்கவைக்க இந்த ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற கட்டாயம் தீவுகளுக்கு உள்ளது. (ம)





## கண்ணீர் அஞ்சலி



மண்ணில் 26.02.1942

விண்ணில் 28.06.2017

உதயன் பத்திரிகையாளர்
ந.லோகதயாளனின் அன்புத் தாயார்

திருமதி **நடராசா அற்புதம்**

அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உதயன் குழுமத் தலைவரும் பணியாளர்களும்.

**காணிவிற்பனைக்கு**

மானிப்பாய் மத்திய சந்தைக்கு அருகில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு
076 311 0929

**தொடர்புகொள்ளவும்**

புனர்வாழ்வு பெற்ற பட்டதாரிகளை 05.07.2017 இற்கு முன்பு வேலைவாய்ப்பு தொடர்பாக கலந்தாலோசிப்பதற்கு பா.பாலகுமாருடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
077 267 7372

**SUBRA கல்வி நிறுவனம் - சித்தன்கேணி**
**ஆள்கள் தேவை**

எமது நிறுவனத்தின் நிர்வாக அலுவல்களை மேற்கொள்ள பெண்பிள்ளைகள் தேவைப்படுகின்றனர்.

சுயவிவரங்களை 30.06.2017 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

077 715 7779
071 847 4320 - நிர்வாகி -

தரம் 01 முதல் 05 ஆம் வகுப்பு வரையான பாடங்கள் நடைபெறவுள்ளன.

30.06.2017 இற்கு முன்னராகப் பதிவுகளை மேற்கொள்ளவும்.

077 715 7779
071 847 4320 - நிர்வாகி -

**SUBRA கல்வி நிறுவனம் - வட்டுக்கோட்டை**

தரம் 6 முதல் தரம் 11 வரையான வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.

30.06.2017ஆம் திகதிக்கு முன்னராக பதிவுகளை மேற்கொள்ளவும்.

077 715 7779,
071 847 4320,
077 852 2949 - நிர்வாகி -


## இலங்கை – சிம்பாப்வே இடையே நாளை ஆட்டம் ஆரம்பம்



இலங்கை - சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான ஐந்து ஒரு நாள் ஆட்டங்கள், ஓர் டெஸ்ட் ஆட்டம் ஆகியவற்றைக் கொண்ட தொடர் நாளை ஆரம்பமாகிறது.

சிம்பாப்வே அணி இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. காலியில் நாளைய ஆட்டம் நடைபெறுகிறது. காலை 10 மணிக்கு ஆட்டம் ஆரம்பமாகும்.

ஏனைய நான்கு ஆட்டங்களும் முறையே ஜூலை 2, ஜூலை 6, ஜூலை 8, ஜூலை 10 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளன.

டெஸ்ட் ஆட்டம் கொழும்பு பிறேமதாஸ மைதானத்தில் ஜூலை 14ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.